அமைச்சர்

ஆதித்தனார்

வாழ்க்கை வரலாறு

எழுதியவர்

குரும்பூர் குப்புசாமி

ராணி பதிப்பகம்,

சென்னை-7.

உள்ளே செல்லுமுன்

தமிழகத்தின் கூட்டுறவு, போக்கு வரத்துத் துறைகளின் அமைச்சராகப் பணியாற்றும் திரு. சி. பா. ஆதித்தனரின் வாழ்க்கை, கடந்த 25 ஆண்டுக்கும் மேலாக, தமிழ்மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துகிடக்கிறது.

"உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு" என்ற இலட்சியத்தைக் கொண்ட ஆதித்தனர், உலகெங்கும் பரவிக்கிடக்கும் தமிழ் மக்களை ஒன்றுதிரட்டி, தமிழருக்கு புதிய பொற்காலம் ஒன்றை தோற்றுவிப்பதையே தனது வாழ்க்கைப்பயணமாகக் கொண்டிருக்கிருர். இதற்காக அரசியலிலும், தொழிலாளர்களுக்கும், பத்திரிகைத்துறையிலும் அவர் ஆற்றிவரும் அரும்பணி அளவிட முடியாதது.

இருபத்தைந்து ஆண்டுகளாக தமிழோடு, தமிழ் நாட்டோடு, தமிழ் மக்களோடு இரண்டறக் கலந்துவிட்ட ஆதித்தனரின் வாழ்க்கை வரலாற்றை திரட்டித் தருவதில் மகிழ்ச்சி அடைகிருேம்.

—பதிப்பகத்தார்.

1-4-1969

இது மக்கள் பதிப்பு

விலை 40 காசுதான்

நுழை வாயில்

ஆதித்தனார் பற்றி அறிஞர் அண்ணா	5
பதிப்புரை	8
திருவுளச் சீட்டு	9
நாம்-தமிழர்	19
தமிழ் எழுச்சி	32
முதல் சுதந்திரப்போர்	38
இந்தி எதிர்ப்புப் போர்	46
பாட்டாளியின் கூட்டாளி	52
பத்திரிகையாளர்	64
தினத்தந்தி	74
தனிமைச்சிறை	86
அவைத்தலைவர்	95
ஆதித்தனார்	107
முத்துசரம்	117

ஆதித்தனர் பற்றி

அறிஞர் அண்ணா

மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், சென்ற (1968) ஆகஸ்டு மாதம் நடந்த "தினத்தந்தி" வெள்ளி விழாவிலே ஆற்றிய சொற்பெருக்கின் ஒரு பகுதியை, இந்நூலின் அணிந்துரையாக அளிப்பதில் பெருமை கொள்ளுகிறோம்.

—பதிப்பகத்தார்

நண்பர் ஆதித்தனருக்கு பத்திரிகை நடத்த வேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது? ஏன் வந்தது? என்ற பெரிய ஐயப்பாடுதான் எனக்கு முதலிலே தோன்றியது.

அவர் பார்—அட்—லா படித்தவர். சிங்கப்பூரிலே பாரிஸ்டர் ஆகப் பணியாற்றியவர். நான் சிங்கப்பூரிலே பலபேரை கேட்டதில், அங்கு அவர் பாரிஸ்டர் ஆக இருந்தபொழுது நல்ல வளமான வருவாய் கிடைத்து வந்ததாக அறிந்து கொண்டேன். ஆகவே, அவர் பத்திரிகை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டது, உண்மையிலேயே அவருக்கு பத்திரிகைத் தொழில் இடத்திலேயுள்ள ஆர்வத்தையும், பத்திரிகை மூலமாக தமிழ்நாட்டுக்கு, தமிழ்மொழிக்கு தன்னால் இயன்ற தொண்டாற்ற வேண்டுமென்ற ஆர்வத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

அப்படிப்பட்ட ஓர் எண்ணத்தோடு அவர், சிங்கப்பூரில் இருந்து தமிழகத்திற்குத் திரும்பி, பத்திரிகை நடத்தத் தொடங்கிய நேரத்தில்—எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, "தமிழன்" என்ற வார இதழை அவர் தொடங்கி நடத்த ஆரம்பித்த நேரத்தில்—என்னிடத்திலே பேசியபொழுதுகூட, "தமிழன் என்ற ஒரு பத்திரிகையை மதுரையிலே தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறேன். நல்ல எழுத்தாளர்கள்—தமிழ் எழுத்தாளர்கள்

1964-ல் ஆதித்த
ருக்கு ''சுதந்திரத்
தமிழ் நாடு கேட
யம்'' வழங்கினர்.
(முதலமைச்சர்) கலை
ஞர் மு. கருணாநிதி.

யாரையாவது நீங்கள் அனுப்புவதானால், நான் அவர்களை ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். அனுப்பிக் கொடுங்கள்" என்று கேட்டார். அந்த அளவுக்கு, தமிழ் எழுத்தாளர்களை ஆதரிக்க வேண்டும், அவர்கள் மூலமாக தமிழ் இதழ்கள் நல்ல முறையில் வளர வேண்டும் என்ற எண்ணத்தோடு "தமிழன்" என்ற பத்திரிகையை அவர் தொடங்கினர்.

அவர் பத்திரிகை தொடங்கியது ஒரு குறிப்பிட்ட இலட்சியத்திற்காக, இந்த 25 ஆண்டு வரலாற்றைப் பார்த்தால், அதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அவர் "தமிழன்" என்ற பத்திரிகை தொடங்கியது மட்டுமல்ல. "நாம்—தமிழர் இயக்கம்" என்று, தமிழர்கள் தங்கள் நிலையை தாங்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு—தமிழனின் உரிமைகள் பறிபோகாமல் பாதுகாக்கப்பட வேண்டும்—தமிழ் மொழி வளத்தோடும் வளர்ச்சியோடும் விளங்கவேண்டும் என்ற கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கி, ஓர் இயக்கத்தையும் தொடங்கினர். ஆக, அவரது பத்திரிகைத் தொழிலும், அவரது இலட்சியமும் ஒன்றோடு ஒன்று பிணைந்திருப்பதை நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த இலட்சியப் பணியிலே ஆதித்தனர் சிறையிலே தள்ளப்பட்டதுமல்லாமல், மேலும் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். ஆனால், அந்தக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட நேரத்திலும், மனம் உடைந்து விடுவார் என்று பலர் எதிர்பார்த்த நேரத்திலும், உடல் உடைந்து விட்டது—மனம் ஒன்றுதான் உடைய வேண்டுமென்று மாற்று வட்டாரத்திலே உள்ளவர்கள் எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலேயும், அவர் மனம் உடையாமல், ஒரு பெரிய பொதுத் தேர்தலில் தன்னைத்தானே ஈடுபடுத்திக் கொண்டு, தமிழக மக்களுக்கு ஒரு புதிய அரசு ஏற்பட வேண்டுமென்று அவர் எடுத்துக்கொண்ட தீவிரமான அக்கறையும், ஆர்வமும் தமிழகம் இன்றையதினம் மிக நன்றாக [illegible]ந்திருக்கிறது.

நண்பர் ஆதித்தனர் பாரிஸ்டர் தொழிலில் இருந்து எவ்வளவோ பணத்தைத் திரட்டியிருக்க முடியும். அதிலும் அவர் சிங்கப்பூரிலேயே பாரிஸ்டர் ஆக இருந்திருப்பாரே.

யானால், இப்பொழுது அவருக்கு இருக்கிற வயதுக்கு, அவர் நீதிபதியாகி ஓய்வு பெற்று தமிழகத்துக்குத் திரும்பியிருக்க முடியும். ஆனால், போராடாமல், பணியாற்றாமல், ஒதுங்கி இருக்கிற இயல்பு அவருக்கு இல்லை. அதே விதமான இயல் போடு, 25 ஆண்டுகளாக தமிழக மக்களுடைய நல்வாழ் வோடு அவரது வாழ்வும் பணியும் பிணைக்கப்பட்டு இருக் கின்றன.

இப்படிப்பட்ட சீரிய தொண்டுள்ளம் படைத்த ஆதித் தனார், தமிழ்ப் பத்திரிகை நடத்துவதில் வெற்றி பெற்றி ருக்கிறார் என்பதில் தமிழன் என்ற முறையில் நாம் ஒவ் வொருவரும் பெருமிதம் கொள்ள உரிமை உண்டு. பாரிஸ் டர் தொழிலில் வெற்றி பெற்றாலும் ஆதித்தனார் அதி லிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டதைப் போல, பத்திரி கைத் தொழிலும் வெற்றிபெற்று இதிலிருந்தும் அவர் ஓய்வு பெற்றுக்கொண்டு, அரசியல் தொண்டிலே முழு நேரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள, பத்திரிகையின் அன்றாட நிர்வாகத்தில் அவர் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லாமல், நல்ல முறையிலே அதனை நடத்திச் செல்லத்தக்க திறமையை அவர் குடும்பத்தினர் பெற்றிருக் கிறார்கள். ஆதித்தனார் ஒரு நல்ல அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமல்லாமல், அந்த அமைப்பை நடத்திச் செல்லத்தக்க பிள்ளைகளைப் பெற்றெடுத்தார் என்பது தனிச்சிறப்புக்கு உரியது ஆகும்.

லண்டனில் ஆதித்தனர் படித்தபோது எடுத்த படம். (1932)

1. திருவுளச்சீட்டு

1942 பிப்ரவரி மாதம்!

இரண்டாவது உலகப் போரின் உச்சக்கட்டம்.

இரண்டு மாதமாகவே ஜப்பான்காரனின் குண்டுகள் நாள்தவறாமல் சிங்கப்பூரிலே விழுந்து கொண்டு இருந்தன. இப்பொழுது அது உச்சக்கட்டத்தை அடைந்து இராப்பகலாக குண்டுமாரி பொழிந்தது.

ஜப்பானியப் படைகள் சிங்கப்பூரை நோக்கி அலை அலையாக முன்னேறிக்கொண்டு இருந்தன.

எந்த நேரத்திலும் சிங்கப்பூர் ஜப்பானியர் கையில் விழுந்துவிடும் என்ற நிலை.

சிங்கப்பூருக்குப் பிழைக்கச் சென்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், ஏற்கனவே சிங்கப்பூரை காலி செய்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். விமானம், கப்பல், கார் மூலம் குடும்பம் குடும்பமாக சிங்கப்பூரை விட்டு வெளியேறினார்கள். வண்டி எதுவும் கிடைக்காதவர்கள் கால் நடையாகவேனும் உயிர்காத்துக் கொள்ள சிங்கப்பூரை விட்டுக் கிளம்பினார்கள்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கு ஏற்ப, செந்தமிழ்நாட்டிலே பிறந்து, சீமை எனப்படும் லண்டன் மாநகரிலே பயின்று, சிங்கப்பூரிலே தொழில் நடத்திய ஆதித்தனார் மட்டும், ஜப்பான்காரனின் குண்டுகளுக்கு அசைந்து கொடுத்தார் அல்லர். மனைவி மக்களை மட்டும் தாயகத்திற்கு அனுப்பிவிட்டு, வந்தது வரட்டும்

என்று தொழிலிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அந்நாளில் சிங்கப்பூரில் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த பாரிஸ்டராக ஆதித்தனார் விளங்கினார். அவரின் வருமானம், அந்நாளில் அரசரின் பிரதிநிதியாக இருந்து இந்தியா முழுவதையும் ஆண்ட வைஸ்ராய்களின் வரு மானத்தைவிட அதிகம்! ஆகவே, நிலைத்துவிட்ட ஒரு தொழிலை விட்டுவிட்டுச் செல்ல அவர் தயங்கினார்.

பிப்ரவரி 4-ம் நாள்!

சிங்கப்பூர் ஜப்பானியரின் கையில் விழுவது நிச்சயமாகி விட்டது. இன்னும் ஓரிரு நாளில் சிங்கப்பூரிலே ஜப்பானி யரின் உதயசூரியன் கொடி உயரப்பறப்பதும் உறுதியாகி விட்டது.

திருவுளச்சீட்டு

சிங்கப்பூரிலே ஆதித்தனாருக்கு ஒரு சீன நண்பர் இருந்தார். அவர் ஒரு விமானக் கம்பெனியின் நிர்வாகி. இருவரும் நாள்தோறும் "டென்னிஸ்" பந்து ஆடுவது வழக்கம். அதன் மூலம் நல்ல பழக்கம்.

"இன்று இரவு இந்தியாவுக்கு ஓர் இராணுவ விமா னம் புறப்பட்டுப் போகிறது. அதிலே நீங்களும் போய்விடு கிறீர்களா?" என்று அந்த நண்பர் ஆதித்தனாரிடம் கேட் டார்.

நிரந்தரமாகத் தங்கிவிடும் நோக்கத்துடன் ஆதித் தனார் சிங்கப்பூர் செல்லவில்லையென்றாலும், அங்கே கிடைத்த வருமானம், ஜப்பானியர் ஆட்சி ஏற்பட்டாலுங் கூட, சிங்கப்பூரிலேயே இருந்து தொடர்ந்து தொழிலை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது. மனைவி மக்கள் தமிழ்நாட்டுக்குப் போய்ச் சேர்ந்த பிற கும், தான் மட்டும் இவ்வளவு ஆபத்துக்கு இடையேயும் சிங்கப்பூரிலே இருப்பது சரிதானா என்றும் சிந்தித்தார். இறுதி முடிவு எதற்கும் வரமுடியவில்லை.

"வேண்டாம்; தேவைப்பட்டால், பிறகு பார்த்துக்

கொள்ளுவோம்" என்று சீன நண்பரிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

வீட்டுக்கு வந்ததும், "நாளை இந்தியாவுக்கு ஒரு விமானம் போகிறது. அதிலே எனக்கு இடம் தருவதாக ஒரு நண்பர் சொன்னார். ஆனால், நான் "வேண்டாம்' என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன்" என்று வீட்டில் இருந்த இன்னொரு நண்பரிடம் ஆதித்தனார் தெரிவித்தார்.

"இவ்வளவு நல்ல வாய்ப்பை விட்டு விட்டீர்களே! மனைவி மக்கள் தமிழ்நாட்டுக்குப் போய்ச் சேர்ந்த பின்பு, நீங்களும் அவர்களுடன் போய்ச் சேர்ந்து விடுவது தானே நல்லது?" என்று இந்த நண்பர் சொன்னார்.

ஆதித்தனாருக்கோ ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. கடைசியில், தமிழகத்துக்குப் போவதா, வேண்டாமா என்பதை "திருவுளச்சீட்டு" போட்டுப் பார்க்கலாம் என்று நண்பர் கூறிய யோசனையை ஏற்றுக்கொண்டார்.

அதன்படி "சிங்கப்பூரிலேயே இரு" என்று ஒரு சீட்டிலும், "தமிழகத்துக்குப் போ" என்று இன்னொரு சீட்டிலும் எழுதி, இரண்டு சீட்டுகளையும் குலுக்கிப் போட்டு, ஆதித்தனாரே ஒரு சீட்டை எடுத்தார். பிரித்துப் படித்தார்.

''தமிழகத்துக்குப் போ''
என்று இருந்தது.

ஆதித்தனார் தாயகம் திரும்பி, தமிழ்நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழ்மொழிக்கும் இனிதொண்டாற்ற வேண்டும் என்பது தமிழ்த்தாயின் சித்தம் போலும்.

உடனே சீன நண்பருக்கு ஆதித்தனார் "போன்" செய்து, இந்தியாவுக்கு செல்லும் விமானத்தில் தனக்கும் ஓர் இடம் ஒதுக்கும்படி கூறினார். இடம் ஏற்கனவே நிறைந்து விட்டாலும், விமான நிலையத்துக்கு வந்து விடும்படி நண்பர் சொன்னார்.

ஜப்பானியப் படைகள் நெருங்கிக்கொண்டு இருந்ததால், ஊருக்குள்ளோ, ஒரே கொலை கொள்ளை. அவரவர் கையில் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு ஓடினார்கள். ஊரே காலியாகிக்கொண்டு இருந்தது. வீட்டை விட்டு

வெளியே வரமுடியாத நிலை. தெருக்களில் நின்று கொண்டிருந்த இராணுவத்தினரை சமாளித்துக் கொண்டு ஆதித்தனார் விமானநிலயத்துக்கு வந்து சேர்ந்தார். சீன நண்பர் உடன் இருந்து அவரை விமானத்தில் ஏற்றி விட்டார்.

திசை திரும்பிய விமானம்

4–ம் தேதிக்கும் 5–ம் தேதிக்கும் இடைப்பட்ட நள்ளிரவில், அந்த விமானம் ஆதித்தனரை சுமந்துகொண்டு சிங்கப்பூரை விட்டுக் கிளம்பியது.

5–ம் தேதி இரவு ஜப்பானியர் முழு அளவில் விமானத் தாக்குதல் நடத்தி, 6–ம் தேதி அதிகாலையில் சிங்கப்பூரிலே தங்கள் கொடியைப் பறக்க விட்டார்கள்.

பிப்ரவரி 4–ம் தேதி விமானத்திலே சிங்கப்பூரை விட்டுக் கிளம்பிய ஆதித்தனார், இரண்டு மாதம் கழித்து, ஏப்ரல் 4–ம் நாள் தமிழகத்தை வந்தடைந்தார்! இடைப்பட்ட இரண்டுமாத காலத்தில் அவர் விதியோடு போராடி வெற்றிகாண வேண்டியிருந்தது. பின்னால் அவர் நடத்தவேண்டிய பல போராட்டங்களுக்கு—அவர் ஏற்கவேண்டியிருந்த பல இன்னல்களுக்கு—அவை ஒத்திகைபோல அமைந்தன.

அவர் வந்த விமானம் சிங்கப்பூரை விட்டுக் கிளம்பிய சிறிது நேரத்திலேயே, ஜப்பானியப் போர் விமானங்கள் குறுக்கிட்டன. ஆகவே, அந்த விமானம் நேரே வடக்கு நோக்கி கல்கத்தாவுக்கு வராமல், "திடீர்" என்று திரும்பி தெற்கு நோக்கிப் பறக்கவேண்டியதாகி விட்டது. கடைசியில் ஜாவாவின் (இப்போது இந்தோனேசியா என்று பெயர்) அப்போதைய தலைநகரான "பட்டேவியா"வில் போய் காலையில் இறங்கியது. விமானத்தில் இருந்தவர்களை, அங்கேயே இறக்கி விட்டுவிட்டார்கள்.

சட்டையப்பர்

ஜாவாவில் இருந்து இந்தியாவுக்கு வர ஒரு வசதியும் கிடையாது. போர் முடியும்வரை அங்கேயேதான் தங்கியிருக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. அப்பொழுது சட்டையப்பர் என்ற ஒரு தமிழர் (திருவாரூர்க்காரர்) ஜாவாவில் இருந்தார். இவர் முடி அலங்காரத்



சிங்கப்பூரில் இருந்த போது எடுத்த ஆதித்தனரின் குடும்பப் படம். (1938)

தொழில் நடத்தி வந்தார். ஜாவா இந்தியர் சங்கத்தின் தலைவருமாவார். இவரது ஆதரவில் ஆதித்தனர் இருந்து வந்தார். அவருடைய வீட்டிலேயே விருந்தாளியாகத் தங்கியிருந்தார்.

இந்தியாவுக்கு செல்லும் கப்பலோ, விமானமோ இருந்தால் தனக்குத் தெரிவிக்கும்படி ஜாவாவில் இருந்த இங்கிலாந்து தூதரிடம் ஆதித்தனர் சொல்லி வைத்திருந்தார். ஜாகர்த்தாவில் இருந்து 300 மைல் தூரத்தில் உள்ள "சூரபாயா" என்ற துறைமுகத்தில் சில பிரிட்டீஷ் கப்பல்கள் இருந்தன. ஜப்பானிய கப்பல்படை ஜாவாவைத் தாக்கப் போவதாக தகவல் வந்தது. ஜப்பானிய விமானப் படையோ ஜாவா மீது குண்டுகளைப் பொழியத் தொடங்கிவிட்டது. துறைமுகத்தில் நின்ற பிரிட்டீஷ் கப்பல்களை காப்பாற்றுவதற்காக அவற்றை இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். எனவே, சில கப்பல்கள் இந்தியாவுக்கு விரைவிலேயே கிளம்பிச் செல்ல இருக்கின்றன என்று ஆதித்தனருக்கு தூதர் தகவல் சொன்னர்.

அப்பொழுது ஆதித்தனருக்கு உடல் நலம் இல்லை—காய்ச்சல் அடித்துக் கொண்டிருந்தது. துறைமுகப் பட்டினத்துக்கு செல்ல எவ்வித வண்டி வசதியும் கிடையாது; நடந்தேதான் செல்ல வேண்டும். காய்ச்சலையும் பொருட்படுத்தாமல், சட்டையப்பரிடம் விடை பெற்றுக் கொண்டு ஆதித்தனர் புறப்பட்டு விட்டார். அங்கே மண்ணெண்ணெய்க் கம்பெனி ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த ஆங்கிலேய இளைஞர் ஒருவரும் அவருடன் சேர்ந்து கொண்டார்.

சரக்கு ரெயிலில்

எதற்கும் ரெயில் நிலையத்துக்கு சென்று பார்ப்போம் என்று இருவரும் முதலில் ஜாவா ரெயில் நிலையத்துக்கு வந்தார்கள். ஜப்பானியர் குண்டு வீச்சினல் ரெயில் போக்குவரத்து சீர்குலைந்திருந்தது. "என்றைக்காவது ரெயில் புறப்படும். என்றைக்கு என்பதை இன்றைக்கே சொல்லமுடியாது" என்று தெரிவித்துவிட்டார்கள்.

'ரெயிலுக்காகக் காத்திருந்தால், கப்பல் போய் விடுமே, நடக்க வேண்டியதுதான்' என்று இருவரும் நடக்க ஆரம்பித்தபொழுது,

சரக்குகளை ஏற்றிக் கொண்டு அதே துறைமுகப்பட்டினத்துக்கு ஒரு சரக்கு ('குட்ஸ்') ரெயில் கிளம்பிக் கொண்டு இருப்பதைப் பார்த்தார்கள். 'இந்த ரெயிலிலே தொத்திக் கொள்ள வேண்டியதுதான்" என்று இருவரும் ஓடிச்சென்று, ஓடிக் கொண்டிருந்த ரெயிலிலே ஏறி, சரக்குகளின் மீது அமர்ந்து கொண்டார்கள்!

நடுவழியில் இவர்கள் இருவரையும் ரெயில் ஓட்டி பார்த்து விட்டார். அந்த இடத்திலேயே இருவரையும் இறக்கி விட்டுவிட்டார்!! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல ஆகிவிட்டது!

"இனி என்ன செய்வது?" என்று ஆதித்தனாரிடம் அங்கிலேவை இளைஞர் கேட்டார்.

இந்த ரெயிலை விட்டுவிட்டால், நிச்சயமாகக் கப்பலைப் பிடிக்க முடியாது. ஆகவே, "கொஞ்சம் பொறு" என்று ஆதித்தனார் சொன்னார்.

'குட்ஸ்' ரெயில் மீண்டும் புறப்பட்டுச் சென்றது. ரெயில்லோட்டி சிறிது தூரம் வரை இருவரையும் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே சென்றார். இருவரும் இறக்கிவிடப்பட்ட இடத்திலேயே நின்று கொண்டிருந்தார்கள்.

ரெயில் சற்றுதூரம் சென்றது.

உடனே ஆதித்தனார் "வா" என்று அந்த இளைஞனையும் இழுத்துக் கொண்டு, ரெயில் பாதையிலேயே வேகமாக ஓடி வந்தார். ரெயிலையும் பிடித்து, இருவரும் மீண்டும் ஏறிக் கொண்டார்கள்!!

பட்டினி

ரெயில் சூரபாயா துறைமுகப்பட்டினத்தை அடைந்ததும், ரெயில் ஓட்டிக்குத் தெரியாமலே இருவரும் இறங்கிக் கொண்டார்கள் நேரே துறைமுகத்துக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றார்கள். அங்கே போனால், "கப்பல்கள் புறப்பட இன்னும் இரண்டு நாள் ஆகும்" என்று சொல்லிவிட்டார்கள்.

இருவர் கையிலுமே ஒரு செப்புக்காசுகூடக் கிடையாது. அங்கு செட்டையப்பர் யாருமில்லை. தங்குவதற்கு இடம் தரக்கூட மறுத்தார்;

கள். சாப்பிடுவதற்கு ஒன்றுமே கிடைக்காமல் இருவரும் இரண்டு நாட்கள் பட்டினி கிடந்தார்கள். பகலில் துறைமுகத்திலேயே சுற்றிக் கொண்டு இருந்தார்கள். இரவில் ஜப்பானிய விமானங்கள் வந்து குண்டு வீசின. அந்த ஊரில் குண்டு வீச்சில் இருந்து பாதுகாத்துக் கொள்ள குழிகள் வெட்டப்படவில்லை. ஆகவே, இருவரும் இரண்டு பள்ளத்துக்குள் படுத்துக் கொண்டு இரவைக் கழித்தார்கள்.

மூன்றும் நாள் கப்பல்கள் புறப்படத் தயாராயின. இருவரும் துறை முகத்துக்கு வந்தார்கள்.

துறைமுகத்தில் போர்க்கப்பல்கள் சில. பிரயாணிகள் ஏறும் கப்பல் கள் சிறிதும் பெரிதுமாகப் பல. யானைக்கூட்டம் போல எல்லாம் திரளாக நின்றிருந்தன.

"அதோ, நங்கூரம் பாய்ச்சி நிற்கிறதே, பெரிய கப்பல், அதுதான் பத்திரமாக போய்ச் சேரும். அதில் ஏறிக் கொள்வோம்" என்றான் வெள்ளைக்கார இளைஞன். "ஆம், அதுவே சரி!" என்றார், ஆதித்தனார்.

இருவரும் பெரிய கப்பலிலே ஏறச் சென்றார்கள். கப்பலின் ஏணி யில் ஏறும்போது ஆதித்தனாரின் கால் சருக்கென்று வழுகியது. "ஏறும் பொழுதே தடையாக இருக்கிறதே' என்று தயங்கினார். "நான் இந்தக்கப்பலில் வரவில்லை. வேறு கப்பலில் வருகிறேன்" என்று வெள்ளைக்கார இளைஞனிடம் சொன்னார். "சரி. ஆனால், நான் இந்த கப்பலிலே போகிறேன்" என்று அந்த இளைஞன் கூறினான்.

ஆதித்தனார் அந்தக்கப்பலை விட்டு இறங்கி, வேறு எந்தக் கப்பலில் ஏறுவது என்று சிந்தனை செய்து கொண்டு நின்றார். அப்பொழுது ஒரு சிறிய கப்பலுக்கு மேலே ஒரு கருடன் வட்டமிட்டுக் கொண்டு இருந் தது. அந்தச் சிறிய கப்பலிலேயே ஆதித்தனார் ஏறிக் கொண்டார்.

அந்தக் கப்பலின் மாலுமிகளில் பெரும்பாலோர் சீனர்கள். (கிழக் திசைக் கடல்களில் ஓடும் கப்பல்களில் மாலுமிகளும் எடுபிடிக் கூலி யாட்களும் பெரும்பாலும் சீனர்களாக இருந்தார்கள்.) கப்பல் புறப் பட வேண்டிய நேரத்தில் "வழிநெடுக ஜப்பான் விமானங்கள் குண்டு வீசிக்கொண்டு இருப்பதால், கப்பலை ஓட்டமுடியாது" என்று அவர்

கள் சொல்லிவிட்டார்கள். கப்பல் தலைவர் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இறுதியில் கப்பல் தலைவர் தனது துப்பாக்கியை எடுத்து, "கப்பலை ஓட்டுகிறீர்களா? சுட்டுக் கொல்லட்டுமா?" என்று மிரட்டினார். சிலரை சுட்டும் கொன்றார். அதன்பின்தான் அவர்கள் கப்பலை செலுத்த ஒப்புக் கொண்டார்கள்.

இலங்கையை அடைந்தார்

கப்பல்கள் இலங்கையை நோக்கிப் புறப்பட்டன.

காட்டு யானைகள் கூட்டமாகப் போகும் பொழுது குட்டிகளும் பெண் யானைகளும் நடுவில் நடந்துவர, கொம்பன் யானைகள் முன்னும் பின்னும் இடமும் புறமும் அணிவகுத்து செல்லும். அது போல, சிறிதும் பெரிதுமான பிரயாணிக் கப்பல்களுக்கு முன்னும் பின்னும் இடமும் வலமுமாக நாலாபக்கமும் போர்க் கப்பல்கள் புடை சூழ்ந்து வர, கப்பல்கள் சென்று கொண்டிருந்தன.

எவ்வித ஆபத்தும் இல்லாமல் மூன்று நாட்கள் ஓடின. நாலாம் நாள் காலையில் முன்னோடியாகச் சென்று கொண்டிருந்த போர்க் கப்பலின் தலைவர் ஒரு கட்டளை பிறப்பித்தார்:

"ஜப்பானிய வேட்டை விமானங்கள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இனி நாம் கூட்டமாகச் செல்வது ஆபத்து. கூட்டமாகப் போனால் ஒரு தாக்குதலுக்கு பல கப்பல்கள் பலியாகும். ஆகையால், கப்பல்கள் பலதிசையாகச் சிதறி,வழிகண்ட இடமெல்லாம் சுற்றித்திரிந்து, இலங்கைக்கு வந்து மீண்டும் ஒன்றுகூட வேண்டும். இலங்கையில் சந்திப்போம். வணக்கம்"

இந்தக் கட்டளை கிடைத்ததும், கல் விழுந்த காக்கா கூட்டம் போல, கப்பல்கள் ஒன்றை ஒன்று பிரிந்து சென்றன.

சிறிய கப்பலின் மேல் தளத்தில் ஒட்டுச்சுவர் கைப்பிடியை பிடித்துக் கொண்டு சாய்ந்து நின்றார், ஆதித்தனார்.

பெரிய கப்பலின் வராந்தாவில் கூட்டமாக நின்று கொண்டிருந்த பிரயாணிகளை இடித்துத் தள்ளிக் கொண்டு முன்னணிக்கு ஊடுருவி

வந்து. ஆதித்தனாரை நோக்கிக் கைக்குட்டையை வீசினான், வெள்ளைக் கார இளைஞன்.

டாட்டா!!

கண் மறையும் மட்டும் ஒருவரை ஒருவர் பார்த்து நின்றனர். கண்ணுக்கு எட்டியவரை கைக்குட்டை வீச்சை பார்த்துக் கொண்டே நின்றார், ஆதித்தனார். வெளிக் கண்களில் இருந்து இந்த கைக்குட்டை வீச்சு மறைந்தாலும், அவருடைய மனக்கண்ணில் இருந்து இன்றளவும் இது மறைந்திருக்க முடியாது. இன்று நினைத்துக் கொண்டாலும் அவர் [redacted] கலங்கிவிடுவது உண்டு.

ஆதித்தனார் வந்த சிறிய கப்பல் ஆஸ்திரேலியா அருகேவரை சென்று சுற்றி, 29 நாள் பயணத்துக்குப் பின் இலங்கையை தன்னந் தனியே வந்து அடைந்தது. இந்த 29 நாளில் அவர் பட்ட துன்பத்தை சொல்லிமுடியாது. 29 நாட்களும் உண்ணாவிரதம் இருக்க நேரிட்டது. முதல் 25 நாட்கள் பகலில் ஒருவேளை மட்டும் அவித்த உருளைக்கிழங்கு கொடுத்து வந்தார்கள். கடைசி நான்கு நாட்கள் முழுக்க முழுக்கப் பட்டினி கிடக்க வேண்டியதாகிவிட்டது.

ஏப்ரல் 2–ம் நாள் ஆதித்தனார் இலங்கையை அடைந்தார். கப்பலை விட்டுக் கரையில் இறங்கியதுமே, தன்னுடன் வழித்துணையாக வந்த அந்த வெள்ளைக்கார இளைஞன் வந்து சேர்ந்தாரா என்றுதான் விசாரித்தார். வழியிலேயே ஜப்பான் குண்டுக்கு அக்கப்பல் பலியாகி விட்டது என்பதையும், அந்த இளைஞனும் மாண்டுவிட்டார் என்பதையும் அறிந்து கண்ணீர் விட்டார்.

இலங்கையில் ரெயில் ஏறி, ஏப்ரல் 4–ம் நாள் தாயகத்தை அடைந்தார்.

2. நாம் தமிழர்

"உடல் மண்ணுக்கு!

உயிர் தமிழுக்கு!''

என்று முதல் முழக்கம் செய்தவர், ஆதித்தனர். இதையே தனது வாழ்க்கையின் நோக்கமாகவுங் கொண்டார்.

"தமிழ்ப் பேரரசு மீண்டும் தழைக்க வேண்டும்—இமயத்திலே பொறிக்கப்பட்ட தமிழ்க்கொடி மீண்டும் பறக்க வேண்டும்—தமிழர் கப்பல் உலகை வலம் வரவேண்டும்—தமிழோசை உலகெங்கும் ஒலிக்க வேண்டும்—செந்தமிழ் செழித்த பொற்காலமாம் நற்காலம் மீண்டும் தோன்ற வேண்டும்' என்பதே ஆதித்தனர் கண்ட கனவு

இந்த நோக்கம் ஈடேற வேண்டுமானல், தமிழகத்திலும் இலங்கையிலே, மலேயாவிலே, சிங்கப்பூரிலே, ஆப்பிரிக்காவிலே, பிஜித்தீவிலே, மோரீஸ் நாட்டிலே, மேற்கு இந்தியத் தீவுகளிலே, இன்னும் உலகின் எட்டுத்திக்கிலும் சிதறிக் கிடக்கும் தமிழர்களெல்லாம் ஒன்று சேர வேண்டும் என்று கருதினர். இதற்காகவேதான் "நாம் தமிழர்" என்ற இயக்கத்தைத் தொடங்கினர்.

"வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்! அன்னர் உள்ளத்தால் ஒருவரே மற்(று) உடலினல் பலராய்க்காண்பார்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடிய கருத்தைப் பரப்பி, உடலினல் பலராய் இருக்கும் உண்மைத் தமிழரை உள்ளத்தால் ஒன்றுபடுத்துவதே "நாம் தமிழர்" இயக்கம்.

"தமிழர் ஓர் இனம் என்பதை நாம் மறந்ததால் அறுநூறு ஆண்டு

''நாம் தமிழர்'' இயக்கக் கூட்டத்தில் பாவேந்தர் பாரதிதாசனும், ஆதித்தனாரும் (1958)

களுக்கு முன் மாற்ருனுக்கு அடிமையானேம். கடந்த ஆறு நூற்ருண்டு களாக நம் அடிமைத்தளை அறுபடவில்லை. ஆந்திரர்களுக்கும், பின் உருதுக்காரர்களுக்கும், பின் ஆங்கிலேயர்களுக்கும், இன்று இந்திக் காரனுக்கும் அடிபணிந்து கிடக்க நேரிட்டிருக்கிறது." என்று ஆதித்தனரே கூறியிருக்கிருர். ("தாயின் மேல் ஆணை" நூலின் முன்னுரை.)

படித்த போதே

முட்டையில் இருந்து கொட்டப்பட்ட நெல்லிக்காய் போல நாலா திசையிலும் சிதறிக்கிடக்கும் தமிழர்கள், ஒன்றுபட வேண் டும்; ஒன்றுபட்டாலே உண்டு வாழ்வு; ஒற்றுமை குலைந்ததாலேயே உண்டானது தமிழர்க்குத் தாழ்வு என்பதை, லண்டனில் படித்துக் கொண்டிருந்த பொழுதே ஆதித்தனர் உணர்ந்தார்.

அங்கே அவருடன் மோரீஸ் தீவைச் சேர்ந்த ஒருவரும் படித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் இருவரும் சந்தித்துக் கொண்டபொழுது, ஆதித்தனரை தமிழரென அறிந்து கொண்ட அவர், தமிழிலேயே பேசினர். அதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட ஆதித்தனர், "நீங்கள் தமிழரா?" என்று வியப்புடன் கேட்டார்.

"ஆமாம். நான் தமிழன்தான். மோரீஸ் தீவில் தமிழர்கள்தான் பெரும்பான்மையாக வாழுகிருர்கள். ஆனல், கரும்புத் தோட்டங் களிலே கூலிகளாகவும், அடிமைகளாகவும் இருக்கிருர்கள்" என்று மோரீஸ் தீவுக்காரர் கூறினர்.

'ஆண்ட இனம் அடிமையாக வாழ்வதா? சிதைந்து போனதால் அல்லவா சீர் இழந்தோம்? ஒன்று பட்டால்தானே மீண்டும் உயர்வு அடைய முடியும்? 'நாம் தமிழர்' என்ற இன உணர்ச்சி ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்பட்டால் அல்லவா ஒன்று சேர முடியும்?' என்று அன்றே எண்ணிவிட்டார், ஆதித்தனர்.

மகாபாரதம்

"ஒருமொழி—ஒருநாடு" என்ற கருத்தை அப்பொழுதே ஆதித்த னர் வற்புறுத்தி வந்தார்.

1962-ல் அசாம் மாநில கவர்னராக இருந்த விஷ்ணுசகாய, இங்கிலாந்தில் ஆதித்தனுருடன் படித்தவர். இளைஞர்களாக இருவரும் ஒன்ருகப் படித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே ஒருநாள், ஆதித்தனரிடம், "ஒருமொழி—ஒருநாடு என்கிறீர்களே, பாரதம் ஒரே நாடு இல்லையா?" என்று சகாய் கேட்டார்.

"பாரதமா? 'மகாபாரதம்' என்ற கதை படித்திருக்கிறேனே தவிர, 'பாரதம்' என்று ஒரு நாட்டுக்கு பெயர் இருப்பதாக நான் கேள்விப்பட்டதுகூட இல்லை" என்ருர், ஆதித்தனர்.

சுதந்திரத் தமிழ்நாடு

சிங்கப்பூரில் தொழில் நடத்திக் கொண்டிருந்த காலத்திலும் இதே எண்ணம் அவர் உளத்தில் வளர்ந்து வேரூன்றியது. சிங்கப்பூரில் நடந்த பல தமிழர் கூட்டங்களிலும் தமிழர் ஒன்றுபட வேண்டிய தேவையையும், தமிழ்ப் பேரரசு தழைக்க வேண்டிய காரணத்தையும் விளக்கிக் கூறி வந்தார்.

1937-ல் சிங்கப்பூர் சிராங்கூன் சாலையில் நடந்த கூட்டமும் அத்தகைய கூட்டங்களில் ஒன்று. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட வே.வாசுதேவன், பின்னல் தமிழகத்துக்குத் திரும்பி, தஞ்சை மாவட்டம் சொரக்குடி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவர் 8-7-1958-ல் "நாம் தமிழர்" இயக்கத் தலைமை நிலையத்திற்கு எழுதிய ஒரு கடிதம் இங்கு குறிப்பிடத்தக்கது:—

"மன்னர்குடி மாநாட்டுக்கு வந்திருந்தேன், நானும், தங்களுடையவும் தந்தை பெரியார் அவர்களுடையவும் கருத்து நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டேன்.........

1942க்குப்பின்தான் 'சுதந்திரத் தமிழ்நாடு' எனத் தாங்கள் கூறத் தொடங்கியதாகத் தந்தை பெரியார் அவர்கள் கூறினர்கள். 'இல்லை! இல்லை! நான் சிங்கப்பூரில் 1936லிருந்து 1942 வரையில் இருக்கும் பொழுது, சிங்கப்பூர் சிராங்கூன் சாலையில் கோ. சாரங்கபாணி அவர்கள் தலைமையில் நூறு பேர்கள் கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றில் சி. பா. ஆதித்தனர் அவர்கள் தனித் தமிழ்நாடு

அமைய வேண்டும் எனக் கூறியது எனக்குந் தெரியும்' என்று கூறிவிட மாநாட்டு மேடைக்கு வரத் துடித்தேன். நண்பர்கள் தடுத்து விட்டார்கள்.

"தனித் தமிழ்நாடு" என்ற பித்து 1937லேயே உங்களுக்கு உண்டு!!"

(1937லேயே தனித்தமிழ்நாடு என்ற "பித்து" ஆதித்தனுருக்கு உண்டு என்று தெரிவித்த வே. வாசுதேவன், தஞ்சை மாவட்ட திராவிடக்கழகக் கமிட்டி உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.)

1939—ல் ஒருமுறை சிங்கப்பூரில் இருந்து ஆதித்தனுர் தமிழகத்துக்கு வந்தார். "தமிழ்நாடு தமிழருக்கே" என்று ஈ. வெ. ரா. பெரியார் முழக்கமிட்டுக் கொண்டு இருந்த காலம். அது. கப்பலை விட்டு இறங்கியதும், நேரே அவரைக் காணத்தான் சென்ருர், ஆதித்தனுர். திருக்கழுக்குன்றத்தில் நடந்த மாநாட்டிலே பெரியார் இருந்தார். அங்கு சென்று பெரியாரைப் பார்த்து, தனித் தமிழ் நாடு பற்றிய கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்.

காந்தியைப் போல

சிங்கப்பூரில் இருந்து தங்கத் தமிழகத்துக்கு திரும்பியதுமே தனித் தமிழ்நாடு பெற தன்னை முழு நேர முதல் தொண்டனுக்கிக் கொண்டார், ஆதித்தனுர். சொந்த வாழ்க்கை போதும். இனி பிறந்த மண்ணுக்கு நம்மால் இயன்றதைச் செய்வோம் என்று தீர்மானித்தார். பெருவருமானம் கொடுத்துக் கொண்டிருந்த பாரிஸ்டர் தொழிலை மூட்டைகட்டி வைத்தார்.

இந்த வகையில், இந்தியாவுக்கு விடுதலை தேடித்தந்த மகாத்மா காந்தியுடன் ஆதித்தனுரை ஒப்பிடலாம். காந்தியும் லண்டனுக்கு சென்று படித்தவர்; பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்; கடல் கடந்து சென்று தென் ஆப்பிரிக்காவிலே வழக்கறிஞர் தொழில் நடத்தியவர்; இந்தியாவுக்குத் திரும்பியதும், தொழிலுக்கு—சொந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, முழுக்க முழுக்கத் தன்னை விடு தலை இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

தனித் தமிழ்நாடு என்ற எண்ணங் கொண்டவர்களை ஒன்றுசேர்க்கவும், இக்கொள்கையை நாடெல்லாம் பரப்பவும் ஓர் அமைப்புத் தேவை என்று ஆதித்தனர் கருதினர். இதற்காக 1942-ம் ஆண்டிலேயே "நாம்-தமிழர்" இயக்கத்தைத் தொடங்கினர்.

இதன் முதல் மாநாடு சென்னையில் உள்ள செயிண்டு மேரீஸ் மண்டபத்தில் நடந்தது. இம்மாநாட்டுக்கு செந்தமிழ் சிங்கம் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமை தாங்கியது குறிப்பிடத்தக்கது. பெண்கள் விடுதலைக்குப் பெரும் பணியாற்றி வந்த டாக்டர் எஸ். தர்மாம்பாள், மேடைக்கு வந்து, தனித் தமிழ்நாட்டுக்காக பெண்களின் பெரும்படையைத் திரட்டித்தரத் தயார் என்று உணர்ச்சி பொங்க அறிவித்தார்.

வெள்ளையனே வெளியேறு!

"நாம்-தமிழர்" இயக்கம் தொடங்கப்பட்ட அதே 1942-ம் ஆண்டில்தான் "வெள்ளையனே வெளியேறு" என்ற பெரும் போராட்டத்தை காந்தியார் தொடங்கினர். இந்தியாவின் விடுதலை முயற்சிக்கு, தனித் தமிழ்நாடு முயற்சி முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாதே என்ற எண்ணத்தினல், "நாம்-தமிழர்" இயக்கம் செயல்படுவதை ஆதித்தனர் நிறுத்திவைத்தார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.

''சுதந்திரத் தமிழ்நாடு'' என்ற கோரிக்கையை இன்றைக்குப் பதினறு ஆண்டுகளுக்கு முன்பே கூறினேன். ஆனல், வெள்ளைக்காரரிடம் இருந்து விடுதலை பெறுவதற்கு விரோதமாக தமிழ் நாட்டு விடுதலை முயற்சி இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்பொழுது இந்த முயற்சி நிறுத்தப்பட்டது.''

(26-7-58 அன்று நெல்லையில் நடந்த கூட்டத்தில் ஆதித்தனர்.)

நேதாஜி அமைத்த இந்திய தேசியப்படையினருக்கு (ஐ.என்.ஏ.) உதவி செய்ய இந்தியாவில் "இந்திய தேசியப்படை மீட்புக்குழு" அமைக்கப்பட்டது. அதன் செயலாளராக ஆதித்தனர் இருந்தார். 1945-ல் மலாயாவுக்கு சென்று, வீரத்தளபதி லெட்சுமியை சந்தித்தார்.



ஆதித்தனருக்கு வீரவாள் பரிசு அளிக்கிறார், தமிழ்வாணன். (1959)

இந்திய தேசியப்படையினருக்கு அன்புக் காணிக்கையாக தனது தங்க மோதிரத்தை ஆதித்தனாரிடம் கொடுத்தனுப்பினர். லெட்சுமி!

சுதந்திரப்போராட்டம் உச்சகட்டத்தில் இருந்த பொழுது, ஆதித்தனாரும் இப்படையைச் சேர்ந்தவர் என்று நினைத்து, அவர் வீட்டைவிட்டு வெளியே வரக்கூடாது என்று கன்னிங்காம் என்ற வெள்ளைக்கார போலீஸ் அதிகாரி தடை விதித்தார். ஆதித்தனார் தடையை மீறினர். ஆகவே கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப் பட்டார்.

"நாம்-தமிழர்"

1947 ஆகஸ்டு 15-ல் இந்தியாவுக்கு சுதந்திரம் வந்தது.

அதன்பின் பத்தாண்டுகள் ஆகியும் தமிழர்களுக்கு உண்மையான உரிமைகள் கிடைப்பதாக இல்லை. அதற்குப் பதில் டெல்லி ஆதிக்கமும், இந்தி ஏகாதிபத்தியமும் தமிழகத்தில் தங்கள் தளைகளை இறுக்கிக் கொண்டு வந்தன. தமிழ்நாடு ஒன்று சேர்வதற்கு மாருக, துண்டுபட்டு, பாண்டிச்சேரி தனியே, தேவிகுளம்—பீர்மேடு கேரளாவுக்கு, திருப்பதி ஆந்திராவுக்கு என்று சிதைந்து கொண்டு வந்தது.

பார்த்தார் ஆதித்தனார். இனிப் பொறுத்து பயனில்லை என்பதைக் கண்டு கொண்டார். தமிழர்கள் உரிமைக்குரல் எழுப்பினால் தவிர, தமிழகத்துக்கு சுதந்திரம் கிடைக்காது என்பதை உணர்ந்தார். ஆகவே, 1942-ல் நிறுத்திவைத்த தனித் தமிழ்நாடு இயக்கத்தை 1958-ல் மீண் டும் தொடங்கினர். "நாம்—தமிழர்" இயக்கம் செயல்படத் தொடங்கி யது.

இதன் அமைப்புக் கூட்டம் 1958 பிப்ரவரி 9-ம் நாள் சென்னையில் நடந்தது. "தனித் தமிழ்நாடு" என்ற நோக்கத்தில் விருப்பமுள்ள வர்கள் எல்லாம் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆதித்தனர் அழைப்பு விடுத்தார். "தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரம், மொழி, எல்லை, ஆகியவற்றைப் பார்க்கும் பொழுது, தமிழ்நாடு சுதந்திர நாடாக இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்

கிறது" என்று அழைப்பில் குறிப்பிட்டு இருந்தார்

தமிழ்நாடு முழுவதும் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட தமிழார்வமுள்ள பிரதிநிதிகள் இந்த அழைப்பை ஏற்று சென்னையில் கூடினார்கள். பாவேந்தர் பாரதிதாசன் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

சுதந்திரத் தமிழ்நாடு வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் ஒன்றுகூடி "நாம்-தமிழர்" இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 41 பேர்களைக் கொண்ட அமைப்புக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆதித்தனாரை தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

"தமிழர்களின் உரிமையைக் காப்பதிலும், இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் முன்னணிப் படையாக 'நாம்-தமிழர்' இயக்கம் செயல்பட்டுவரும்" என்று அந்தக் கூட்டத்தில் ஆதித்தனார் அறிவித்தார்.

"தாயின் மேல் ஆணை! தந்தை மேல் ஆணை! தமிழக மேல் ஆணை! தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே நான் தோழரே உரைக்கின்றேன்: நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதை நான் கண்டே, ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி உழைத்திட நான் தவறேன். ஆன என் தமிழர் ஆட்சியை நிறுவ அல்லல்கள் வரின் ஏற்பேன். ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு உவப்புடன் நான் சேர்ப்பேன்" என்ற பாரதிதாசனின் பாடலுடன் அமைப்புக் கூட்டம் முடிந்தது

நான் ஒரு சேவல்

சுதந்திரத் தமிழ்நாடு என்ற கோரிக்கை இந்தியாவெங்கும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. "தீயுடன் விளையாட்டுப் போல முடியும்" என்று "இந்து" (The Hindu) பத்திரிகை தலையங்கம் எழுதியது. "தமிழ் நாட்டில் உள்ள துரோகிகள் பகிரங்கமாக சதி செய்கிறார்கள். 'சுதந்திரத் தமிழ்நாடு' என்று கேட்பது, இந்திய அரசின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிப்பது ஆகும் இந்த சதிக் கூட்டத்தை உடனே சிறையில் அடைத்து அவர்களின் பைத்தியக்

காரத்தனத்தை அடக்க வேண்டும்” என்று பம்பாயில் இருந்து வெளி வரும் புகழ் பெற்ற “பிளிட்ஸ்” என்ற பத்திரிகை சீறிப்பாய்ந்தது!

தமிழ் நாட்டிலேயே பல முன்னணி காங்கிரஸ் தலைவர்களும் அமைச்சர்களும் “சுதந்திரத் தமிழ்நாடு” கோரிக்கையை எதிர்த்தார்கள். ‘தமிழ்நாடு தனித்து வாழ முடியுமா? குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல ஆகாதா? காவிரி ஆறு என்ன ஆவது?’ என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள்.

அவர்களுக்கு ஆதித்தனர் ஆணித்தரமாக பதிலளித்தார். “தமிழ் நாட்டை விட குறைந்த மக்கள் தொகை கொண்ட 75 நாடுகள் தனிக் கொடியுடன் தனிப் படையுடன் சுத்த சுதந்திரத்துடன் வாழ்கின்றன. உலக நாடுகள் சபையிலும் உறுப்பினர்களாக இருக்கின்றன. தேயிலைக் கோப்பைக்குள்ளேயே குதிரை ஓட்டும் பொழுது, குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்ட முடியாதா!” என்று விளக்கம் கூறினர்.

“தமிழ்நாடு 600 ஆண்டுகள் வாழ்வதும் அடுத்த 600 ஆண்டுகள் தாழ்வதும், அதன்பின் மீள்வதுமாக வந்திருக்கிறது. இது தமிழகத்தின் காலவட்டம். அதன்படி, அடிமை நீங்கி, தமிழர்கள் மீளவேண்டிய—ஆளும் சுதந்திரத்துடன் வாழவேண்டிய பொற்காலம் பிறக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. பொழுது விடியப் போகிறது என்பதைத் தெரிவிக்கும் சேவல்தான் இந்த ‘நாம்—தமிழர்’ இயக்கம்” என்று ஆதித்தனர் தெளிவுபடுத்தினர்.

தமிழப் பேரரசு

தனித் தமிழ்நாடு ஏன் தேவை என்பதை விளக்கியும், அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகளுக்குப் பதில் அளித்தும் “தமிழப் பேரரசு” என்ற நூலை எழுதி வெளியிட்டார். “ஒரு மொழிக்கு ஒரு நாடு” என்பதே உலக நீதி என்பதை இதில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். பட்டி தொட்டியெங்கும் சென்று தனித் தமிழ்நாடு கொள்கையையும், தமிழர் வாழ்ந்த கதையையும், தனித் தமிழ்நாடு இல்லாத காரணத்தால் அடிமையாகத் தாழ்ந்து அனுபவிக்கும் வதையையும், சுதந்திரம் பெறவேண்டிய அவசியத்தையும் எடுத்துச் சொன்னர்.

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது!
சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர்கள் நடுங்கிப்
புலி என செயல் செய்ய புறப்படு வெளியில்
சிங்க இளைஞனே திருப்பு முகம்! திற விழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென்பார் எனில்,
வழி வழி வந்த உன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற்றெங்கே? விழிப்புற்றெழுக!"

என்று ஊர் தோறும் போர்ப்பரணி பாடினர்!

"உலகாள உனது தாய் மிக உயிர்வாதையடைகிருள்; உதவா தினி ஒரு தாமதம் உடனே விழி தமிழா!" என்று தட்டி எழுப்பினர்.

"கொலைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே குகைவாழ் ஒருபுலியே உயர்குணம் மேவிய தமிழா!" என்று கொட்டி முழக்கினர்.

மாணவர் ஆதரவு

தனித் தமிழ்நாடு என்ற கொள்கை காட்டுத்தீ போல மக்களிடையே பரவியது. குறிப்பாக மாணவர்களையும், இளைஞர்களை யும் கவர்ந்தது. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல, தமிழ் நாட்டிலேயே பெரிய கல்லூரியான திருச்சி ஜோசப் கல்லூரியில் நடந்த ஒரு வாக்கெடுப்பே இதற்கு சிறந்த சான்ருகும்.

திருச்சி ஜோசப் கல்லூரி மாணவர் இடையே "சுதந்திரத் தமிழ் நாடு வேண்டுமா? வேண்டாமா?" என்பது பற்றி பேச்சுப் போட்டி நடந்தது. தமிழ்ப் பேராசிரியர் ஐயன்பெருமாள் கோனர் இதற்குத் தலைமை தாங்கினர். போட்டி முடிவில் மாணவர் இடையே வாக் கெடுப்பு நடந்தது. அதன் முடிவு:

சுதந்திரத் தமிழ்நாடு தேவை:— 163 வாக்கு.

தேவையில்லை:— 152 வாக்கு.

இதே ஜோசப் கல்லூரியில்தான் ஆதித்தனார் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்துக்கு நற்கொலை!

டெல்லி ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்ட தமிழ் நாட்டில் வாழ விரும்பாமல், வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கலவை என்ற கிராமத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் என்ற இளைஞர், ஆதித்தனாருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு, ரெயில் முன் விழுந்து, இந்த உலகத்தில் இருந்தே விடுதலை பெற்றுக் கொண்டார்.

"டெல்லியின் பிடியில் இருந்து விடுபட்டு, சுதந்திரத் தமிழ்நாடு பிரிந்து வாழ வேண்டும். இதுவே என் கடைசி ஆசை" என்று ஆதித்தனாருக்கு எழுதி வைத்திருந்த கடிதத்தில் கமலக்கண்ணன் குறிப்பிட்டிருந்தார்.

தனித் தமிழ்நாடு என்ற கொள்கை பட்டிதொட்டிகளிலும் விரைந்து பரவியது என்பதற்கு மட்டுமல்ல; இளைஞர்களின் உள்ளத்தில் ஆழமாக அந்த எண்ணம் வேரூன்றியது என்பதற்கும் கமலக்கண்ணன் ஓர் எடுத்துக்காட்டாவார்.

பெரியார் பாராட்டு

"தேசியவாதிகள் என்பவர்கள் எல்லாம் சொந்த நாட்டின் சுதந்திரத்தைப்பற்றி நினைக்காமல், வயிறு வளர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். நாம் தமிழர், நமது நாடு தமிழ்நாடு, தமிழ்நாட்டுக்கு சுதந்திரம் வேண்டும் என்று தைரியமாகச் சொன்னவர் ஆதித்தனாரும் அவருடைய கட்சியும்தான்" என்று ஈ. வெ. ரா. பெரியாரே பாராட்டினார்.

தனித் தமிழ்நாடு ஏன் வேண்டும் என்பதை விளக்கி "தினத்தந்தி"யில் ஆதித்தனார் தலையங்கங்கள் எழுதினார். அதைப் பற்றி தி. மு. கழகத்தின் அதிகாரப்பூர்வமான நாளிதழான "மும்முனை" 2-1-58 இதழில் கீழ்க்கண்டவாறு எழுதியது:—

"தோழர் ஆதித்தன் அவர்கள் மிக நல்ல தருணத்தில் இந்தக் கருத்தைத் தமது இதழ் மூலம் தமிழகத்துக்குத் தந்துள்ளார்.

'தினத்தந்தி'யில் இது போன்ற கருத்து வருவது கண்டு எவரேனும் வியப்படைவார்களானல், அவர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறோம். தோழர் ஆதித்தன் அவர்கள் நீண்ட நாட்களுக்கு முன்பே கடல் கடந்த நாட்டில் இருந்து கன்னித்தமிழகம் வந்தபோது நாம்-தமிழர் இயக்கம் தொடங்கியவர்.

இப்போது அவர் இதழ் தரும் தலையங்கம், நமக்குப் புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் தருகிறது."

3. தமிழ் எழுச்சி

தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ்மக்கள் என்றெல்லாம் சொல்லுகிறோமே, எப்படி, எதை ஆதாரமாகக் கொண்டு?

"தமிழ்"தான் அதற்கு ஆதாரம்.

'தமிழ்' என்பதில் இருந்தே தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் மக்கள் என்பவையெல்லாம் பிறக்கின்றன. தமிழைப் பேசுகிறவர்கள், தமிழர்கள். தமிழ் வழங்கும் இடம், தமிழ்நாடு. 'தமிழ்'' என்ற எண்ணம் இருந்தால்தான், நாம்—தமிழர், நமது மொழி தமிழ்மொழி,நமது நாடு தமிழ்நாடு என்ற நினைப்பு மக்களுக்கு ஏற்படும்.

ஆகவே, 'தமிழ்! தமிழ்! தமிழ்!'' என்ற வெறியை—விருப்பத்தை மக்களிடையே பரப்ப—நிரப்ப ஆதித்தனர் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார். அவரது பேச்சிலும் மூச்சிலும் தமிழே இழையோடியது.

மொழிப்பற்று

ஐரிஷ் நாட்டின் விடுதலைப் போராட்ட வீரன், "டிவேலரா." மொழிப்பற்று இருந்தால்தான் மக்களுக்கு இனப்பற்று நாட்டுப் பற்று ஏற்படும் என்பதை உணர்ந்து கொண்ட இவர், கிரிபெத் என்ற அறிஞரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, முதலில் மக்களிடம் மொழிப்பற்று ஏற்பட வழி செய்தார்.

இதே வழியைத்தான் ஆதித்தனரும் பின்பற்றினர். "நாம்—தமிழர்" என்று பெயர் சூட்டியதுகூட டிவேலராவைப் பின்பற்றித்தான்!] ஐரிஷ் நாட்டின் விடுதலை இயக்கத்துக்கு "சின்பின்" என்று "டிவேலரா" பெயர் வைத்திருந்தார். இதற்கு "நாம்—ஐரிஷ் மக்கள்" (We Irish) என்று அவர்கள் மொழியில் பொருள்.

தமிழ் என்னும் உணர்வு வளரும் நாளே தமிழர் ஆட்சி மலரும் நாள் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் கூறுகிறரே! "தமிழ் என்னும் உணர்வினைச் சேரடா எங்கும், தமிழரின் ஆட்சியே உலகெல்லாம் தங்கும்" என்பது அவர் வாக்கு. தமிழரின் உரிமைக்கு தமிழே ஆணிவேர் ("தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்") என்பதும் கவிஞரின் கருத்து.

எனவே, இயன்ற எல்லா வழிகளிலும் "தமிழ்" என்ற எண்ணத்தை ஆதித்தனர் பரப்பினர். தமிழ் மக்கள் தங்கள் தலைப்பு எழுத்துக்களை தமிழிலேயே எழுத வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததுடன், தானே "எஸ். பி." என்று இருந்த தலைப்பு எழுத்துக்களை "சி. பா." என்று மாற்றி வழிகாட்டினர்.

அவர் தொடங்கிய முதல் பத்திரிகைக்கு "தமிழன்" என்றுதான் பெயர்!

தமிழ்க்கொடி

"நாம்–தமிழர்" இயக்கத் தலைமை நிலையத்திற்கு "தமிழர் இல்லம்" என்று பெயர் சூட்டினர்.

இயக்க வார இதழ், "தமிழ்க் கொடி"

இயக்க வெளியீடுகளை அச்சிட்டு வெளியிட்டது, "தமிழ்த்தாய் பதிப்பகம்."

"நாம்–தமிழர்" இயக்கத்தின் துணை அமைப்புகளுக்கு "இளந் தமிழர் மன்றம்" என்றும் "மகளிர் தமிழ் மன்றம்" என்றும் பெயரிடப்பட்டன.

தனித் தமிழ்நாடு கோரிக்கையை வற்புறுத்தி எழுதிய நூல், "தமிழப் பேரரசு."

தமிழ் எழுச்சிமிக்க பாரதிதாசனாரின் பாடல்களைத் திரட்டி "தாயின் மேல் ஆணை" என்ற பெயரில் சிறு நூலாக வெளியிட்டார்.

தமிழக வணிகர்களைத் திரட்டி தமிழக வணிகர் சபை (தமிழ் சேம்பர் அப் காமர்ஸ்) அமைக்க முன்னணியில் நின்றவர் ஆதித்தனார் தான்.

காவடி, கரகம் போன்ற தமிழர் களியாட்டங்களுக்குப் புத்துயிர் அளித்தார். அவற்றுக்கு "தமிழர் கலையாட்டம்" என்று பெயர் சூட்டி நாடெங்கும் நடத்தினார்.

சடுகுடு

சடுகுடு ஆட்டத்திற்கு "தமிழர் விளையாட்டு" என்று பெயர் வைத்தார். ஊரெங்கும் சடுகுடு போட்டிகள் நடத்தி, தமிழ் இளைஞர்களையும், பெண்களையும் நல்ல உடல்கட்டு உள்ளவர்களாகச் செய்தார். தாம்பரத்தில் சடுகுடு ஆட்டத்தை தொடங்கி வைத்த பொழுது, ஆதித்தனரே சடுகுடு ஆடினார்!

தமிழ் உழவர்களுக்கு உறுதுணையாகக் கோழிப்பண்ணைகள் அமைத்துக் கொடுத்தார். அவற்றுக்கு "தமிழன் கோழிப்பண்ணை" என்று பெயர் சூட்டினார்.

"விடுதலை இயக்கத்துக்கும் கோழிப்பண்ணைக்கும் என்ன தொடர்பு?" என்று சிலர் கேலி பேசினார்கள். "கோழி முட்டையைக் கொண்டே டெல்லிக்காரனை அடித்து விரட்டுவோம்" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னார், ஆதித்தனார்.

தமிழ் நாட்டிலேயே கிடைக்கும் மரக் கூழ்களைக் கொண்டு கையினால் தயாரிக்கப்படும் காகிதத்துக்கு "தமிழன் தாள்" என்று பெயர் வைத்தார்.

நாம்—தமிழர் தொண்டர்கள் நீலநிற சட்டை அணிந்து கொள்ள வேண்டும் என்பது இயக்க விதி. இச்சட்டையும் "தமிழன் துணி"யினால் நெய்க்கப்பட வேண்டும் என்றார், ஆதித்தனார். ஈரோட்டில் இதற்காக "தமிழன் துணி" தொழிற்சாலையை தொடக்கி வைத்தார். "தமிழ் நாட்டுப் பஞ்சு—தமிழ் நாட்டில் செய்த எந்திரம்—தமிழ் நாட்டு

நெசவாளியின் உழைப்பு ஆகியவற்றில் உருவானதுதான் "தமிழன் துணி" என்று கூறினர்.

தமிழன் கால்வாய்

சேதுக்கால்வாய் வெட்டப்பட்டு, தூத்துக்குடி துறைமுகம் விரிவு படுத்தப்பட்டால், தமிழ் நாட்டின் 'சூயஸ்' ஆக சேதுக்கால் வாய் விளங்கும் என்பதை உணர்ந்த ஆதித்தனர். அக்கால்வாய்க்கு "தமிழன் கால்வாய்" என்று பெயர் சூட்டினர்.

தான் கலந்து கொண்ட இயக்கக் கூட்டங்களை "நாம்—தமிழர் நாம்—தமிழர் நாம்—தமிழர் நாமே" என்ற பாட்டுடன் தொடங்கினர். அவரே இயற்றிய இப்பாடலை, பொதுக்கூட்டங்களில் அவரே பாடியதுடன், கூட்டங்களுக்கு வந்த மக்களையும் பாட வைத்தார். இதோ அப்பாடல்:

நாம் தமிழர் நாம் தமிழர்
நாம் தமிழர் நாமே
நாம் தமிழர் நாமே
நாம் தமிழர் நாம் தமிழர்
நாம் தமிழர் நாமே!

வீரமுடன் வாளேந்தி
வாழ்ந்தவர்கள் நாமே
வையமெல்லாம் ஒரு கொடிக் கீழ்
ஆண்டவர்கள் நாமே (நாம்)

சுதந்திரத்தின் ஒளியை வீசும்
தமிழ்க் கொடியை ஏற்றி
தலைவணங்கும் நாம் தமிழர்
நாம் தமிழர் நாமே! (நாம்)

தமிழ் வெல்க

இப்படி பல துறைகளிலும் தமிழ் முழக்கம் செய்து, "தமிழ்" என்ற எண்ணத்தை தமிழ்மக்களின் உள்ளங்களில் பாய்ச்சி வந்த ஆதித்தனரைக் காண, ஒருநாள், நடிகர் நரசிம்மபாரதி வந்தார்.

ரஷியாவில் இருந்து திரும்பிய ஆதித்தனுரை வரவேற்க சென்னை விமான நிலையத்துக்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வந்திருந்தார். கலைவாணர் அணிந்திருப்பது ஆதித்தனுர் கொடுத்த ரஷியத் தொப்பி. (1953)

"தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!" என்று கூவிக்கொண்டே வந்த அவரை, "தமிழ் வெல்க! தமிழ் வெல்க" என்று முழக்கமிட்டுக் கொண்டே ஆதித்தனார் கட்டித்தழுவி வரவேற்றார்.

"தமிழ் வாழும்! இந்த உலகம் உள்ள அளவும் தமிழ் வாழத்தான் செய்யும். அது என்றுமுள்ள தென்தமிழ். காலத்தாலும் அழிக்க முடியாத கன்னித்தமிழ். ஆனால், தமிழ் வாழ்ந்தால் மட்டும் போதாது; தமிழ் வெல்ல வேண்டும்! தமிழ் ஆளவேண்டும்! ஆகவே, 'தமிழ் வெல்க" என்றே முழங்க வேண்டும். இதுதான் தமிழ்ப் பெரியார் திரு.வி.க.வின் கருத்தும் ஆகும்" என்று ஆதித்தனார் கூறினார்.

"தமிழ் என்று தோள்தட்டி ஆடு!—நல்ல தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!" என்றுதானே பாரதிதாசனும் பாடினார்!

தமிழ்நாடு

"சென்னை மாநிலம்" என்ற பெயரை மாற்றி "தமிழ்நாடு" என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டசபையில் முதல் முதல் கோரிக்கை எழுப்பியவரும் ஆதித்தனார்தான்!

"தமிழ்நாடு" என்று பெயர் வைக்கக் கோரி தமிழ்நாடு முழுவதும் 15 ஆயிரம் கையெழுத்துகளை சேகரித்து, அப்பொழுது தமிழக முதலமைச்சராக இருந்த காமராசரிடம் 4–1–60–ல் ஆதித்தனார் கொடுத்தார்.

ஆதித்தனாரையே அவைத்தலைவராகக் கொண்டுதான் இக் கோரிக்கை சட்டசபையில் நிறைவேற வேண்டும் என்பது தமிழ்த் தாயின் தாளாத ஆசை போலும்! அவர் வாயிலாகவே தனது நீண்ட நெடுநாள் கனவை தமிழன்னை நிறைவேற்றிக் கொண்டாள்.

4. முதல் சுதந்திரப் போர்!

தனித் தமிழ்நாடு பெறுவதற்காக, இந்திய தேசப்படத்தை பகிரங்கமாக எரித்து போராட்டம் நடத்துவது என்று ஆதித்தனாரும், திராவிடக் கழகத் தலைவர் ஈ. வெ. ரா. பெரியாரும் சேர்ந்து முடிவு செய்தார்கள்.

இருவருக்கும் இடையில் எத்தனையோ கொள்கைகளில் எவ்வளவோ மாறுபாடு வேறுபாடுகள் இருந்த போதிலும், "தனித் தமிழ்நாடு" என்ற நோக்கத்தில் இருவரும் ஒன்றுபட்டு இருந்தார்கள். "திராவிடநாடு" கேட்டு வந்த பெரியார், அப்பொழுது அக் கொள்கையைக் கைவிட்டு, "சுதந்திரத் தமிழ்நாடு" என்ற கொள்கையைப் பிரசாரம் செய்து வந்தார். இந்தக் கொள்கை இருவரையும் ஒன்றாக இணைத்தது.

"எனக்கும் ஈ.வெ.ரா. பெரியாருக்கும் வேறு கொள்கைகளில் மாறுபாடுகள் இருக்கலாம். ஆனால், 'தனித் தமிழ்நாடு' என்ற கொள்கையில் நாங்கள் இருவரும் ஒரே கருத்துடையவர்களே. ஆகவே, தனித் தமிழ்நாடு பெற இருவரும் ஒன்றுபட்டு போராடுகிறோம்" என்று இதுபற்றி ஆதித்தனார் கூறியிருக்கிறார்.

பெரியாரும், "ஆதித்தனாரிடம் வேடம் போட்டு எனக்கு ஒன்றும் ஆகவேண்டியது இல்லை. என்னிடம் வேடம் போட்டு அவருக்கும் ஒன்றும் ஆகவேண்டியது இல்லை. 'சுதந்திரத் தமிழ்நாடு' பெற ஆதித்தனார் மார்தட்டிக்கொண்டு ஓடிவருகிறார். அவர் கோழை அல்ல; **சுத்த வீரர். அதனால்தான்** சுதந்திரத் தமிழ்நாடு பெறும்

முயற்சியில் இருவரும் ஒன்றுபட்டுப் போராடுகிறோம்" என்று தெரிவித்தார்.

சுதந்திரத் தமிழ்நாடு மாநாடு

போராட்ட திட்டத்தை வகுப்பதற்காக 6-7-1958-ல் மன்னார்குடியில் சுதந்திரத்தமிழ்நாடு மாநாடு நடைபெற்றது. "சுதந்திரத் தமிழ்நாடு" என்ற கோரிக்கைக்காக ஒரு மாநாடு நடந்தது, தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே இதுதான் முதல் முறையாகும். மாநாட்டுக்கு ஆதித்தனார் தலைமைதாங்கினார். பெரியார் தொடங்கிவைத்தார். 'அதிசய மனிதர்' ஜி. டி. நாயுடுவும் மாநாட்டில் கலந்து கொண்டார்.

மாநாட்டுக்குத் தலைமைதாங்கும்படி ஆதித்தனாரை வழிமொழிந்து பெரியார் பேசும் பொழுது, "சுதந்திரத் தமிழ்நாடு என்னும் பாதையில் நான் ஆதித்தனாருடன் சேர்ந்தே செல்லுகிறேன். தமிழ்நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்னும் கிளர்ச்சியில் அவருக்கு இருக்கிற ஆர்வமும் ஊக்கமும் நம்மையெல்லாம் பின்னுக்கு தள்ளும்படி செய்துவிட்டது எனலாம். தமிழக சுதந்திரத்துக்காக நடைபெறும் இம்மாநாட்டுக்கு தலைமைவகிக்க ஆதித்தனாரைத் தவிர வேறு யாரும் கிடைப்பது அரிது" என்று கூறினார்.

படம் எரிப்புப் போர்

சுதந்திரத் தமிழ்நாடு அடையவும், தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குறிக்கோள் "சுதந்திரத் தமிழ்நாடு" தான் என்பதை பிற மக்களும் பிற நாடுகளும் அறிந்து கொள்ளச் செய்யவும் இந்திய தேசப்படத்தை (தமிழ்நாடு நீங்கலாக) எரித்து, போராட்டம் நடத்துவது என்று அந்த மாநாட்டிலே தீர்மானம் நிறைவேறியது. ஆதித்தனாரும், பெரியாரும் கலந்து போராட்ட நாளை முடிவு செய்து அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், மாநாட்டுக்கு வந்திருந்தவர்களை நோக்கி, "தமிழ்நாடு நீங்கிய தேசப்படத்தை......" என்று ஆதித்தனார் குரல் கொடுத்தார். "எரிப்போம்! எரிப்போம்!" என்று

கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் முழக்கமிட்டார்கள்.

இந்த முழக்கம் டெல்லிவரை கேட்டது! அப்பொழுது டெல்லியிலே உள்நாட்டு அமைச்சராக இருந்த பண்டித பந்த், "தேசப் படத்தை எரிப்பது என்று மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என் கவனத்திற்கு வந்தது. இந்தப் போராட்டத்தை அரசாங்கம் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தப் போராட்டத்தைத் தடுக்க எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்" என்று டெல்லி சட்டசபையில் தெரிவித்தார்.

எரிக்கலாமா?

போராட்டத் திட்டம் அறிவிக்கப்பட்டதுமே தமிழ் மக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. 'இந்திய தேசப்படத்தை எரிக்கலாமா? எரித்தால் சுதந்திரம் கிடைக்குமா?' என்று தேசியவாதிகள் எதிர்க்கவும் செய்தார்கள்.

10–8–59–ல் சென்னையில் நடந்த மாநில தனித் தமிழ்நாடு மாநாட்டுக்கு தலைமைதாங்கிய ஆதித்தனர், அவர்களுக்கு பதிலளித்தார். "நெருப்பைக் கொளுத்தி உப்பைக் காய்ச்சியும், வெள்ளைக்காரன் துணிகளை வீதியிலே போட்டு தீ வைத்துக் கொளுத்தியும்தான் இந்தியாவுக்குக் காந்தியார் சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததை அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும்" என்று நினைவுபடுத்தினர்.

போராட்டத்தைப் பெரிய அளவில் நடத்துவதற்காக ஆதித்தனரும் பெரியாரும் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து, போராட்டத்தின் நோக்கங்களை விளக்கினர்கள். வீட்டுக்கு ஒரு வீரன் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு. தீப் பெட்டிகளும், தீப்பந்தங்களும் பரிசு கொடுத்து தலைவர்களை உற்சாகப் படுத்தினர்கள்.

பிஞ்சுக் கையெழுத்து

சேலத்தை அடுத்த வேலநத்தம் பொதுக்கூட்டத்தில் ஆதித்தனர் பேசிக் கொண்டிருந்த பொழுது, வெங்கடாசலம் என்ற 12 வயது

மன்னார்குடியில் நடந்த சுதந்திரத் தமிழ்நாடு மாநாட்டில் பெரியாரும், ஆதித்தனரும். (1958)

சிறுவன், 'நான் போராட்டத்தில் கலந்து கொள்ளத் தயார்!' என்று இரத்தக் கையெழுத்து போட்டுக் கொடுத்தான்! நாமக்கல்லை அடுத்த சேந்தமங்கலத்தில் நடந்த கூட்டத்தில் மருளையம்பாளையம் தா. தங்க வேலு என்ற இளைஞரும், சேலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் இரா. சுப்பிரமணியம் என்ற இளைஞரும் இதே போல இரத்தக் கையெழுத்திட்டு சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ள துணுரைத்தார்கள். இந்த அளவுக்கு சுதந்திரதாகம்—போராட்ட வேகம் நாடெங்கும் வளர்ந்து வந்தது.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அப்பொழுது "குயில்" என்ற பத்திரிகையை நடத்திக் கொண்டிருந்தார். "தமிழா ஏறு! தமிழ் மகனே ஏறு!!" என்ற தலைப்பில் இப்போராட்டம் பற்றி அவர் உணர்ச்சி மிக்க சொல்லோவியம் ஒன்றை வரைந்தார். அது, இது:—

"தமிழ் நாடு நம் தாய்நாடு!
அதை நமதாக்க வேண்டும்!
ஏறு! தமிழா ஏறு!
ஏறு தமிழ் மகனே ஏறு!

நீ ஒரு தமிழன் என்பதை மறவாதே! வடவரின் ஆட்சியை ஒழிக்க, இந்தியை விலக்க, தமிழகத்தை விடுவிக்க ஏறு! எடு தீப்பந்தத்தை!

பெரியாரை வாழ்த்து! ஆதித்தனாரை வாழ்த்து! ஏறு!

வெல்க பட எரிப்புப் போர்!"

போராட்ட நாள்

15–5–60–ல் திருச்சியில் ஆதித்தனாரும் பெரியாரும் சந்தித்துப் பேசினார்கள். போராட்டத்துக்கு நாள் குறித்தார்கள். ஜூன் 5–ந் தேதி போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தார்கள். அன்று மாலை 6 மணிக்கு மேல் 8 மணிக்குள் தீப்பந்தங்களுடன் ஊர்வலம் வந்து, பொதுக்கூட்டத்தில் பகிரங்கமாக தேசப்படத்தை எரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

சென்னை நகரில் பெரியாரும் ஆதித்தனும் போராட்டத்தை மூன்னின்று நடத்துவது என்றும் தீர்மானம் ஆயிற்று.

போராட்டத்துக்காக இலட்சக்கணக்கான தேசப்படங்கள் அச்சிடப்பட்டன. அப்படங்களை எடுத்துக் கொண்டு ஆதித்தனும் பெரியாரும் ஜூன் 1-ந் தேதி "போராட்ட யாத்திரை" தொடங்கினார்கள். தூத்துக்குடியில் இருந்து ஒரே ரெயிலில் புறப்பட்டு, வழி நெடுக தொண்டர்களுக்கு படங்களைக் கொடுத்துக் கொண்டே, 3-ந் தேதி சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஜூன் 2-ந் தேதி தமிழக (காங்கிரஸ்) அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. போராட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது. போராட்டத்தைத் தடுக்க எல்லா நடவடிக்கையும் எடுத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

4-ந் தேதி மாலையில் சென்னை கடற்கரையில் நடந்த கூட்டத்தில் ஆதித்தனும், பெரியாரும் பேசுவதாக இருந்தது. ஆனால், இந்தக் கூட்டத்துக்கு போலீசார் அனுமதி அளிக்கவில்லை.

சனிக்கிழமை இரவே தமிழ்நாடு முழுவதும் கூட்டம்—ஊர்வலங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டது. பாண்டிச்சேரியிலும் தடை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், தடையை மீறி போராட்டம் நடத்த இரு தலைவர்களும் முடிவு செய்தார்கள்.

போலீஸ் வேட்டை

ஞாயிற்றுக்கிழமை மாலையில்தான் போராட்டம். ஆனால், சனிக்கிழமை இரவே போலீசார் தொண்டர்களை வேட்டையாடத் தொடங்கிவிட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆதித்தனும், பெரியாரும் கைது செய்யப்பட்டார்கள்.

ஆதித்தனரை கைது செய்ய முதலில் அவரது வீட்டுக்கு போலீசார் சென்றார்கள். அங்கே இல்லை என்றதும், 'நாம்—தமிழர்' இயக்க தலைமை நிலையமான "தமிழன் இல்ல"த்துக்கு வந்தார்கள். போலீசாரைக் கண்டதும், "வாருங்கள்! வாருங்கள்!" என்று சிரித்துக்

பட எரிப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட ஆதித்தனர், போலிஸ் லாரியில் ஏற்றப்படுகிறார். (1960).

கொர்ண்டேட் வரவேற்றனர். காலை 10–30 மணிக்கு ஆதித்தனரை கைது செய்து, சென்னை மத்திய சிறையிலே கொண்டுபோய் அடைத்தார்கள்.

} மீரான்சாகிப் தெருவில் உள்ள பெரியாரின் வீட்டிலே அவரை காலை 10–45 மணிக்கு கைது செய்தார்கள்.

தடையை மீறி

தலைவர்கள் கைது செய்யப்பட்ட போதும், தடையை மீறி மாலையில் கடற்கரையில் போராட்டம் நடக்கவே செய்தது. பல நூற்றுக் கணக்கான பேர்கள் படத்தை எரித்தார்கள். "தனித் தமிழ்நாடு அடைந்தே திருவோம்! பெரியார் வாழ்க! ஆதித்தனர் வாழ்க!" என்று முழக்கமிட்டார்கள். குதிரைப்படைபோலீசார் பாய்ந்து, பாய்ந்து படங்களைப் பறித்தார்கள். தொண்டர்கள் தேசப்படங்களை பலூன்களில் கட்டி, தீ வைத்து பறக்கவிட்டார்கள்!

இந்தப் போராட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் சுமார் 4000 பேர் கைது செய்யப்பட்டார்கள். கூட்டங் கூட்டமாக—குடும்பம் குடும்பமாகப்—பலர் கைது ஆனார்கள். மேட்டூரில் நங்கைகாதர் மனைவி மக்களுடன் சிறை சென்றார். திருவாரூர் சிந்தனை சோமசுந்தரம் தன் மனைவி தங்கம்மாளுடன் சிறை புகுந்தார். சிதம்பரத்தில் வி. கே. சாமித்துரை மனைவி, 3 குழந்தைகளுடன் கைது செய்யப்பட்டார்.

பம்பாயில் வாழ்ந்த தமிழர்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்கள் தேசப்படத்தை எரித்து, அந்த சாம்பலை பிரதமர் நேருவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

தமிழ்நாட்டின் விடுதலைக்காக நடந்த முதல் சுதந்திரப் போராட்டம், இது! தனித் தமிழ்நாடு போராட்டத்தின் முதல் மைல் கல்லை இவ்வாறாக ஆதித்தனர் ஊன்றினர்.

5. இந்தி எதிர்ப்புப் போர்

"என்னும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றார், அவ்வையார். எனவே, எழுத்தை—மொழியை இழந்தவர்கள் விழியை இழந்தவர்கள் போலத்தான்.

ஆதித்தனாரின் தனித் தமிழ்நாடு கோரிக்கைக்கு மொழியே அடிப்படை. "ஒரு மொழி—ஒரு நாடு என்ற முறையில்தான் உலக நாடுகள் அமைந்திருக்கின்றன—அமையமுடியும்" என்பதை அவர் எத்தனையோ இடங்களில் எடுத்துக்காட்டியிருக்கிறார். ஆகவே, தனித் தமிழ்நாடு பெற தமிழ்மொழி சுதந்திரமாக இருக்க வேண்டியது முதன்மையாகும். செந்தமிழ் சிதைந்தால், நாம் தமிழர் என்ற நினைவும் நலியும். ஆகவே, மொழியைக் காப்பதில் ஆதித்தனார் முன்னணியில் இருந்தார்.

ஒரு நூற்றாண்டுகால ஆங்கிலேயர் ஆட்சியில் அங்கு இங்கு எனாதபடி எங்கும் ஆங்கில மொழியே வேரூன்றியது. இப்பொழுது இந்தி(யர்) ஆட்சி! இவ்வாட்சியில்,ஆங்கில மொழியை ஆணிவேரோடு கிள்ளி எறிந்துவிட்டு, அங்கே இந்தியைக் கொலுவேற்ற முயற்சி நடக்கிறது. தமிழைப் பொறுத்தவரை, கரையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்த கதைதான்.

இந்தித்திணிப்புக்கு இன்பத்தமிழர்கள் எந்நாளுமே எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். "இந்தித்திணிப்பா, எங்கே?" என்று தேசியவாதிகள் அதை மறைக்கப் பார்க்கிறார்கள் "ஒரு காசு நாணயம் ஒன்றைக் கையிலே எடுத்துப் பாருங்கள். அதிலே இந்தியிருக்கும்"

என்று அவர்களுக்கு பதிலளித்தார், ஆதித்தனர். இந்தித்திணிப்பை இவ்வளவு எளிய முறையில் எடுத்துக் காட்டினர்.

இந்தித் திணிப்பு

1965–ம் ஆண்டில் இருந்து இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி என்று இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்டு இருந்தது. இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதற்கான ஆயத்த வேலைகளில் இப்பொழுதே (1960லேயே) இறங்கும்படி 1960 ஏப்ரலில் அப்பொழுது குடியரத் தலைவராக இருந்த இராசேந்திரபிரசாத் கட்டளையிட்டார்.

'இந்தி பேசாதவர்கள் விரும்பும்வரை இந்தியை ஆட்சிமொழி யாக்க மாட்டோம்" என்று பிரதமர் நேரு கொடுத்த உறுதிமொழிக்கு எதிராக இந்த உத்திரவு இருந்தது.

அதே ஆண்டு ஆகஸ்டு 6–ம் நாள் முதல் 16–ம் நாள் வரை இராசேந்திரபிரசாத் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்யத் திட்ட மிட்டு இருந்தார்.

கறுப்புக் கொடி

நேரு என்னதான் உறுதிமொழி கொடுததாலும, தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படுவதை ஆதித்தனர் கண்கூடாகக் கண்டார். ஒரு பக்கம் 'இந்தியைத் திணிக்கமாட்டோம்' என்று உறுதிமொழி கொடுத்துக் கொண்டு, இன்னொரு பக்கம், வாழைப்பழத்தில் ஊசி குத்துவது போல, இந்தி திணிக்கப்பட்டுக் கொண்டே வருவதை உணர்ந்தார். "இந்தித் திணிப்பு இல்லை என்றால், நாணயத்தில் இந்தி இருக்கலாமா? அஞ்சல் தலையில் இந்தி இருக்கலாமா?. ரெயில் நிலை யத்தில் இருக்கலாமா? இங்கேயெல்லாம் இந்தி ஒழிய வில்லையே!," என்று வேதனைப்பட்டார்.

எனவே, தமிழ் மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை எப்படியும் குடியரசுத் தலைவருக்குக் காட்டுவது என்று தீர்மானித்தார். "நாம் தமிழர்" தலைமை செயற்குழுவை அவசரமாகக் கூட்டினர். தமிழர் களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டும் அடையாளமாக

ஆகஸ்டு 13-ம் நாள் சென்னையில் இராசேந்திரபிரசாத்துக்கு கறுப்புக் கொடி காட்டுவது என்று செயற்குழு முடிவு செய்தது.

அப்பொழுதுதான் பட எரிப்புப் போராட்டம் நடந்து முடிந்திருந்தது. பல தொண்டர்கள் சிறையில் இருந்தார்கள்; மற்றும் பலர் மீது வழக்கு நடந்து கொண்டிருந்தது. ஆகவே, ஒரு நூறு பேர்கள் மட்டுமே ஆதித்தனர் தலைமையில் இராசேந்திரபிரசாத்துக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்றும் செயற்குழு தீர்மானித்தது.

ஆனல், சென்னை நகரில் மட்டும் 500 பேர்கள் கறுப்புக் கொடி காட்ட முன்வந்து "நாம்-தமிழர்" தலைமை நிலையத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டார்கள். மதுரை, கோவை, சேலம், மேட்டூர் முதலிய ஊர்களில் இருந்து கறுப்புக் கொடி காட்ட அனுமதி கேட்டு தலைமை நிலையத்துக்கு தொண்டர்கள் கடிதம் எழுதினர்கள். ஆனல், எதிர்ப்பைக் காட்டும் அடையாளமாகவே கறுப்புக் கொடி காட்டியதால் நூறுபேர் மட்டுமே கறுப்புக் கொடி காட்டினல் போதும் என்று ஆதித்தனர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

ஆகஸ்டு 13-ம் தேதி மாலையில் சென்னை "ராஜாஜி மண்டப"த்தில் இராசேந்திரபிரசாத்துக்கு தமிழக சட்டசபை உறுப்பினர்கள் ஒரு விருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அவ்விருந்தில் கலந்து கொள்ள வரும் பொழுது அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்று 'நாம்-தமிழர்' இயக்கம் தீர்மானித்து இருந்தது.

ரெயில் நிலையத்தில் கைது

ஆனல், 10-ம் தேதியே போலீசார் தொண்டர்களைக் கைது செய்யத் தொடங்கிவிட்டார்கள். 11-ம் தேதி மாலையில் ஆதித்தனர் கைது செய்யப்பட்டார். மதுரையில் இருந்து சென்னைக்கு வர ரெயில் ஏற வந்தபொழுது, போலீசார் மதுரை ரெயில் நிலையத்தில் பதுங்கியிருந்து அவரை கைது செய்தார்கள்.

வெளியில் போலீஸ் லாரி தயாராக இருந்தது. புன்னகையுடன் லாரியில் ஏறினர், ஆதித்தனர். மதுரை மத்திய சிறைச்சாலையை நோக்கி லாரி சென்றது.



கறுப்புக்கொடி போராட்டத்தில் கைது செய்யப்பட்ட ஆதித்தனுரை போலிசார் அழைத்துச் சென்றபோது எடுத்த படம். (1960)

கறுப்புக் கொடி காட்ட வெளியூர்களில் இருந்தும் தொண்டர்கள் சென்னைக்கு வந்தார்கள். ஆனால், எழும்பூர், சென்டிரல் ரெயில் நிலையங்களில் வந்து அவர்கள் இறங்கியதுமே, அவர்களைப் போலீசார் கைது செய்து விட்டார்கள். மொத்தம் 126 பேர்கள் கைது செய்யப்பட்டு, மத்தியச் சிறையிலே காவலில் வைக்கப்பட்டார்கள்.

மறுநாள் (12-ம் தேதி) ஆதித்தனர் மதுரை நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார். அவரை 15-ம் தேதிவரை காவலில் வைக்கும்படி நீதிபதி கட்டளையிட்டார்.

"என்னுடன் கறுப்புக் கொடி காட்ட இருந்த தொண்டர்கள் சென்னையில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள். என்னையும் சென்னை சிறைக்கு மாற்ற வேண்டும்" என்று ஆதித்தனர் கேட்டுக் கொண்டார்.

ஆனால், அந்த கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டது. ஆதித்தனர் மீண்டும் மதுரை மத்திய சிறைக்கே அழைத்துச் செல்லப்பட்டார்.

உரிமைப் பிரச்சினை

இதற்கு இடையில் ஆதித்தனர் கைது செய்யப்பட்டது பற்றி தமிழக சட்டசபையில் 12-ம் தேதி பி. எஸ். சின்னத்துரை ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்.

ஆதித்தனர் கைதானது பற்றி மதுரை கலெக்டரிடமிருந்து தனக்கு வந்த தந்தியை அவைத்தலைவர் படித்துக் காட்டினர். "சென்னை நகர போலீஸ் கமிஷனரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. சென்னை மவுண்டுரோட்டில் 13-ம் தேதி குடியரசுத் தலைவருக்கு ஆதித்தனர் கறுப்புக்கொடி காட்டப் போவதாக தகவல் கிடைத்து இருப்பதால், அவ்வாறு செய்யாமல் தடுக்க ஆதித்தனரை கைது செய்ய தீர்மானித்து இருக்கிறோம் என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டு இருந்தது" என்றும் அவர் தெரிவித்தார்.

16-ம் தேதி பிற்பகல்வரை இராசேந்திரபிரசாத் சென்னையில் தங்கி இருந்தார்.

16–ம் தேதி காலையில் ஆதித்தனாரை போலீசார் மீண்டும் நீதி மன்றத்துக்கு அழைத்து வந்தார்கள். 18–ம் தேதிவரை காவலை நீடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

"ஜனாதிபதிதான் இன்று போய் விடுகிறாரே" என்று நீதிபதி சுட்டிக்காட்டினார்.

"இன்று பிற்பகல் 2–45 மணிக்குத்தான் சென்னையில் இருந்து டெல்லிக்கு ஜனாதிபதி பயணமாகிறார். இப்பொழுது (காலையில்) ஆதித்தனாரை விடுதலை செய்தால், சென்னையில் இருக்கும் இயக்கத் தோழர்களுடன் அவர் 'டெலிபோன்' வாயிலாக தொடர்பு கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதுவரையிலாவது அவரைக் காவலில் வைக்க வேண்டும்" என்று போலீசார் கேட்டுக் கொண்டார்கள்.

அதன் பேரில், பிற்பகல் 3 மணிவரை ஆதித்தனாரின் காவல் நீடிக்கப்பட்டது. மூன்றுமணிக்குப் பிறகு மீண்டும் நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

இராசேந்திரபிரசாத் சென்னையில் இருந்து டெல்லிக்குக் கிளம்பிச் சென்று விட்டார் என்று செய்தி கிடைத்த பின்தான் ஆதித்தனாரை விடுதலை செய்தார்கள்!

மாணவர் போராட்டம்

1965–ம் ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தமிழக மாணவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய பொழுது, அவர்களுக்கு ஆதித்தனார் முழு ஆதரவு அளித்தார். மாணவர் தலைவர்கள் அடிக்கடி ஆதித்தனாரை சந்தித்து ஆலோசனை பெற்று சென்றார்கள்.

6. பாட்டாளியின் கூட்டாளி

சட்டசபை மெம்பர்கள் 'சட்டை'யை மாற்றிக் கொள்வது இன்று சர்வசாதாரண நிகழ்ச்சியாக நடக்கிறது. பதவி கிடைக்கிறது என்றால், எப்படி வேண்டுமானாலும் 'பல்டி' அடிக்கிறார்கள். 'கொள்கை பிடிக்கவில்லை' என்று கூறி, கட்சி மாறுகிறவர்கள் கூட, சட்டசபை உறுப்பினர் பதவியை விட்டுவிடுவது இல்லை; ஒட்டுப்புல் போல ஒட்டிக் கொள்ளவே முயற்சி செய்கிறார்கள்.

ஆனால், கொள்கைக்காக சட்டசபை உறுப்பினர் பதவியையே துறந்தவர் ஒருவர் உண்டு என்றால், அவர் ஆதித்தனார்தான்! அதுவும் தொழிலாளர்களுக்காக தனது சட்டசபை உறுப்பினர் பதவியை விட்டு விலகினார்.

வரியை எதிர்த்து ராஜினாமா

1952—53-ல் தமிழக மேலவையில் ஆதித்தனார் உறுப்பினராக இருந்தார். வெறும் உறுப்பினர் மட்டுமல்ல; மேலவையில் எதிர்க் கட்சி தலைவராகவும் இருந்தார்.

அப்பொழுது தென் மாவட்டங்களில் பனைமரங்களுக்கு வரி விதிக்கப்பட்டு இருந்தது. மதுவிலக்கினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான பனைமரத் தொழிலாளர்களுக்கு இந்த வரி ஒரு பெரிய சுமை என்பதை ஆதித்தனார் எடுத்துக்காட்டினார். பனைமர வரியை நீக்கவேண்டும் என்று சட்டமன்றத்திலேயே போராடினார். ஆனால், அவர் கோரிக்கைக்கு காங்கிரஸ் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. ஆகவே, தொழிலாளரைப்பாதிக்கும் புதிய வரிவிதிப்புக்கு எதிர்ப்பு தெரி

1955-ல், ஆதித்தனுரை போலிசார் கைவிலங்கிட்டு, அழைத்து சென்ருர்கள். ('மெயில்' பத்திரிகையில் வெளியான படம்).

வித்து, சட்டமன்ற உறுப்பினர் பதவியையே ஆதித்தனர் உதறித் தள்ளினார். அவர் போராட்டமும் வெற்றிபெற்றது! மலைமர வரியை அரசாங்கம் நீக்கியது.

விலங்கிடப்பட்ட தலைவர்

ஆதித்தனருக்கு எப்பொழுதுமே தொழிலாளர் நலத்தில் நாட்டம் உண்டு. 'நீர் உயர கோன் உயரும்' என்றபடி, தொழிலாளர் உயர்ந்தால்தான், தொழில்கள் உயரும்; தொழில்கள் உயர்ந்தால்தான் நாடு உயரும் என்ற நல்ல கொள்கையைக் கொண்டவர். "உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின் ஒவ்வொரு துளியிலும் இவ்வுலகு உழைப்பவர்க்குரியது" என்பதைக் கண்டவர். அமெரிக்காவில் ஒவ்வொரு தொழிலாளியும் சொந்தத்தில் கார் வைத்திருப்பதை நேரிலேயே கண்டுவந்தவர். "நம் நாட்டுத் தொழிலாளர்களும் அந்த அளவுக்கு உயரவேண்டும்" என்று அடிக்கடி சொல்லுவார்.

வெறும் வாய்ச்சொல் வீரர் அல்லர், ஆதித்தனர். தொழிலாளர் கோரிக்கைக்காக சிறை சென்றவர், அவர். அதுவும் அவர் கைகளிலே விலங்கிட்டு, போலீசார் இழுத்து சென்றார்கள். மாத்தூரில் நடந்த உழவர் அறப்போரில்தான் இந்தத் தியாகத்தழும்பை ஏற்றார்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள விளைநிலம் அனைத்தும் ஒரு சில மிராசுதார்கள் கையில் இருந்தது. உழைப்பவர்கள் எல்லாம் உழவர்களே. இவர்கள் தங்கள் கூலி பற்றிய கோரிக்கை ஒன்றை மிராசுதார்களிடம் கொடுத்தார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் பெரும்புதூர் வட்ட தாசில்தார் முன்னிலையில் 3–8–55–ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இக்கூட்டத்தில் உழவர்களின் பிரதிநிதியாக ஆதித்தனர் கலந்து கொண்டார்.

ஆனல், மிராசுதார்கள் இந்த உடன்பாட்டை உடைத்து எறிந்தார்கள். மாத்தூர் உழவர்களை புறக்கணித்துவிட்டு, வெளியூர்களில் இருந்து வேறு தொழிலாளர்களைக் கொண்டு வந்தார்கள். இதைக் கண்டு உள்ளூர் உழவர்கள் கொதிப்படைந்தார்கள்; வெளியூர் தொழி

ளாளர்களைத் தடுத்தார்கள். இதனால் மிராசுதார்கள் மாததூரான 144 தடை உத்திரவு பிறப்பிக்க ஏற்பாடு செய்தார்கள். தங்களுக்கு பாதுகாப்பாக போலீசையும் அழைத்து வந்தார்கள்.

அறப்போர்க் குழு

ஆதித்தனருக்கு இத்தகவல் தெரிவிக்கப்பட்டது. தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்ட அறப்போர் நடத்துவதைத் தவிர வேறு வழி ஒன்றும் அவருக்குப் புலப்படவில்லை. ஆகவே, அறப்போர்க் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் தலைவராக ஆதித்தனரையே தேர்ந்து எடுத்தார்கள். தடை உத்திரவை மீறி, ஐந்து, ஐந்து தொண்டர்களாக சென்று மறியல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

30–8–55 முதல் 18–9–55 வரை தொண்டர்களே தொடர்ந்து மறியல் செய்தார்கள். சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டார்கள். தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாகக் கைதாகிக் கொண்டு இருந்தார்களே தவிர, அவர்களின் கோரிக்கை நிறைவேறவில்லை. எனவே, இதற்கு ஒரு முடிவுகட்ட ஆதித்தனர் தீர்மானித்தார்.

19–9–55 அன்று ஆதித்தனரே போராட்டத்தில் குதித்தார்.

18–ந் தேதி அன்றே இது பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. ஆகவே, முன்கூட்டியே எப்படியாவது ஆதித்தனரை கைது செய்து விட வேண்டும் என்று போலீசார் திட்டமிட்டார்கள்.

18–ம் தேதி இரவு பெரும்புதூரில் நடந்த உழவர் கூட்டத்தில் ஆதித்தனர் கலந்து கொண்டார். கூட்டத்தை முடித்துவிட்டு, மாத்தூருக்கு வரவேண்டியவர், அவர். இதை அறிந்த போலீசார் வழியிலேயே அவரை வளைத்துப் பிடித்துவிட கண்ணி வைத்தார்கள்.

இந்த விவரம் ஆதித்தனருக்குத் தெரிந்துவிட்டது. கூட்டம் முடிந்ததும், தனது காரில் வேறு இரண்டு தோழர்களை ஏற்றி அனுப்பிவைத்தார். அவர், துணைக்கு சில தோழர்களை அழைத்துக் கொண்டு, அந்தக் காரிருளில் காட்டுவழியே நடந்து சென்றார்! ஆறு மைல் தூரம் நடந்து, இரவு 12 மணிக்கு செரப்பணஞ்சேரி என்ற ஊரை அடைந்தார்கள்.

ஆதித்தனரின் கார், மாத்தூரை நோக்கி சென்றபொழுது வழியில் இரண்டு இடங்களில் நிறுத்தி போலீசார் சோதனை போட்டார்கள். காரில் ஆதித்தனர் இல்லாமல் போகவே ஏமாற்றம் அடைந்தார்கள். "ஆதித்தனர் எங்கே?" என்று காரில் இருந்தவர்களிடம் போலீசார் கேட்டபோது, "எங்களுக்குத் தெரியாது" என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்!

கைது

மறுநாள் (19-ந் தேதி) காலையிலேயே மாத்தூரில பலத்த போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டு இருந்தது. ஆதித்தனர் வந்ததும், அவரைப் பிடித்துவிட வேண்டும் என்று போலீசார் காத்துக் கொண்டு இருந்தார்கள். காத்துக் காத்து காலும் கடுத்தது; பார்த்துப் பார்த்து கண்ணும் பூத்தது.

மாலை 5 மணிக்கு 'திடீர்' என்று ஆதித்தனர் மாத்தூரில் தோன்றினர். உழவர் பெண்கள் ஆரத்தி எடுத்து, நெற்றியில் திலகமிட்டு, மாலை சூட்டி, அவரை மறியல் செய்ய அனுப்பி வைத்தார்கள். அவருடன் 5 ஆண் தொண்டர்களும், 5 பெண் தொண்டர்களும் மறியலுக்கு சென்றார்கள்.

ஆதித்தனர் 'திடீர்' என்று வரவே போலீசார் திகைப்பு அடைந்தார்கள். "ஒ ப் ப ந் த த் தை அமுல் ந ட த் து! உழவர் கோரிக்கையை ஏற்றுக்கொள்" என்று முழக்கமிட்டுக் கொண்டே அவர் மறியல் செய்யத் தொடங்கியதும்தான் அவரை கைது செய்தார்கள். அவருடன் வந்த தொண்டர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

அன்று இரவு மணிமங்கலம் போலீஸ் நிலையத்தில் ஆதித்தனர் காவலில் வைக்கப்பட்டார். மறுநாள் காலையில் சென்னை மத்திய சிறைக்கு அழைத்து சென்றார்கள்.

ஆதித்தனர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து செங்கல்பட்டு மாவட்டம் முழுவதும் ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடந்தன. உழவர் போராட்டம் தீவிரம் ஆயிற்று. சிறையில் இருந்தவாறே

[illegible]-ல் பனைமர வரியை எதிர்த்து மேல்சபை உறுப்பினர் பதவியை ராஜினமா செய்த ஆதித்தனர், 1956-ல் "அவாய்" தீவுக்கு (அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் நடுவில் உள்ள தீவு) போனபோது, ஒரு ஆள் உயரமே வளரும் அதிசயப் பனையை ஆர்வத்தோடு பார்வையிட்டார்.

போராட்டத்தை ஆதித்தனர் நடத்தினர். தொண்டர்கள் தொடர்ந்து மறியல் செய்தார்கள். 30–9–55 வரை சுமார் 500 தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

28–9–55 அன்று ஆதித்தனரை சைதாப்பேட்டை நீதிமன்றத்துக்கு போலீசார் அழைத்து வந்தார்கள். போலீஸ் லாரியில் இருந்து அவர் இறங்கியதைப் பார்த்ததும், தொண்டர்களும், மற்றவர்களும் திடுக்கிட்டார்கள். ஏனென்றல், அவர் கைகளிலே விலங்கிடப்பட்டு இருந்தது.

ஆதித்தனரின் சிறைவாசம் நீடிக்கப்பட்டு, மீண்டும் சிறைச் சாலைக்கே அழைத்து செல்லப்பட்டார்.

ஆதித்தனர் கைது செய்யப்பட்ட பிறகும் போராட்டம் ஓயாமல் போகவே, இறுதியில் காங்கிரஸ் அரசாங்கம் பணிந்தது. 3–10–55 அன்று அவரை விடுதலை செய்தார்கள். அன்றே அவரை அப்போதைய வேளாண்மைத்துறை அமைச்சர் மாணிக்கவேலர் அழைத்துப் பேசினர். முடிவில், தொழிலாளர்களின் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்பட்டு, புதிய ஒப்பந்தம் ஒன்று உருவாகியது.

"ஒரே குடும்பம்"

"ஊருக்குத்தானடி உபதேசம்; உனக்கும் எனக்கும் அல்ல" என்ற முறையில் சிலர் நடந்து கொள்ளுவார்கள். ஆனல், ஆதித்தனரோ அதற்கு விதிவிலக்கு. தன்னிடம் பணியாற்றிய சொந்தத் தொழிலாளர்களிடமும் அவர் பந்த பாசத்துடன்தான் நடந்து கொண்டார். "தினத்தந்தியில் பணியாற்றும் அனைவரும் ஒரே குடும்பத்தினர்" என்று கூறுவார்.

அங்கே தொழிலாளி—முதலாளி என்ற உறவைக் காணவே முடியாது. ஒரு குடும்ப சூழ்நிலைதான் நிலவும். தொழிலாளர்களைக் காணும்பொழுதெல்லாம் அவர்களின் சொந்த இன்ப துன்பங்களைப் பற்றி ஆதித்தனர் விசாரிக்காமல் இருக்கமாட்டார். அவர்களும் தங்கள் குடும்ப குறை நிறைகளை அவரிடம் கூறி உதவி பெறத் தயங்கமாட்டார்கள். "மனைவிக்கு உடல் நலமில்லை, மருந்து வாங்கினேன்

பிள்ளையை பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன்; பெண்ணுக்குக் காது குத்தினேன்" என்றெல்லாம் கூறி தொழிலாளர்கள் உதவி பெற்றுச் செல்லும் காட்சியை 'தினத்தந்தி' அலுவலகத்தில் தவிர வேறு எந்தப் பெரிய நிறுவனத்திலும் காணவே முடியாது.

'ஆயுதபூஜை' தினத்தை தொழிலாளர் திருநாளாகக் கொண்டாடுவது "தினத்தந்தி" அலுவலகத்தில் வழக்கம். ஆண்டுதோறும் தொழிலாளர்களுக்கு அலுவலகத்தில் விருந்து அளிக்கப்படும். ஆதித்தனும் தொழிலாளர்களுடன் அமர்ந்து விருந்து உண்பார்! "இந்த அலுவலகத்தில் நானும் உங்களைப் போல ஒரு தொழிலாளி தான்" என்று சொல்லுவார். விருந்து முடிந்ததும், தொழிலாளர்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவார்.

தொழிலாளர் நிலை உணர்ந்தவர்

"தினத்தந்தி" அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் 7-ம் தேதி யன்று சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்கப்படும். 7-ம் தேதி விடுமுறை என்றால் 6-ம் தேதியே வழங்கப்படும். சென்னையில் "தந்தி" தொடங்கிய நாளில், பெருத்த நட்டத்தில் நடந்து கொண்டு இருந்தது. அப்பொழுதுங்கூட கடனை உடனே வாங்கி, 7-ம் தேதி சம்பளம் கொடுத்துவிடுவார்

ஆனால், ஒரு 7-ம் தேதியன்று, பணத்துக்கு ஒரு வழியும் தோன்றாமல் அலுவலகத்திலே அமர்ந்து இருந்தார், ஆதித்தனார். சேட்டு கடையில் அடகு வைத்து பணம் வாங்க வீட்டில் வேறு சாமானே இல்லை. இருந்ததெல்லாம் ஏற்கனவே சேட்டு கடைக்குப் போய்விட்டது. 'எப்படி சம்பளம் கொடுப்பது?' என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டு இருந்தார்.

மணி ஐந்து அடித்தது. அலுவலகம் முடிந்தது. சிப்பந்திகள் வீட்டுக்கு செல்ல வேண்டியதுதான். அப்பொழுது கணக்குப்பிள்ளை (கேஷியர்) மெதுவாக ஆதித்தனாரின் அறைக்குள் நுழைந்தார். "எல்லோரையும் வீட்டுக்குப் போகச் சொல்லலாமா?" என்று கேட்டார்.

"வெறுங்கையுடனா?" என்றார், ஆதித்தனார். "இவர்கள் சம்பளம் வாங்கிக் கொண்டு வருவார்கள் என்று இவர்களை நம்பி எத்தனை பேர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள்? காலையிலேயே பால்காரர், பலசரக்குக் கடைக்காரர் எல்லாம் வாசலில் வந்து நிற்பார்களே, அவர்கள் முகத்தில் இவர்கள் எப்படி விழிப்பார்கள்? சம்பளம் கொடுத்துத்தான் அனுப்ப வேண்டும்" என்று உறுதியாகக் கூறினார்.

"எல்லோரையும் கொஞ்சம் இருக்கச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு, ஒரு வெள்ளைத்தாளைமட்டும் எடுத்து மடித்து பைக்குள் வைத்துக் கொண்டு வெளியேறினார்.

நேரே, வழக்கமாகக் கடன் வாங்கும் சேட்டிடம் சென்றார். "சேட்டு, எனக்கு அவசரமாக இப்பொழுது பணம் தேவைப்படுகிறது. உன்னிடம் அடகுவைக்க என்னிடம் ஒன்றுமே இல்லை. இருந்ததையெல்லாம் ஏற்கெனவே உன்னிடம் கொடுத்துவிட்டேன்" என்று கூறினார். பையில் இருந்த வெள்ளைத்தாளை எடுத்தார். அதன் அடியிலே கையெழுத்திட்டார். "இதோ, நான் கையெழுத்துப் போட்டுவிட்டேன். நீ என்ன வேண்டுமானாலும் இதில் எழுதிக்கொள். அதற்கு நான் உடன்படுகிறேன். இப்பொழுது எனக்குப் பணம் கொடு. தொழிலாளர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுத்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என்று வெள்ளைத் தாளை சேட்டிடம் நீட்டினார்.

சேட்டு சிரித்துக்கொண்டே வெள்ளைத்தாளை வாங்கி வைத்துக் கொண்டார். ஆதித்தனார் கேட்ட தொகையைக் கொடுத்தார். ஆதித்தனார் அதை அலுவலகத்துக்குக் கொண்டு வந்து, கணக்குப் பிள்ளை கையில் தந்து, சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுத்து அனுப்பச் சொன்னார்.

தொழிலாளர்களின் நலனில் ஆதித்தனாருக்கு உள்ள அக்கறை மட்டுமல்ல; அவர்களின் நிலையை அவர் எவ்வளவுதூரம் அறிந்து வைத்திருக்கிறார் என்பதையும் இந்த ஒரு நிகழ்ச்சியில் இருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம்.

''சிரமி''ப் படையின் தொண்டராக சென்னை அடையாறில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு, கொத்து வேலை செய்து, ''உடலுழைப்பு தானம்'' செய்தார். (1967)

1958-ல் உழைக்கும் பத்திரிகையாளர் ஊதியச் சட்டம் வந்த பொழுது, மற்ற பத்திரிகையாளர்கள் அதை அமுல்படுத்தத் தயங்கினார்கள். சில பத்திரிகை அதிபர்கள் அந்த சட்டத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார்கள். ஆனால், அந்த சட்டத்தை அப்படியே முதல் முதல் அமுல்படுத்தியவர், ஆதித்தனார் தான்.

தொழிற்சங்கத் தலைவர்

தமிழக அரசாங்க மருத்துவ நிலைய தொழிலாளர் சங்கத்தில் தலைவராக 15 ஆண்டுகள் ஆதித்தனார் பணியாற்றினார். அவர்களுக்கு விடுமுறை போன்ற பல வசதிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

14-2-60ல் சென்னையில் நடந்த தமிழக அரசாங்க ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கத்தின் மாநாட்டில் ஆதித்தனார் படத்தை ஈ.வெ.ரா. பெரியார் திறந்து வைத்தார். ஆதித்தனாருக்கு குன்றக்குடி மடாதிபதி பொன்னாடை போர்த்தினார்.

வாரிசு

"தினத்தந்தி"யின் நிர்வாகத்தில் இருந்து விலகிக் கொண்ட பொழுது, தனது வாரிசாக தன் இளைய மகன் சிவந்தி ஆதித்தனை ஆதித்தனார் நியமித்தார்.

நிர்வாகப் பொறுப்பை அவர் கையில் ஒப்படைக்குமுன், அவரை "தந்தி"யிலேயே ஓர் அச்சுக்கோக்கும் தொழிலாளியாக பணிபுரியச் செய்தார்; பிறகு பதவி உயர்வு கொடுத்து, அச்சு எந்திரப் பகுதிக்கு மாற்றினார்; அடுத்து அச்சிட்ட பத்திரிகைகளை கட்டுகளாகக் கட்டி ரெயிலுக்கு அனுப்பும் வேலை; அதன்பின் விளம்பர—விற்பனைப் பிரிவுகளிலே எழுத்தராக (குமாஸ்தாவாக) வேலை செய்ய வைத்தார். பின்பு, நிருபர்; துணை ஆசிரியர். இறுதியில் நெல்லையில் "மாலை முரசு" தொடங்கி, அதன் உரிமையாளர், நிர்வாகி, ஆசிரியர் என்று முழுப் பொறுப்புகளையும் அவரிடம் கொடுத்தார். அதிலே வெற்றிகண்ட பின்புதான் "தினத்தந்தி"யின் நிர்வாகத்தை அவர் கையிலே ஒப்படைத்தார், ஆதித்தனார்.

ஏன் இப்படி செய்தார்? தன் மகன் பத்திரிகைத் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் பயிற்சி—பழக்கம் பெற வேண்டும் என்பதற்காக மட்டுமா? இல்லவே இல்லை! அப்படி நினைத்திருப்பாரானால்,வேறொரு அலுவலகத்திற்கு அனுப்பினால்தான் கண்டிப்போடு பயிற்சி பெறுவார் என்று கருதி, வேறு அலுவலகத்திற்கு அனுப்பியிருப்பார். அப்படி விரும்பியிருப்பாரானால், மகனை லண்டனுக்கு அனுப்பி "டெய்லிமிரர்" பத்திரிகை அலுவலகத்திலோ, அமெரிக்காவுக்கு அனுப்பி, "நியூயார்க் டைம்ஸ்" அலுவலகத்திலோ பயிற்சி பெற்று வர வைத்திருக்க முடியும். அதற்கு அவருக்கு வாய்ப்பு உண்டு; வசதியும் அப்போது இருந்தது.

உண்மை என்னவென்றால், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற எண்ணம்—தொழிலாளர்கள், அவர்கள் எந்தத் தொழில் செய்யக்கூடியவர்களாக இருந்தாலும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஏற்றமுடன் மதிக்கப்பட வேண்டியவர்களே என்ற உணர்ச்சி ஏற்படவும், தொழிலாளர்களுடன் தானும் ஒரு தொழிலாளியாகக் கலந்து வாழப் பழக்கம் ஏற்படவும், அவர்களின் இன்ப துன்பங்களை அறிந்து பங்கு கொள்ளப் பயிற்சி ஏற்படவும், தொழிலாளர்களும் 'இவர் முதலாளி' என்று எட்டிப் போகாமல் 'நம்மில் ஒருவர்' என்று நெருங்கிப் பழக ஒரு வாய்ப்பு ஏற்படவுமே இவ்வாறு செய்தார், ஆதித்தனார்.

இது, தங்கள் வருங்கால வாரிசை நியமிப்பவர்களுக்கு ஒரு பாடமும் ஆகும்!

7. பத்திரிகையாளர்

"ஆதித்தனர்" என்ற பெயரைக் கேட்டதுமே நமக்கு இரண்டு செய்திகள் நினைவுக்கு வரும். ஒன்று, சுதந்திரத் தமிழ்நாடு; இன்னொன்று "தினத்தந்தி". தமிழும், "தந்தி"யும் அவருக்கு இரண்டு கண்களைப் போன்றவை.

விடுதலை கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சொல்ல—பரப்ப பத்திரிகை ஒரு சிறந்த கருவி என்று ஆதித்தனர் கருதினர்.

தமிழன்

"தமிழன்" என்ற வார இதழை முதலில் (1942–ல்) ஆதித்தனர் தொடங்கினர். அதன் முதல் இதழில், "நமது நோக்கம்" என்று தலைப்பிட்டு "சி. பா. ஆதித்தன்" என்று கையெழுத்திட்டு, "என்ன நோக்கத்துடன் இந்தப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது?" என்ற கேள்வியை எழுப்பி, இந்த நோக்கத்தை ஆதித்தனரே தெள்ளத் தெளிய தெரிவித்திருக்கிறர்.

"அந்நியர்களுக்குத் தமிழ்நாட்டில் இருக்கும் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்பது நமது நோக்கம். துண்டுபட்டுக் கிடக்கும் தமிழ்நாடு ஒன்றுபட வேண்டும் என்பது நமது நோக்கம். தமிழருக்கு ஆளும் உரிமை வேண்டும்; அரசு வேண்டும்; நாடு வேண்டும் என்பது நமது நோக்கம். தமிழர்கள் கூடி ஏற்படுத்தும் அரசு வளர்ந்து

ஐ. நா. சபை கட்டிடத்தில் ஆதித்தனார். அமெரிக்க சுற்றுப் பயணத்தின் போது உலக நாடுகள் (ஐ. நா.) சபைக்கும் ஆதித்தனார் போனார், அவருடன் இருப்பவர், அங்குள்ள ''இந்து'' பத்திரிகை நிருபர் பலராமன். (1956)

பிற நாட்டாரும் மதிக்கும் ஒரு வல்லரசாகவேண்டும் என்பது நமது நோக்கம்'' என்று ஆதித்தனுர் திட்டவட்டமாக அதிலே எழுதியிருக்கிறுர்.

''கல்கி'' கடிதம்

"கல்கி" இரா. கிருஷ்ணமூர்த்தி 20-8-42-ல் ஆதித்தனுருக்கு எழுதிய கடிதத்தில், "ஒரு காலத்தில் தமிழர்கள் தமிழகத்தில் மட்டுமேயன்றி, கடல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளிலும் ஆட்சி புரிந்தார்கள். தமிழ்க் கலைகளும், பண்பாடும் உலகமெங்கும் பரவி மேன்மை பெற்று விளங்கின. அத்தகைய மேன்மையை மீண்டும் பெற வேண்டும் என்று நம்மில் பலர் பகல் கனவு கண்டு வருகிறேம். அக்கனவை நனவாக்கும் முக்கிய நோக்கத்துடனேயே 'தமிழன்' பத்திரிகை வெளியாகிற தென்று அறிந்து அளவில்லாத உவகை கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு 23-ம் தேதி ஆதித்தனுர் எழுதியுள்ள பதிலில், "கடலுக்கு அப்பாலுள்ள தீவுகளிலும், தமிழர் ஆட்சி ஒரு காலத்தில் பரவியிருந்தது என்று தாங்கள் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். தமிழர்கள் தங்கள் நாட்டையாவது ஆளும் உரிமை பெற வேண்டுமென்பது என் கருத்து. தங்களின் "பார்த்திபன் கனவு"ம், எனது தமிழ் அரசுக் கனவும் நனவாகும் நாள் நெருங்கிவிட்டது என்றே நம்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

''கருவிலே திருவுடையார்''

ஆனுல், அரசியலுக்கு வந்தபின்தான் ஆதித்தனுரின் கவனம் பத்திரிகைகளின் மீது சென்றது என்று சொல்லிவிட முடியாது. "கருவிலே திருவுடையார்" என்பார்களே, அது போல, பத்திரிகை என்பது அவருடைய இரத்தத்திலேயே ஊறிப்போன ஒன்று. அவர் பிறவியிலேயே ஒரு பத்திரிகையாளர்! ஆசிய நாடுகளிலேயே பத்திரிகை உலகில் முடிசூடா மன்னனுக ஈடு இணையற்று ஆதித்தனுர் விளங்கினுர் என்றுல், அதற்குக்காரணம் அவரது உழைப்பும் ஊக்க

னும் மட்டுமல்ல; அவர் பிறவியிலேயே ஒரு பத்திரிகையாளர் என்பதும் தான்.

ஆதித்தனரின் தலைமையனுர் தையல்பாக (எஸ். டி.) ஆதித்தர், சென்னையில் டாக்டர் வரதராஜுலு நடத்திவந்த "தமிழ் நாடு" நாளிதழில் ஓவியராக இருந்தார். (எஸ்.டி.மிகச் சிறந்த கேலிப் படக்காரர் (கார்டூனிஸ்டு). இவர் வரைந்த கேலிப்படங்கள், இந்து, மெயில், ஸ்டேட்ஸ்மென் முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும், தேசமித்திரன், ஆனந்தவிகடன், ராஜாஜி நடத்திய "விமோசனம்" முதலிய தமிழ்ப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன.) இதனுல் தானும் பத்திரிகைத் துறையில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் ஆதித்தனருக்குப் பெருகியது.

படித்துக் கொண்டே சம்பாத்தியம்

ஆதித்தனர் லண்டனில் படித்துக் கொண்டு இருந்த ஐந்து ஆண்டுகளும், தனது படிப்பு செலவுக்கோ சொந்த செலவுகளுக்கோ பணம் கேட்டு அவர் வீட்டுக்கு கடிதம் எழுதியது இல்லை! தனது செலவுகளுக்கு வேண்டிய பணத்தை, பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரை, கடிதங்கள் எழுதி தானகவே சம்பாதித்துக் கொண்டார். சென்னை "சுதேசமித்திரன்" பத்திரிகைக்கு அவர் லண்டனில் இருந்து செய்திக் கடிதங்கள் எழுதி வந்தார். வேறு சில இந்தியப் பத்திரிகைகளுக்கும், சில ஆப்பிரிக்க நாட்டு பத்திரிகைகளுக்கும் செய்திக் கடிதங்கள் எழுதினர்.

சிங்கப்பூரில் வழக்கறிஞர் தொழில் நடத்திக் கொண்டிருந்த பொழுதே, பத்திரிகை நடத்தவும் விரும்பினர். ஆனல், அப்பொழுது அதற்கு சரியான வசதி கிடைக்கவில்லை. சிங்கப்பூரில் "தமிழ் முரசு" பத்திரிகையைத் தொடங்க கோ. சாரங்கபாணிக்கு மிகவும் துணையாக இருந்து உதவிகள் செய்தார்.

சிங்கப்பூரில் இருந்து 1942 ஏப்ரலில் தமிழகத்துக்குத் திரும்பினர். ஜூலை மாதத்தில் "தமிழன்" வார இதழை தொடங்கினர். ஆகஸ்டு

23-ம் தேதி முதல் இதழ் வெளிவந்தது. (ஜூன் 15-ம் தேதி "தமிழன்" என்ற பெயர் மதுரையில் பதிவு செய்யப்பட்டது.)

பாரதிதாசன் படம்

முதல் இதழில் பாவேந்தர் பாரதிதாசனின் வீரத்திருவுரு அட்டைப்படமாக இடம் பெற்றது. "நமதுடா இந்த நாடு! என்றும் நாம் இந்த நாட்டின் வேந்தர்" என்ற பாரதிதாசனின் பாடலும் வெளிவந்தது. "கல்கி" இரா. கிருஷ்ணமூர்த்தி, எஸ். எஸ். வாசன், ரசிகமணி டி. கே. சி., கவிஞர் சுத்தானந்த பாரதியார், சா. கணேசன், ராஜா சர். முத்தையா செட்டியார், நாடகத்தந்தை பம்மல் சம்பந்த முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழறிஞர் விபுலாநந்த அடிகள், சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் போன்றவர்கள் "தமிழனை"ப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

"நேர்த்தியான முறையில் அழகிய பத்திரிகையை ஒரு தமிழர் நடத்துவது காண அகமகிழ்கிறோம்." என்று அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்ட "திராவிடநாடு" (6–9–42 இதழ்) எழுதியது.

"தமிழர் முன்னேற்றமும் தமிழ் அரசும் இந்த ("தமிழன்") பத்திரிகையின் முக்கிய நோக்கங்களாயிருக்குமென்று அறிந்து பெரி தும் மகிழ்கின்றோம். பத்திரிகையை மிக மேலான முறையில் கொண்டு வருவதற்குத் தகுந்த அஸ்திவாரங்கள் முதல் இதழில் அமைந்திருக் கின்றன. பத்திரிகை முழுவதும் இருவர்ணங்களில் அச்சிடப்படும் பத்திரிகை தமிழ்நாட்டில் இதுவே முதலாவதாகும்'' என்று "கல்கி" (10–9–42 இதழ்) எழுதியது.

"தமிழருடைய நன்மைக்காக தாங்கள் (ஆதித்தனார்) உழைக்க முன்வந்திருப்பது தமிழரின் பாக்கியமாகும்." என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாராட்டினர்.

"பத்திரிகையின் அமைப்பும் தோற்றமும் புதிய முறையில் இருத்த லின் நாட்டு மக்கள் அனைவராலும் வரவேற்கப் பெறுமென நம்பு கிறேன். தங்களுடைய இந்த அருந்தொண்டிற்கு இக்காலத் தமிழர்

ரஷியாவில், ஸ்டாலின் பிறந்த விட்டில் ஆதித்தனர். ''பார்வையாளர் புத்தகத்தில்'' கையெழுத்திடுகிறவர் பொருளாதார நிபுணர் குமரப்பா. (1953)

களும், எதிர்காலத் தமிழர்களும் பெரிதும் நன்றிகூறக் கடமைப்பட்டு இருக்கிறார்கள்" என்று தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் புகழ்ந்தார்.

அன்பளிப்பு

"தமிழ"னுக்கு தமிழ் மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது. பத்திரிகை உலகிலே ஒரு புரட்சியை உண்டாக்கியது.

அந்தக்காலத்தில் பத்திரிகைகளுக்கு "விஷயதானம்" தான் செய்வார்கள். சில பெரியோர்களுக்கு மட்டும் பத்திரிகைகள் "சன்மானம்" வழங்கும். எழுத்தாளர்களுக்கு "அன்பளிப்பு" வழங்கும் வழக்கத்தை உண்டாக்கியதே "தமிழன்" தான். ஒரு சிறு துணுக்கு எழுதியவர்களுக்குக்கூட "அன்பளிப்பு" உண்டு. ரு. 1 முதல் ரு. 10 வரை அன்பளிப்பு வழங்கப்பட்டது. "ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமைக்குள் அன்பளிப்பு கிடைக்காதவர்கள் எங்களுக்குத் தெரிவியுங்கள்" என்று அறிவிப்பே வெளியிட்டார். தமிழுக்கு 'அன்பளிப்பு' என்ற சொல்லைத் தந்ததே "தமிழன்" தான்.

"தந்தி"யையும் தொடங்கியபின்பு, "தந்தி"யும் "தமிழ"னும் போட்டி போட்டுக்கொண்டு விற்பனையில் பெருகிவர, பத்திரிகைத் தாளுக்குக் கடுமையான பஞ்சம் ஏற்பட, 'இரண்டில் ஒன்றை நிறுத்த வேண்டும்' என்ற நிலை தோன்றியது. "வார இதழை புதிதாக எப்பொழுது வேண்டுமானாலும் தொடங்க முடியும்; நாளிதழ் தொடங்குவது அவ்வளவு எளிதல்ல" என்று எண்ணி, 1944-ல் மிகவும் துயரத்துடன் "தமிழ"னை நிறுத்தினார். ஆயிரம் பிரதிகளுடன் ஆரம்பமான "தமிழன்", நின்ற பொழுது ஏழாயிரம் பிரதிகள் விற்றுக் கொண்டிருந்தது. ஏழாயிரம் இதழ்கள் விற்பது என்பது அக்காலத்தில் ஓர் அசுர சாதனையாகும். அக்காலத்தில் முன்னணியில் இருந்த "கல்கி" பத்தாயிரம் பிரதிதான் விற்பனையாயிற்று.

8. தினத்தந்தி

"தமிழன்" வார இதழைத் தொடங்கியதுமே, "தந்தி" நாளிதழ் தொடங்குவதற்கான வேலையையும் ஆதித்தனுர் ஆரம்பித்துவிட்டார். 15–10–42–ல் "தந்தி" நாளிதழாக மதுரையில் பதிவு செய்யப்பட்டது.

"தமிழ"னுக்கும் தந்திக்கும் ஒரு வேறுபாடு உண்டு. "தந்தி" ஆதித்தனுரின் இளமைக்கனவு. பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுதே தானும் ஒரு பத்திரிகையாளனுக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதைத் "தந்தி" வாயிலாக நிறைவேற்றிக் கொண்டார்.

வாழ்க்கைப் போராட்டம்

"தந்தி"யை ஆதித்தனுரின் வாழ்க்கைப் போராட்டம் என்றே சொல்லலாம். பல இன்னல் இழப்புகளுக்கு இடையே அதை வளர்த்தார். அலைபோலத் தொடர்ந்து வந்த மலைபோன்ற துன்பங்களை தான் ஒருவனே தனித்து நின்று போராடி வெற்றி கண்டார்.

பிறந்த வீட்டிலிருந்தோ பெண் எடுத்த வீட்டிலிருந்தோ, உற்றார் உறவினரிடம் இருந்தோ அவர் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவில்லை. 'தன் கையே தனக்கு உதவி' என்று எதிர்ப்பட்ட இன்னல்களையெல்லாம் ஏற்று, தான் ஒருவனுகவே தனித்து நின்று "தந்தி"யை வளர்த்தார்.

உண்மையைச் சொன்னுல், லண்டனுக்கு சென்று பாரிஸ்டர் வேலைக்குப் படித்து சிங்கப்பூரில் சிறப்பாகத் தொழில் நடத்திய ஆதித்தனுர், தமிழ்நாட்டுக்குத் திரும்பி பத்திரிகை நடத்தியது அவருடைய உறவினர் யாருக்குமே பிடிக்கவில்லை. "பத்திரிகை நடத்தப் போகிறேன்" என்று பெண் கொடுத்த மாமனுரிடம் அவர் சொன்ன பொழுது, "ஏன் மாப்பிள்ளை இப்படி பணத்தை பாழாக்கப் போகிறீர்

கள்?" என்றுதான் மாமனார் கேட்டார். "வக்கீல் வேலை பிடிக்க வில்லையா? வேறு ஏதாவது தொழில் செய்ய விரும்புகிறீர்களா? அரிசி வாங்கி விற்றால் சாக்காவது மிச்சப்படும்; பருப்பு வாங்கி உடைத் தால் உமி, குருணையாவது மீதப்படும். பத்திரிகை நடத்தினீர்கள் என் றால், என்ன மிஞ்சும்? இருப்பதும் போய்விடும்!" என்று சொன்னார். அவர் சொன்னது உண்மைதான். "தந்தி" வளர்வதற்கு முன்பு, சிங்கப் பூரில் சம்பாதித்த செல்வத்தையெல்லாம் இழந்து பெருங்கடனாளி யாகவும் ஆகிவிட்டார்.' மாமனார் பேச்சையும் மீறி "தந்தி"யைத் தொடங்கிவிட்டதால், ஆதித்தனாருடன் ஆறுமாதம் பேசாமல் இருந் தார், மாமனார்!

ஆதித்தனார் சிங்கப்பூருக்கு சென்றதே "தந்தி" நடத்த பணம் சேர்க்கத்தான். 'பாரிஸ்டர்' பட்டம் பெற்ற கையோடு சிங்கப்பூரில் திருமணத்தையும் முடித்துக் கொண்டு 1933-ல் சென்னைக்குத் திரும்பி னார். ஒருநாள் மாமனாருடன் பேசிக் கொண்டு இருந்தபோது, "ஒரு 20 ஆயிரம் ரூபாய் இருந்தால், உடனே ஒரு வாரப்பத்திரிகை தொடங்கலாம். அதையே பிற்பாடு தினசரியாக மாற்றிக் கொள்ள லாம்" என்று தெரிவித்தார். மாமனாருக்கு விருப்பம் இருந்திருந்தால் 20 இலட்சம்கூட கொடுக்க முடியும். ஆனால், ஆதித்தனார் பத்திரிகைத் தொழில் நடத்துவது மாமனாருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. "சிங்கப்பூரிலே பாரிஸ்டர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. நீங் களும் அங்கே போய் சம்பாதிக்கலாம். அந்தப் பணத்தைக் கொண்டு வந்து பத்திரிகை தொடங்கலாமே" என்று சொன்னார். ஆதித்தனார் எப்படியாவது பாரிஸ்டர் தொழில் பார்க்க வேண்டும் என்பது மாமனாரின் ஆசை! ஆனால், அவர் சொன்ன யோசனை ஆதித்தனாருக்கு சரி என்றே பட்டது. சிங்கப்பூருக்கு சென்றார். அங்கே எட்டு ஆண்டுகள் சம்பாதித்த பணத்துடன் தமிழ் நாட்டுக்கு திரும்பி வந்தார். அதன் பிறகுதான் 'தந்தி'யைத் தொடங்கினார்.

முதல் தொழிலாளி

"தந்தி"க்கு தனது உழைப்பையே மூதல் முதலீடாக வைத்தார், ஆதித்தனார். "தந்தி"யின் முதல் தொழிலாளி அவர்தான். உழைப்

பிறல் உயர்ந்தவர், அவர்.

"தந்தி" தொடங்கிய பொழுது உலகப் பெரும் போர் நடந்து கொண்டிருந்ததால், பத்திரிகைக் காகிதம் கிடைக்கவில்லை. வைக்கோலை ஊறவைத்து ஆதித்தனுரே காகிதம் செய்தார். அதற்கு "தமிழன் கைக் காகிதம்" என்று பெயர் வைத்தார். அதிலேதான் தந்தி அச்சிடப்பட்டது. "தந்தி" அலுவலகத்துக்கு நாள்தோறும் காலை யில் வைக்கோல் வண்டி வரும். மறுநாள் காலையில் அந்த வைக்கோல் "தந்தி"யாக மாறி வெளியேவரும்!

வைக்கோலை ஊறவைத்து கூழாக அரைக்கும் பொழுது ஒரே நாற்றமாக அடிக்கும். ஆனுலும், ஆதித்தனுர் அருகிலேயே நிற்பார். வைக்கோல் ஊறவைப்பதில் இருந்து, பத்திரிகை அச்சாகி வெளி யேறும்வரை எல்லா வேலைகளும் அவரது நேரடிப் பார்வையிலேயே நடைபெறும். எல்லாக் கட்டத்திலும் அவரும் ஒரு தொழிலாளி யாகவே மாறிவிடுவார்.

வைக்கோலை அரைத்து கூழாக்கி தாள் செய்ததும், அதைக் காய வைப்பார்கள். இதற்காக மாரியம்மன் தெப்பக்குளம் அருகே ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்திருந்தார். காலையிலே காய வைத்து, மாலையிலே எடுத்து வந்து, இரவிலே பத்திரிகை அச்சிடு வார்கள்! மழை நாட்களில் மிகவும் தொல்லைப்படுவார்கள். ஆனுல், ஒருநாள்கூட பத்திரிகை வெளிவராமல் நின்றது இல்லை.

அதிகாலையிலேயே அலுவலகத்திற்கு வந்தால், பத்திரிகை அச்சாகி வெளியேறும்வரை— நள்ளிரவுக்கு மேலும்— அலுவலகத்திலேயே இருப்பார். பசி நோக்கார்; கண் துஞ்சார். அலுவலகம் வைகை ஆற்றின் தென்கரையில் இருந்தது. வீடு, வடகரையில் சொக்கி குளம் பகுதியில். இரவு வேலை முடிந்ததும், ஆற்று வழியே நடந்தே வீடு போய்ச் சேருவார். ஆற்றில் வெள்ளம் வந்தால், நீந்திச் சென்று விடுவார்!. அப்பொழுது போர் நேரமாதலால் அடிக்கடி ஊரடங்கு

சட்டம் அமுலுக்கு வரும். ஆனாலும், ஆற்று வழியே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடுவார்.

சிறந்த நிர்வாகி

வெறும் பத்திரிகையாளராக மட்டும் இருந்திருந்தால், ஆதித்தனார் இந்த அளவுக்கு வெற்றி கண்டிருக்கமாட்டார். அவர் தொழில் நுட்பமும் அறிந்தவர். தொழிலை நடத்தும் திறமையும் அவரிடம் இருந்தது. சிறந்த நிர்வாகியும் ஆவார்.

அக்காலத்தில் சென்னைக்கு வெளியே நாளிதழ்களே கிடையா. மதுரையில் தொடங்கப்பட்ட முதல் நாளிதழ் "தந்தி" தான். செய்திகள் எல்லாம் தந்தி மூலமே வந்து சேரும். தந்திச் செலவைப் பகிர்ந்து கொள்ள வேறு பத்திரிகைகள் இல்லாததால், "தந்தி" யே ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. ஆனால், இதனால் "தந்தி" க்கு வேறொரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. மதுரையிலிருந்து 150 மைலுக்குள் இருப்பவர்களுக்கு அன்றைய செய்திகள் அன்றே வழங்கப்படும். ஒரு தினம் காத்திருந்து செய்தித்தாள்களைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை" என்று கூறி, வாசகர்களைக் கவர்ந்தார்.

செய்திகளின் தலைப்பில் நட்சத்திரக் குறியிட்டு, "இந்த செய்தி மற்ற பத்திரிகைகளில் நாளைதான் வெளிவரும்" என்று குறிப்புக் கொடுத்தார்!

திருப்பரங்குன்றத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் ராஜாஜி கோஷ்டியை காமராஜர் கோஷ்டி வெளியேற்றிய பொழுது "தந்தி" தனிப்பதிப்பு வெளியிட்டு, அச்செய்தியை உடனே மக்களுக்கு வழங்கியது.

உள்ளூர் தொழிலாளர்கள்

அக்காலத்தில் பத்திரிகை அச்சிடும் எந்திரங்களை இயக்க எல்லா அலுவலகங்களிலும் வெள்ளைக்கார என்ஜினீயர்களே இருப்பார்கள். ஆனால், ஆதித்தனார், தன் ஊர்ப்பக்கமுள்ள கிராமவாசிகளை அழைத்து

வந்து, எந்திரங்களை இயக்கப் பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டே எந்திரங்களை ஓட்டினார்.

இதே போல, அக்காலத்தில் 'உயர்ந்த சாதி' என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள்தான் அச்சுக் கோப்பாளர்களாக இருந்தார்கள். "தாழ்த்தப்பட்டவர்கள்", "தீண்டத்தகாதவர்கள்" என்றெல்லாம் மற்றவர்களால் ஒதுக்கப்பட்டவர்களை அழைத்து வந்து, அச்சுக் கோக்கப் பழக்கி, தனது அலுவலகத்திலேயே வைத்துக் கொண்டார். இதை எதிர்த்து உயர் சாதியைச் சேர்ந்த சில தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கூட செய்தார்கள்!

"பத்திரிகை என்பது வெள்ளைக்காரன் கண்ட தொழில். ஆகவே, அத்துறையில் நாம் முன்னேற வேண்டுமானால், அவர்களைத்தான் பின்பற்ற வேண்டும்" என்று ஆதித்தனார் அடிக்கடி கூறுவார். உலகிலேயே விற்பனை அதிகமுள்ள "டெய்லிமிரர்" என்ற லண்டன் செய்தித்தாளைத்தான் அவர் பின்பற்றினார்.

தமிழ்ப் பத்திரிகைகளில் நாள்தோறும் தொடர்ந்து கருத்துப் படம் ("கார்ட்டூன்") வெளியிட்டவர், ஆதித்தனார்தான். படக்கதை, சிரிப்பு போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுக்கு வழிகாட்டியதும், "தந்தி"தான்.

மக்கள் பத்திரிசை

"தந்தி"யின் வெற்றிக்கு மற்றொரு முக்கியமான காரணமும் உண்டு. அதை "மக்கள் பத்திரிகை"யாக ஆதித்தனார் நடத்தினார். "மக்கள் தமி"ழிலேயே செய்திகளை எழுதினார். "பேச்சுத் தமிழை கொச்சை நீக்கி எழுத வேண்டும்" என்பது "தந்தி"யின் பொற்சட்டம் (Golden Rule) ஆகும்.

"புலவர் தமிழை 'கல்கி' எளிய தமிழாக ஆக்கினார். தந்தி மக்கள் தமிழாக ஆக்கியது" என்று ஆதித்தனார் சொல்லுவார். "புள்" என்று புலவர்கள் எழுதியதை "பறவை" என்று கல்கி எழுதினார். "குருவி" என்று எழுத வைத்தார், ஆதித்தனார்.

பத்திரிகையில் செய்தித்துறையில்தான் முழுக்க முழுக்க ஆதித்தனர் கவனம் செலுத்தினர்.

"தந்தி" அலுவலகத்தில் ஒரு தொழிலாளியின் பொம்மை வாங்கி வைத்திருந்தார். "நீங்கள் எழுதியிருப்பதை இந்த பொம்மையிடம் படித்துக் காட்டுங்கள். அது 'புரிகிறது' என்று தலையை ஆட்டினால் அந்த செய்தியை அச்சுக் கோக்க அனுப்புங்கள். தலையை ஆட்டாவிட்டால், மீண்டும் செய்தியை எளிய முறையில் திருத்தி எழுதுங்கள்" என்று துணை ஆசிரியர்களிடம் கூறுவார்.

எளிய தமிழில் எழுதுவதற்காக தமிழுக்கு பல புதிய சொற்களையும் ஆதித்தனர் உருவாக்கிக் கொடுத்தார்.

செய்திகளை மக்களுடைய கோணத்திலிருந்தே வெளியிட வேண்டும் என்றார், ஆதித்தனர். "தபால் கார்டு விலை உயர்கிறது" என்று மற்ற பத்திரிகைகள் செய்தி வெளியிட்டால், "6 காசு கொடுத்து தபால் கார்டு வாங்கிக் கொண்டு இருக்கும் நீங்கள், இனி 10 காசு கொடுத்தால்தான் தபால் கார்டு கிடைக்கும். ஏனென்றால், இன்று முதல் தபால் கார்டின் விலை உயர்ந்து இருக்கிறது" என்றுதான் "தந்தி"யிலே செய்தி வெளிவரும்.

செய்தித் தலைப்புகள் வாசகர்களைக் கவரும் வகையில்—படிக்கத் தூண்டும் முறையில் அமைய வேண்டும் என்று ஆதித்தனர் சொல்லுவார். இதை "எடுத்துக் கொடுத்தல்" என்பார். "என் மாமியார் ஒரு முறை நான் சாப்பிடுவதற்கு எள்ளுருண்டை கொண்டுவந்து வைத்தார். அது வெள்ளையாக இருந்தது. ஆகவே, நான் சாப்பிடத் தயங்கினேன். "அது நெய்யில் செய்தது. சாப்பிட சுவையாக இருக்கும். உடம்புக்கு நல்லது' என்று என் மாமியார் சொன்னர். உடனே நான் எள்ளுருண்டையை விரும்பிச் சாப்பிட்டேன். அதே போல, நாம் சொல்லும்—எழுதும் முறை வாசகர்களைப் படிக்கத் தூண்டுவதாக அமைய வேண்டும்" என்று கூறுவார்.

எதையும் நகைச்சுவையோடு எழுத வேண்டும் என்றும் சொல்லுவார். "இடுக்கண் வருங்கால் நகுக" என்ற குறளை அடிக்கடி கூறுவார்.



"தினத்தந்தி" வெள்ளி விழா சின்னத்தை ஆதித்தனருக்கு வழங்குகிறார், அறிஞர் அண்ணா. (1968)

ஆதித்தனர் லண்டனில் படித்துக் கொண்டு இருந்த பொழுது தான், வட்டமேஜை மாநாடு நடந்தது. அதில் மகாத்மா காந்தி கலந்து கொண்டார். மாநாட்டு நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் மற்ற நிருபர்கள் சேகரித்தார்கள். "மாநாடு நடந்து கொண்டிருந்த பொழுதே காந்தி எழுந்து உள்ளே சென்ருர். சற்று நேரம் கழித்து மீண்டும் திரும்பி வந்தார். ஆடிக்கொண்டிருந்த ஒரு பல்லை பிடுங்கிப் போட்டுவிட்டு வரவே அவர் எழுந்து சென்ருர்!" என்ற செய்தியை தனது பத்திரிகைகளுக்கு அனுப்பியவர், ஆதித்தனர் ஒருவர்தான்!

முன்னணியில் தமிழகம்

"தினத்தந்தி"யை மக்களின் பத்திரிகையாகவே—மக்களை நம்பி மக்களுக்காகவே நடத்தினர். காலையில் எழுந்ததும் சாதாரண மக்கள் கையில்கூட "தந்தி"யைக் காணமுடியும். மக்களும் தந்தியை தங்கள் சொந்தப் பத்திரிகையாகவே மதிக்கிருர்கள்.

"தந்தி" மக்களுக்கு வெறும் செய்தியை மட்டும் தரவில்லை. ஒரு ஊழியனுகவே உழைத்து வருகிறது. குழந்தை காணமல் போன செய்தியைத் தந்தியிலே வெளியிட்டு, "தந்தியின் உதவியினல்தான் என் குழந்தையைக் கண்டுபிடிக்க முடிந்தது." என்று வாயாரப் புகழ்ந்த பெற்ருேர் பலர். பல கொலை—கொள்ளை வழக்குகளில் "தினத்தந்தி"யினல்தான் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடிந்தது என்று போற்றிய போலீஸ் அதிகாரிகள், பலர்.

'படித்தவர்கள்தான் பத்திரிகை படிப்பார்கள்—படிக்க முடியும்", என்ற நிலையை மாற்றியவர், ஆதித்தனர். எளிய தமிழிலே எழுதி எல்லோரும் பத்திரிகை படிக்க முடியும் என்று செய்தார். சாதாரண தொழிலாளர்களையும் தினசரிப் பத்திரிகை படிக்க வைத்தார்.

தமிழகப் பத்திரிகைத் துறைக்கு ஆதித்தனர் ஆற்றியுள்ள பணி அளவிட முடியாததாகும். ஆசிய நாடுகளிலேயே பத்திரிகைத் துறையில் தமிழகந்தான் இன்று முன்னணியில் நிற்கிறது என்ருல் அதற்குக் காரணம், ஆதித்னரே!

பெயர் ஏன்?

மதுரையில் 1942 நவம்பர் 1–ம் நாள் அன்று "தந்தி" வெளிவரத் தொடங்கியது. "இந்து" பத்திரிகையல் துணை ஆசிரியராக இருந்த

சருநாத அய்யர் வந்து வெளியீட்டு விழாவை நடத்தி வைத்தார்.

"தந்தி" என்று ஏன் பெயர் வைக்கப்பட்டது? அது, ஒரு மக்களின் பத்திரிகைக்கு மக்களே சூட்டிய பெயர் ஆகும்!

"இந்த தினசரி பத்திரிகைக்கு பல அழகிய பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றை வைக்கலாமென்று வாசகர்கள் ஆலோசனை கூறினர்கள். நண்பர்கள் கூறிய எல்லாப் பெயர்களையும் நாம் நன்ருகப் பரிசிலனை செய்தோம். அவற்றில் "தந்தி" என்ற பெயரைத் தேர்ந்து எடுத்தோம். அந்தப் பெயரே மிகவும் பொருத்தமானது. ஏனென்ருல், உள்நாட்டு செய்திகள், வெளிநாட்டு செய்திகள் ஆகியவை எல்லாம் தந்தி மூலமாகவே நமது "தந்தி"க்கு வந்து சேர ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்று "தமிழன்" அக்டோபர் 18-ம் தேதி இதழில் எழுதியிருக்கிருர்.

"தந்தி" என்று பெயர் சூட்டியவருக்கு ரூ. 100 பரிசும் வழங்கப்பட்டது.

நம்பமுடியாத வளர்ச்சி

தொடக்கத்தில் நாள்தோறும் ஆயிரம் பிரதிகள்தான் "தந்தி" அச்சிட்டார். விரைவிலேயே ஏழாயிரம் பிரதி அளவுக்கு வளர்ந்தது. அப்பொழுது ஏழாயிரம் பிரதிகள் விற்றது அதிசயமாகக் கருதப்பட்டது!

ஒருநாள் "தந்தி"க்கு விளம்பரம் கொடுக்கும்படி டி. வி. எஸ். கம்பெனியின் அதிபர் டி. எஸ். சந்தானத்தை சந்தித்து ஆதித்தனர் கேட்டார். "எவ்வளவு பத்திரிகைகள் விற்பனையாகின்றன?" என்று சந்தானம் கேட்டார். "ஏழாயிரம்" என்று ஆதித்தனர் தெரிவித்தார். ஆனல், சந்தானம் அதை நம்பவில்லை! "சென்னையில் அச்சாகும் பத்திரிகைகளே பத்தாயிரம்தானே விற்பனையாகின்றன" என்ருர். "நீங்கள் வேண்டுமானல், என்ருவது இரண்டாவது காட்சி சினிமாவுக்குப் போகும்போது, படம் முடிந்து வரும் வழியில் திடீர் என்று தந்தி அலுவலகத்துக்கு வாருங்கள். எவ்வளவு பிரதிகள் அச்சிடுகிருர்

கள் என்பதை நேரில் பாருங்கள்" என்று ஆதித்தனூர் கூறினர். "சரி பார்த்து சொல்லுகிறேன்" என்று சந்தானம், ஆதித்தனாரை அனுப்பி விட்டார்.

ஆனல், அன்றே நள்ளிரவு 3 மணி அளவில் 'தந்தி' அலுவலகத்துக்கு சந்தானம் வந்தார்! எவ்வளவு பிரதிகள் அச்சிடுகிறார்கள் என்று நேரிலே பார்த்தார். ஆதித்தனூர் சொன்னது உண்மை தான் என்று கண்கூடாகக் கண்டார்! மறுநாள் காலையிலேயே "தந்தி"க்கு விளம்பரம் அனுப்பி வைத்தார்!.

தொழில் வளர்ச்சி

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியிலும் "தந்தி"க்குப் பங்குண்டு. புதிதாகத் தொழில் தொடங்கியவர்களுக்கு 'தந்தி' மிகக் குறைந்த கட்டணத்தில் விளம்பரங்களை வெளியிட்டது. இதனுல் வளர்ந்த தொழில்கள் பல.

குறிப்பாக மதுரையில் உள்ள "சைபால்" மருந்துக் கம்பெனியை சொல்ல வேண்டும். அங்குலத்துக்கு அரையணு, ஓரணு என்ற கட்டணத்தில்கூட "சைபால்" விளம்பரங்களை வெளியிட்டார்கள். மிகக் குறைந்த முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட சைபால் கம்பெனி, இன்று தமிழகத்திலேயே மிகச் சிறந்த மருந்துக் கம்பெனிகளில் ஒன்ருக விளங்குகிறது என்றுல், அதற்குக்காரணம் "தந்தி" தந்த விளம்பரம் தான்.

கலைகளையும், கலைஞர்களையும் "தந்தி" போற்றி வளர்த்தது. "நாங்கள் நாடகக்குழு தொடங்கிய காலத்தில் "தந்தி" மிகக் குறைந்த கட்டணத்தில்—சில நேரங்களில் இலவசமாகக்கூட—விளம்பரம் கொடுத்து உதவியது. நாடு அறிந்தவர்களாக நாங்கள் வளர—புகழ் பெறத் துணையாக இருந்தது "தந்தி"தான்" என்று அவ்வை தி. க. சண்முகம் கூறியிருக்கிறுர்.

விளம்பரங்களுக்குக்கூட மக்களையேதான் "தந்தி" நம்பியிருந்தது.

அரசாங்க விளம்பரங்களை எதிர்பார்க்கவேயில்லை. காங்கிரஸ் அரசாங்கமும் "தந்தி"க்கு விளம்பரம் கொடுக்கவும் இல்லை.

கல்வி வளர்ச்சி

தமிழகத்தின் கல்வி வளர்ச்சியிலும் "தினத்தந்தி"க்குப் பங்கு உண்டு.

ஆண்டுதோறும் பள்ளி இறுதிவகுப்பு (எஸ். எஸ். எல். சி.) தேர்வில் தமிழகத்திலேயே முதன்மையாகத் தேறும் மாணவனுக்கு "தினத்தந்தி" ரூ. 1000 பரிசு அளிக்கிறது.

இந்தியாவிலேயே எந்த ஒரு பத்திரிகையும் செய்யாத அரும்பணி, இது.

நிற்கக்கூடாது

1943 செப்டம்பரில் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் "தந்தி"யின் சென்னைப் பதிப்பு தொடங்கியது.

அப்பொழுது ஒருநாள் சரியான அடைமழை. புயலும் வீசியது. ஒருநாள் முழுவதும் மின்சாரம் அடியோடு நின்றுவிட்டது. அந்த நிலையிலுங்கூட பத்திரிகையை வெளியேற்றினர், ஆதித்தனர்.

பத்திரிகை அலுவலகத்தில் முழங்கால் அளவு தண்ணீர்!) "பெட்ரோமாக்ஸ்" விளக்குகளை வைத்து செய்திகளை எழுதி, அச்சுக்கோத்தார்கள். மின்சாரம் இல்லாமல் எந்திரத்தை எப்படி இயக்குவது? மனித சக்தியை நம்பினர். கையினலேயே எந்திரத்தை சுற்றி, பத்திரிகை அச்சிட்டார்.

மறுநாள் காலையில் வெளிவந்த ஒரே பத்திரிகை "தந்தி"தான். "ஜப்பான்காரன் குண்டு வந்து விழுந்தால்கூட "தந்தி" நிற்காது. வாசகர்களுக்கு கிடைக்கும்" என்ருர். பத்திரிகை வெளிவருவதில் ஒருநாள்கூட தவறக்கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

தினத்தந்தி

1948-ல் சென்னை லஸ் பகுதியில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் "தினத்தந்தி"யைத் தொடங்கினர். அதுமுதல் "தந்தி" என்ற பெயர்

"தினத்தந்தி"யாக மாறியது.

(1-1-53 முதல் எல்லா ஊர்ப் பதிப்புக்கும் "தினத்தந்தி" என்று பெயர் சூட்டப்பட்டது.)

"தினத்தந்தி" மளமளவென்று வளர்ந்தது. 1959-ல் மவுண்ட் ரோடுக்கு முன்னேறியது. 1960-ல் எழும்பூரில் சொந்தமாக நாலு மாடி கட்டிடம் கட்டிக் கொண்டு குடியேறியது. இவ்வளவு பெரிய சொந்தக் கட்டிடத்தில் நடைபெறும் ஒரே தமிழ் நாளிதழ் "தினத் தந்தி"தான். நாள்தோறும் எட்டு பக்கங்களுடன் வெளி வரும் ஒரே தமிழ் நாளிதழும் "தினத்தந்தி"தான்!

இன்று மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய நகரங்களிலும் "தினத்தந்தி" அச்சாகிறது. 'காலையில் எழுந்ததும் தந்தி' என்று சொல்லும் அளவுக்கு தமிழர்களின் வாழ்க்கையுடன் "தினத்தந்தி" ஒன்றிவிட்டது.

மாபெரும் சாதனை

"தினத்தந்தி"யின் வளர்ச்சி சாதாரணமானது அல்ல. அது ஒரு மாபெரும் சாதனையாகும். 14-2-60-ல் சென்னையில் நடந்த தமிழக அரசாங்க ஆஸ்பத்திரி தொழிலாளர் மாநாட்டில் ஆதித்தனாரின் படத்தைத் திறந்து வைத்து ஈ. வெ. ரா. பெரியார் ஆற்றிய சொற்பொழிவை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்:—

"செயற்கரிய செய்த பெரியார், ஆதித்தனார். யாருமே செய்யாத அரிய செயல்களை அவர் செய்திருக்கிறார். இதை நான்தான் நன்கு உணர்கிறேன். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழனுக்கு என்று ஒரு பத்திரிகை கிடையாது. ஒரு சிலர் ஆரம்பித்த பத்திரிகைகளும் தலை தூக்க முடியாமல் ஒழிந்தன. ஆதித்தனார் ஒரு பத்திரிகை ஆரம்பித்தார்—மளமளவென்று வளர்ந்தது. எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு வளர்ந்தது. நன்றாகவே வேரூன்றிவிட்டது. இது எவ்வளவு பெரிய செயல் என்று எனக்குத்தான் தெரியும். 'நாமும் பத்திரிகை நடத்தலாம்' என்ற துணிவை மற்றவர்களுக்குக் கொடுத்தவர்,

ஆதித்தனார்தான். ஆகவேதான் ஆதித்தனாரை 'செயற்கரிய செய்த பெரியார்' என்று சொல்லுகிறேன்."

பத்திரிகை சுதந்திரம்

பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஆதித்தனார் தவறியதே இல்லை. அதற்கு ஆபத்து வந்தபோது துணிந்து எதிர்த்தார்.

"தமிழன்", "தந்தி" தொடங்கிய காலத்தில் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. ஆகவே, செய்திகள் வெளியிடுவதில் பத்திரிகைகளுக்கு பல கட்டுதிட்டங்கள் விதிக்கப்பட்டன.

"பொதுமக்களுக்குப் பத்திரிகைகள் கண்கள் போன்றவை. அந்தக் கண்களைத் திறக்க வேண்டுமானால் சர்க்கார் தாங்கள் அறிந்து கொள்ள முடியாத பத்திரிகைத் தொழிலில் தலையிடாமல் இருக்க வேண்டும். அவர்கள் போட்டிருக்கும் கட்டுப்பாடுகளை உடனே தளர்த்திவிட்டு, பொதுமக்களிடமிருந்து பறித்துக் கொண்ட கண்களை திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்''என்று அந்நியர் (ஆங்கிலேயர்) ஆட்சிக் காலத்திலேயே எழுதினார். ("தமிழன்" முதல் இதழ்).

போர்ச் செய்திகளை விரிவாக வெளியிட்டதற்காக, "தந்தி" ஆசிரியரை அழைத்து அதிகாரிகள் பலமுறை எச்சரித்தார்கள். சென்னைப் பதிப்பை நிறுத்தும்படியும் கட்டளை பிறப்பித்தார்கள்.

பொதுத்தேர்தல்

1967-ம் ஆண்டிலே நடந்த பொதுத்தேர்தலில் எதிர்ப்பு அணிக்கு "தினத்தந்தி" முழுஆதரவு அளித்தது.

தேர்தல் முடிவிலே, "தமிழ் நாட்டில் எதிர்ப்பு அணி இவ்வளவு பெரும் வெற்றி பெற்றதில் கால்பங்கு "தினத்தந்தி"க்கு உரியது" என்று ராஜாஜி பாராட்டினார்.

மாலை முரசு

வெள்ளைக்கார நாடுகளில் போல தமிழகத்திலும் மாலைப் பத்திரிகைகள் தோன்ற வேண்டும் என்பது ஆதித்தனாரின் ஆசை.

எனவே, தன் மகன்கள், மருமகன் வாயிலாக மாவட்டந்தோறும் "மாலைமுரசு" பத்திரிகையை தொடங்கி வைத்தார்.

சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், கோவை ஆகிய நகரங்களில் இப்பொழுது "மாலைமுரசு" அச்சாகிறது.

காகித ஆலை

பத்திரிகைகள் நடத்த பத்திரிகைத்தாள் முக்கியமாகத் தேவை. வெளிநாடுகளில் இருந்து பெருமளவில் பத்திரிகைத்தாளை இந்தியா இறக்குமதி செய்கிறது. எத்தனை நாளைக்கு நாம் பிறர் கையையே எதிர் பார்க்க முடியும்? அதோடு மேல் நாடுகளில் பெரிய பத்திரிகைகள் எல்லாம் சொந்தத்திலேயே காகித ஆலைகளும் வைத்திருக்கின்றன. ஆகவே,சொந்தத்திலேயே பத்திரிகைத்தாளையும் தயாரிக்க ஆதித்தனார் திட்டமிட்டார்.

1942–ல் "தந்தி" தொடங்கிய காலத்தில் பத்திரிகைத்தாள் கிடைக்காமல், வைக்கோலை அ ரை த் து கைக் காகிதம் தயாரித்து பத்திரிகை அச்சிட்டார். அப்பொழுது "தந்தி" ஆயிரக் கணக்கான பிரதிதான் விற்றது. இப்பொழுதோ இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகின்றன. கைக்காகிதத்தையே நம்பிக் கொண்டு இருக்க முடியுமா? அதோடு வேகமாக அச்சிடும் "ரோட்டரி" அச்சகத்துக்கு கைக்காகிதம் பயன்படாது. ஆகவே. காகித ஆலையைத் தொடங்க முயற்சி எடுத்துக் கொண்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் "உடை மரங்கள்" ஏராளமாக வளர்கின்றன. இந்த மரங்களை விறகாக எரிப்பதற்கு மட்டுமே மக்கள் பயன்படுத்தி வந்தார்கள். இந்த மரத்தை அரைத்துக் கூழாக்கி காகிதம் செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியில் ஆதித்தனார் இறங்கினார். அவரே, மரத்தை துண்டாக்கி, தூளாக்கி, காகிதம் செய்து பார்த்தார். உடை மரத்தில் இருந்து காகிதம் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. உடனே, உடை மரத்துண்டுகளை வெட்டி, டேராடூனில் உள்ள காட்டுவள ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பினார். அங்கேயுள்ள நிபுணர்கள் பரிசோதனைகள் நடத்தி, உடை மரத்தில்

இருந்து காகிதம் தயாரிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தினர்கள்.

அதன்பின், திருநெல்வேலியை அடுத்த அரியநாயகிபுரத்தில் தாம்பரவருணி ஆற்றங்கரையில் "சன்பேப்பர் மில்" என்ற காகித ஆலை, 1962–ல் அவருடைய தமையனர் தையல்பாக(எஸ்.டி.) ஆதித்தன் முயற்சியில் தொடங்கப்பட்டது. இக்காகித ஆலைக்கு வருகை புரிந்த மூன்னள் தொழில் அமைச்சர் ஆர். வெங்கடராமன், ஒன்றுக்கும் உதவாது—வெறும் விறகுதான் என்று நினைக்கப்பட்ட உடை மரத்தில் இருந்து காகிதம் தயாரிக்க முயற்சி எடுத்துக் கொண்ட ஆதித்தனரைப் பாராட்டினர்.

இந்த ஆலையில் தயாராகும் காகிதம் "தினத்தந்தி"க்கு பயன்படுவதுடன், மற்ற பத்திரிகைகளும் வாங்கி பயன்படுத்துகின்றன. எனவே, இக்காகித ஆலையும் பத்திரிகை உலகிற்கு ஆதித்தனர் செய்த ஒரு பெருந்தொண்டே ஆகும்.

வெள்ளி விழா

இவ்விதம், கடந்த 25 ஆண்டுகளாக தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் இடைவிடாப் பணியாற்றி வரும் "தினத்தந்தி"யின் வெள்ளிவிழா, 1968 ஆகஸ்டு 27–ல் கொண்டாடப்பட்டது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணு தலைமைதாங்கி, வெள்ளிவிழா சின்னத்தை ஆதித்தனருக்கு வழங்கினர். அமைச்சர்களும், ம.பொ. சிவ ஞானம், டாக்டர் மு. வரதராசனர், கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியவர்களும் கலந்து கொண்டு, ஆதித்தனரின் பணியைப் பாராட்டினர்கள்.

9. தனிமைச் சிறை

1967-ம் ஆண்டில் நடநத பொதுத் தேர்தலில்தான் தமிழ்நாட்டில் முதல் முறையாக காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டது என்று பலர் நினைப்பார்கள். ஆனால், அதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பே, 1952-ல் நடந்த பொதுத் தேர்தலிலே, தமிழ்நாட்டில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது! அன்று தமிழ்நாட்டில் காங்கிரசைத் தோல்வி அடையச் செய்தவர், ஆதித்தனார்தான்!

அப்பொழுது தமிழ்நாடு ஆந்திராவுடன் சேர்ந்து ஒரே மாநிலமாக இருந்தது. "ஆந்திரகேசரி" டி. பிரகாசம் ஆந்திர மக்களை காங்கிரசுக்கு எதிராக ஒன்றுதிரட்டினர். அதே போல, தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டி, பலமான எதிர்ப்பு சக்தியை ஆதித்தனர் உருவாக்கினர்.

கூட்டணி

தமிழ்நாட்டில் அப்பொழுது எதிர்க்கட்சிகள் சிதறிக் கிடந்தன. "எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒரே அணியில் திரண்டால்தான் காங்கிரசை வீழ்த்த முடியும். இல்லாவிட்டால், எதிர்க்கட்சிகளின் ஓட்டு சிதறி, காங்கிரசுக்கு வெற்றி வாய்ப்பு ஏற்பட்டுவிடும்" என்று ஆதித்தனர் சொன்னர்.

இந்த நோக்கத்துடன், எதிர்க்கட்சிகளை இணைத்து "ஐக்கிய முன்னணி" அமைத்தார். எல்லா எதிர்க்கட்சிகளும் இந்தக் கூட்டணியில் ஒன்று திரண்டன. ஐக்கிய முன்னணியின் செயலாளராக ஆதித்தனரை தேர்ந்தெடுத்தார்கள். காங்கிரஸ் வேட்பாளர்களை எதிர்த்து, கூட்டணி வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணப்பட்டு, மக்கள் தீர்ப்பும் அறிவிக்கப்பட்டது.

கூட்டணிக்கு—166 இடங்கள்.

காங்கிரசுக்கு—153 இடங்கள்.

கவர்னருடன் சந்திப்பு

கூட்டணி சார்பில் வெற்றி பெற்ற 166 பேர்களின் பட்டியலுடன், கூட்டணியின் செயலாளர் என்ற முறையில் கவர்னரை (கவர்னர் ஸ்ரீபிரகாசா) சந்தித்தார், ஆதித்தனர். ஆனால், அமைச்சரவை அமைக்க கூட்டணியை கவர்னர் அனுமதிக்கவில்லை! "கூட்டணி என்பது ஒரு கட்சி அல்ல, பல கட்சிகளின் கூட்டு! கட்சிவாரியாகப் பார்க்கும் பொழுது, காங்கிரஸ்தான் பெரிதாக இருக்கிறது" என்று கூறி, காங்கிரசையே அமைச்சரவை அமைக்கும்படி கவர்னர் அழைத்தார்.

சட்டசபையிலே கூட்டணிக்குத்தான் பெரும்பான்மை பலம். மந்திரிசபை அமைக்கும்படியோ சிறுபான்மைக் கட்சியான காங்கிரசுக்கு அழைப்பு! அப்பொழுதுதான் காங்கிரஸ்காரர்கள் ராஜாஜியின் உதவியை நாடினார்கள். அவர் கூட்டணியில் இருந்த மாணிக்கவேலரை தன் பக்கம் இழுத்து அமைச்சர் பதவி கொடுத்து, தானும் முதலமைச்சராகி, காங்கிரஸ் மந்திரிசபையை அமைத்தார்! ராஜாஜி கொண்டு வந்த கல்வித் திட்டத்தை சட்டசபையில் கூட்டணி தோற்கடித்தது.

அடுத்து 1957–ல் வந்த பொதுத்தேர்தலின் போதும் ஆதித்தனர் கூட்டணி அமைக்க முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனால், தலைவர்கள் இடையே இணக்கமான உடன்பாடு ஏற்படாததால், அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை.

எதிர்ப்பு அணி

1967–ல் நாலாவது பொதுத்தேர்தல் வந்தது.

டெல்லி ஆதிக்கத்தின் ஆணிவேர் காங்கிரஸ் கட்சி தான்—காங்கிரசை உலுக்கினால் டெல்லியே குலுங்கும்—காங்கிரஸ் வீழ்ந்தால்,

டெல்லியின் வீழ்ச்சிக்கு வழி பிறக்கும் என்று ஆதித்தனர் கண்டு கொண்டார். ஆகவே, காங்கிரசுக்கு எதிராக ஒரு மாபெரும் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் பணியில் 1965-ம் ஆண்டிலேயே இறங்கி விட்டார். மாதத்தில் 20 நாள், 25 நாள் என்று வெளியூர்ப்பயணங்களை மேற்கொண்டார்—ஊர், ஊராக சென்றார். காங்கிரசுக்கு எதிரான வர்களையெல்லாம் ஒன்று திரட்டினர். ஓர் எதிர்ப்பு அணியை உருவாக்கி வந்தார்.

எதிர்ப்பு அணியின் மாநாடு நெல்லையில் 1965 அக்டோபர் 2, 3 ஆகிய நாட்களில் நடந்தது. அதில் 15 கட்சிகள் கலந்து கொண்டன. பொதுத்தேர்தலில் எதிர்ப்பு அணி சார்பில் வேட்பாளர்களை நிறுத்த முடிவு எடுக்கப்பட்டது.

பாதுகாப்பு சட்டம்

இந்த எதிர்ப்பு அணி காங்கிரசுக்கு ஓர் அறை கூவலாக அமைந்தது. ஆதித்தனரை வெளியே விட்டு வைத்தால், நம் பதவிக்கு ஆபத்து என்று பதவியிலே இருந்த பக்தவச்சலம் போன்ற காங்கிரஸ்காரர்கள் பயந்தார்கள். அவர்களின் பதவி நாற்காலி அப்பொழுதே ஆட ஆரம்பித்துவிட்டது. ஆகவே, எதிர்ப்பு அணி மாநாடு நடந்த ஐந்தாறு நாளில் 'ஆதித்தனர் வெளியேயிருப்பது தேசத்துக்கே ஆபத்து' என்று கூறி, அவர் மீது இந்திய பாதுகாப்பு சட்டத்தை ஏவி விட்டார்கள்!

1965-ம் ஆண்டு அக்டோபர் 9-ம் நாள் ஆதித்தனர் பாதுகாப்பு சட்டப்படி கைது செய்யப்பட்டார்!

காலை 8-30 மணிக்கு வீட்டில் இருந்தபொழுது அவரைக் கைது செய்ய போலீசார் வந்தார்கள். "கைது செய்ய வந்திருக்கிறோம்" என்று சொன்னர்கள். "மிக்க மகிழ்ச்சி. இது நான் எதிர்பார்த்தது தான். பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொள்ள அரை மணி நேரம் அவகாசம் கொடுக்க முடியுமா?" என்று ஆதித்தனர் கேட்டார். போலீசாரும் அனுமதித்தார்கள். அரை மணி நேரத்துக்குள் பெட்டி



தனிமைச் சிறையில் இருந்து விடுதலையாகி வந்த ஆதித்தனாருக்கு சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. (1966)

பத்திரிகைகளை எடுத்துக்கொண்டு, போலீஸ் லாரியில் ஏறிக் கொண்டார்.

தனிமைச் சிறை

அன்று பகல் முழுவதும் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் ஆதித்தனாரை வைத்திருந்தார்கள்.

அன்று இரவு ரெயில் மூலம் கோவைக்கு அழைத்து செல்லப்பட்டார். மறுநாள் காலையில் கோவையில் தனிமைச் சிறையிலே அடைக்கப்பட்டார்!

ஆம், தனிமைச் சிறைதான்!

மற்ற கைதிகளிடம் இருந்து ஆதித்தனாரை தனியே பிரித்து, தனியாக இரும்பு வேலி போடப்பட்ட பகுதியில் வைக்கப்பட்டார். யாரையும் பார்க்கவோ, எவரோடும் பேசவோ அனுமதிக்கவில்லை.

எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும் ஆதித்தனாருக்கு, தனிமைச் சிறை காலையும் கையையும் கட்டிப் போட்டது போல இருந்தது. இருந்தாலும், "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" என்று மகிழ்ச்சியோடு தனிமைச் சிறையை ஏற்றுக் கொண்டார்.

ஆதித்தனாருக்கு சிறையில் துணையாக இருந்தது, "சிலப்பதிகார" நூல்தான். சிறைக்கு "சிலப்பதிகார"த்தையும் எடுத்து சென்றிருந்தார். அவருக்கு மிகவும் பிடித்தமான நூல், இதுதான். இமயத்திலே தமிழ்க்கொடி பறந்த இணையற்ற வரலாற்றை—தமிழர் கப்பல் உலகெல்லாம் வலம்வந்த பழங்கதையை எடுத்துக்காட்டும் நூல் அல்லவா, சிலப்பதிகாரம்?

சிறைக் கொடுமையால் ஆதித்தனாரின் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. நாளுக்கு நாள் நலிந்து மெலிந்து கொண்டு வந்தார். அவர் எடையில் 26 பவுண்டு குறைந்து விட்டது. இறுதியில் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். நாடித்துடிப்பு தளர்ந்து கொண்டே வந்தது. நாலைந்து துடிப்புக்கு ஒருமுறை

நிற்கவும் செய்தது. ஒரேயடியாக நின்று விடக்கூடாதே என்று அச்சம் அடைந்த காங்கிரஸ் அரசாங்கம், 1966 ஜனவரி 7–ல் ஆதித்தனரை விடுதலை செய்தது.

சிறையில் இருந்து வந்ததுமே, டாக்டரின் "கைதி"யானர். "இன்னும் ஆறு மாதத்துக்கு வெளியூருக்கோ பொதுக் கூட்டங்களுக்கோ போகக்கூடாது" என்று டாக்டர்கள் கண்டிப்பாகத் தடைவிதித்து விட்டார்கள். உடல் நலம் அவ்வளவு தூரம் கெட்டிருந்தது.

சிறை வாசத்தால் அவரது உடல் நலந்தான் கெட்டதே தவிர, அவர் உளத்தின் உறுதியைக் கடுகளவுகூட அசைக்கமுடியவில்லை, காங்கிரஸ் அரசாங்கத்தால். அதற்குப் பதில் அவர் உளம்—நோக்கம் உறுதி அடையவே செய்தது.

ஆதித்தனரை தனிமைச் சிறையில் வைத்தது பற்றி, பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோற்று கழக அரசு ஏற்பட்ட பின்பு,சட்டசபையில் கேள்வி கேட்கப்பட்டது. ஆனல், இது சம்பந்தமான 'பைல்'களை பக்தவச்சலம் எரித்துவிட்டார் என்று முதலமைச்சர் அண்ணு தெரிவித்தார்.

தி. மு. க. வில்

1967 பொதுத்தேர்தலின் போது அண்ணு அமைத்த கூட்டணியில் ஆதித்தனர் பெரும்பங்கு ஏற்ருர். 1965–ல் தி.மு.கழகத்தில் ஆதித்தனர் இணைந்துவிட்டபிறகு, தென் மாவட்டங்களில் ஆக்கப் பணிசெய்ய அண்ணு ஆதித்தனரையே நம்பி பொறுப்புகளை ஒப்படைத்திருந்தார்.

தி. மு. கழகத்திற்கும் ஆதித்தனருக்கும் ஏதோ புதிய உறவு அல்ல இது. 1953–ல் ஆதித்தனர் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியதும், சென்னை ராயபுரத்தில் உள்ள தி. மு. கழக தலைமை நிலையத்தில் ("அறிவகம்") அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தி. மு. கழக தலைமை நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்ட ஒரே தலைவர், ஆதித்தனர்தான்.

1958-ல் 'நாம்-தமிழர்' இயக்கம் மீண்டும் செயல்படத் தொடங்கியதும், தி. மு. கழகத்தின் அதிகாரப்பூர்வமான நாளேடு "தம்நாடு" போலிதேசியத்தைத் தவிர்க்கவும், தமிழ் அரசு காணவும் ஆதித்தனார் அவர்கள் பொறுப்பேற்று பணிபுரிய வேண்டுகிறோம். தமிழகம் அழைக்கிறது! தமிழர் அழைக்கின்றனர்! போலி தேசியத்தை—புதிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பணியாற்ற வருக--வருக என அழைக்கிறோம்'' என்று எழுதியது. எனவே, தி. மு. கழகத்துக்கும் ஆதித்தனாருக்கும் என்றுமே உறவு—கொள்கை உடன்பாடு இருந்துதான் வந்திருக்கிறது.

1939-ம் ஆண்டு முதலே அறிஞர் அண்ணாவுடன் ஆதித்தனாருக்குத் தொடர்பு உண்டு. இதுபற்றி ஆதித்தனார் கூறியிருப்பதாவது:—

1939-ல் நான் மலேயாவில் பாரிஸ்டராகத் தொழில் புரிந்து வந்தபோது, தமிழகத்தில், 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்ற குரல் கிளம்பியதைக் கேட்டேன். அந்த இலட்சியத்துக்குத் தொண்டாற்றும் எண்ணத்தோடு மனைவி மக்களுடன் சென்னை வந்து சேர்ந்தேன்.

சென்னைக்குக் கப்பலில் வந்து இறங்கிய அன்று, திருக்கழுக்குன்றத்தில் நீதிக்கட்சியின் மாநாடு நடைபெற்றது. உடனே, சென்னையிலிருந்து ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு திருக்கழுக்குன்றம் போனேன். தலைவர் பெரியார் அவர்களைச் சந்தித்தேன். அவரிடம் நான் என் கருத்தைத் தெரிவித்தவுடன், மாநாட்டுப் பந்தலுக்குள் அண்ணா அவர்களைச் சுட்டிக் காட்டி "அதோ பந்தலுக்குள் அண்ணாதுரை இருக்கிறார்; அவரிடம் பேசுங்கள்!'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

மாநாடு முடிந்த பிறகு, அண்ணா அவர்களோடு நீண்ட நேரம் உரையாடும் வாய்ப்பு எனக்கு அன்று கிடைத்தது. தமிழ் மொழிக்கு ஒரு மறுமலர்ச்சி தேவை என்ற கருத்தை மிகவும் வலியுறுத்திப் பேசினார்.

தமிழுக்கும் தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் அவருடன் சேர்ந்து தொண்டாற்ற உறுதி கொண்டிருக்கிறேன் என்றும், மலேயா போகும்

விட்டு மீண்டும் திரும்பி வருவேன் என்றும் கூறி அவரிடம் விடை பெற்றுக்கொண்டேன்.

1942-ல் திரும்பி வந்தேன். மதுரையில் 'தமிழன்' என்ற வார இதழைத் தொடங்கினேன். அப்போது அண்ணா அவர்கள் 'தமிழன்' பத்திரிகைக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். அதை இன்றும் நான் வைத்திருக்கிறேன்.

1952-ல் காங்கிரசை எதிர்த்துக் கூட்டணி பெயரால் தேர்தல் களத்தில் இறங்கிய போது, கூட்டணி வெற்றிபெற அண்ணா அவர்கள் உறுதுணை செய்தார்கள். அப்போது தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடவில்லை.

1953-ல், நான் கூட்டணியின் பொதுச் செயலாளனாக இருந்த போது, ரஷியா சென்று வந்தேன். அப்போது அண்ணா அவர்கள் எனக்கு தி. மு. கழகத்தின் தலைமை நிலையத்தின் சார்பில் வரவேற்பு அளித்தார்.

1965-ல் பாதுகாப்புக் கைதியாக என்னை நான்காவது முறையாக சிறைபடுத்தினார்கள். அந்தச் சமயத்தில் ஒருநாள் "பரோலில்" வந்திருந்தேன். பரோலில் இருந்து லீவில் வந்திருந்த நான், கலைஞர் அவர்களை 'மேகலா' அலுவலகத்தில் சந்தித்து, பிரிவினைத் தடைச் சட்டம் வந்துவிட்டதால், கழகத்தில் இரண்டறச் சேர்ந்து விடுவதாகத் தெரிவித்துவிட்டு, மறுநாள் கோவைச் சிறைக்குப் போய்விட்டேன்.

அதன் பிறகு கூட்டணி அமைப்பதில் அறிஞர் அண்ணாவுடனும், கலைஞர் அவர்களுடனும் சேர்ந்து பல திட்டங்களைத் தீட்டினேன்."

("முத்தாரம்" 1969 மார்ச் இதழ்).

முறியடித்தார்

1967 பொதுத் தேர்தலில் நெல்லை மாவட்டத்தை ஆதித்தனார் கையில் அண்ணா ஒப்படைத்தார்.

"எதிர்ப்பு அணிக்கு 12 இடங்களையாவது பிடித்துத் தருவேன்" என்று ஆதித்தனார் உறுதி கூறினர்.

"நாலைந்து இடங்கள் கிடைத்தாலே பெரிய காரியம்" என்று அண்ணா நினைத்தாராம். (தேர்தலுக்குப்பின் ஆதித்தனருக்கு நடந்த பாராட்டு விழாவில் அண்ணாவே இதைத் தெரிவித்தார்.) அண்ணா அப்படி நினைக்கக்காரணம் இருந்தது. முந்திய (1962) பொதுத்தேர்தலில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சட்டசபை இடங்கள் எல்லாவற்றையும் காங்கிரஸ் பிடித்திருந்தது. நூற்றுக்கு நூறும் காங்கிரஸ். இந்தியாவிலேயே திருநெல்வேலி மாவட்டம்தான் காங்கிரஸ் கோட்டையாக பேர் பெற்றிருந்தது. ஆகவே, அந்த மாவட்டத்தில் நாலைந்து இடங்களுக்கு மேல் காங்கிரஸ் இழக்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

ஆனல், தேர்தல் முடிவில்......14 தொகுதிகளிலே காங்கிரஸை வீழ்த்தினர், ஆதித்தனர். நெல்லை மாவட்டத்தில் உள்ள 19 இடங்களில் காங்கிரசுக்குக் கிடைத்தது, ஐந்துதான். எதிர்ப்பு அணி பெற்றதோ 14 இடங்கள்!

1962–ல் நடந்த பொதுத்தேர்தலில் நெல்லை மாவட்டத்தில் எதிர்க்கட்சிகளுக்கு ஓர் இடங்கூட கிடைக்கவில்லை என்பதையும் இத்துடன் இணைத்துப் பார்த்தால்தான், இந்த வெற்றி எவ்வளவு பெரிய வெற்றி என்பது புலனகும்.

1968 ஜூலையில் தென்காசியில் நடந்த இடைத்தேர்தலில் காங்கிரசைவிட 23,000 வாக்கு வித்தியாசத்தில் கழகம் அமோக வெற்றி பெற்றதற்கும் ஆதித்தனர்தான் காரணம் என்பதும் ஊரறிந்த இரகசியமே!

10. அவைத்தலைவர்

கழக அரசின் முதல் சட்டப் பேரவைத் தலைவர் (சபாநாயகர்) ஆக பணியாற்றும்படி ஆதித்தனாரை அறிஞர் அண்ணா கேட்டுக் கொண்டார் என்றால், சட்டசபையில் ஆதித்தனார் பல ஆண்டுகளாகப் பணியாற்றிப் பெற்ற பழுத்த அனுபவங்களே அதற்குக் காரணம்.

1947 முதல் 1953 வரை அவர் தமிழக மேலவை உறுப்பினராக இருந்தார். 1957 முதல் 1962 வரை சட்டசபை உறுப்பினராக பணியாற்றினார். 1964-ல் மீண்டும் மேலவையில் பணியைத் தொடர்ந்தார். 1967-ல் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பேரவை உறுப்பினர்களால் தங்கள் தலைவராகவும் (சபாநாயகராக) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டசபை பணி

1952-ல் நடந்த பொதுத்தேர்தலில்தான் ஆதித்தனார் கூட்டணியை உருவாக்கினார். கூட்டணியின் முழுப் பொறுப்பையும் ஏற்றிருந்ததால், அவர் தேர்தலில் போட்டியிடவில்லை. தேர்தல் முடிவில் மேல்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேல்சபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார்.

அப்பொழுதுதான், ஏழைத் தொழிலாளரை மிகவும் பாதித்த பனைமர வரியை எதிர்த்து, உறுப்பினர் பதவியை விட்டே விலகியது. பிறகு 1957-ல் நடந்த பொதுத்தேர்தலில் சாத்தான்குளத்தில் போட்டியிட்டார். அவரையே மக்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

1964-ல் ஆதித்தனார் மீண்டும் மேல்சபை உறுப்பினரானார்.

சட்டசபையில் ஆதித்தனர் ஆற்றிய பணிகள் பல. "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதல் முதல் சட்டசபையில் ஆதித்தனர் எழுப்பினர்.

தமிழகத்தில் "உயிர்ப்பலி தடைச்சட்டம்" நிறைவேறக் காரணமாக இருந்தவரும் ஆதித்தனர்தான்.

அவைத் தலைவர்

1967–ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருவைகுண்டம் தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டசபைக்கு ஆதித்தனர் போட்டியிட்டார். பெரும் வெற்றியும் பெற்ருர். கழகத்தின் சார்பில் போட்டியிட்ட ஆதித்தனருக்கு 41,828 ஓட்டுகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளருக்கு 22,767 ஓட்டுகளும் கிடைத்தன.

சட்டசபை அனுபவமும், சங்க அனுபவமும் நிறைந்த ஆதித்தனரையே அவைத்தலைவராக தேர்ந்தெடுப்பது என்று தி. மு. கழகம் முடிவு செய்தது.

17–3–67–ல் அவைத்தலைவர் தேர்தல் நடந்தது. ஆதித்தனர் பெயரை கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் எடுத்துச் சொல்ல, பொதுப்பணி அமைச்சர் மு. கருணநிதி தொடுத்துச் சொன்னர்.

ஆதித்தனர் போட்டி இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். ஆனல், கூட்டணியைச் சேர்ந்த சுதந்திரக் கட்சியே ஆதித்தனரை எதிர்த்து கோதண்டராமையாவை நிறுத்தியது. ஆகவே, வாக்குப் பதிவு நடந்தது.

ஆதித்தனர் பெற்றது 153 வாக்குகள், கோதண்டராமையாவுக்குக் கிடைத்ததோ வெறும் 21 வாக்குகள். ஆதித்தனர் மீது பேரவை உறுப்பினர்களுக்குள்ள நம்பிக்கையையே இது காட்டியது.

அண்ணு பாராட்டு

பேரவைத்தலைவராக ஆதித்தனர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அவரைப் பாராட்டி முதலமைச்சர் அண்ணு பேசினர்.

அ—4



அவைத் தலைவர் (சபாநாயகர்) ஆக பதவி ஏற்கிறார், ஆதித்தனார். அருகில் இருப்பவர்கள் இரா. நெடுஞ்செழியனும், கருத்திருமனும். (1967)

"உலகில முறையான ஆட்சிமுறை அமைவதற்கு முன்பே உலகப் மெச்ச தமிழன் ஆட்சி நடத்தியதாக வரலாறு உள்ளது. அதை அறிந்த தங்கள் தலைமையில் இந்த மன்றம் சிறந்து விளங்கும்" என்று அண்ணா கூறினர்.

அண்ணாவின் நம்பிக்கை வீண்போகவில்லை. ஆதித்தனார் அவைத் தலைவராக ஆன நாள்முதல் தமிழக சட்டசபை மேலும் சிறப்படையத் தொடங்கியது. சட்டசபையில் தமிழ்மணம் கமழ்ந்தது. தமிழன்னை உளங்குளிர்ந்தாள்.

சட்டசபை நிகழ்ச்சிகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தலாம் என்று விதி இருந்தது. ஆனால், பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே நிகழ்ச்சிகள் நடந்துவந்தன. அதை மாற்றி தமிழிலேயே நிகழ்ச்சிகளை நடத்தினர், ஆதித்தனர்.

சட்டசபையின் வரவு செலவு திட்ட (பட்ஜெட்டு) கூட்டம் ஜூன் 17-ம் நாள் தொடங்கியது. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற திருக்குறளின் முதலடிகளைக் கூறி கூட்ட நிகழ்ச்சிகளை தொடங்கிவைத்தார். சட்டசபைக் கூட்டம் திருக் குறள் பாடலுடன் தொடங்கியது இதுவே முதல் முறையாகும்.

தமிழ்நாடு

திருக்குறளுடன் தொடங்கிய இந்தக் கூட்டம், "தமிழ் நாடு வாழ்க" என்ற நாட்டு வாழ்த்துடன் முடிந்தது.

இக்கூட்டத் தொடரில்தான் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டும் தீர்மானத்தை முதலமைச்சர் அண்ணா கொண்டுவந்தார். அவை யிலே ஒருமுகமாக அத்தீர்மானம் நிறைவேறியது. தீர்மானம் நிறை வேறியதும், அண்ணா "தமிழ்நாடு" என்று குரல் கொடுக்க, மற்ற உறுப்பினர்கள் "வாழ்க" என்று முழங்க அவைத்தலைவராம் ஆதித்தனரிடம் அண்ணா அனுமதி கேட்டார். அவரும் அக மகிழ்வுடன் அனுமதி அளித்தார். "தமிழ்நாடு வாழ்க" என்று உறுப்பினர்கள் மும்முறை முழங்கினர்கள்.

தமிழ்நாடு சட்டசபையில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். அதிலே ஆதித்தனாரின் பெயரும் இடம் பெறுவது உறுதி. ஏனென்றால், தமிழன்னை தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அவரையே ஒரு கருவியாகக் கொண்டாள்!

கலைஞர் புகழ் மாலை

சென்னை அசோகா ஓட்டலில் அறிஞர் அண்ணா தலைமையில் ஆதித்தனாரைப் பாராட்டி கூட்டம் நடந்தது.

"சட்டசபை நடவடிக்கைகளை இப்பொழுது தமிழிலேயே நடத்தி வருகிறார், ஆதித்தனார். இதைப் பார்க்கும்போது சட்டசபையில் தமிழ்த்தாயே வந்து 'பாடம்' சொல்லிக் கொடுப்பது போல இருக்கிறது" என்று அண்ணா பாராட்டினார்.

"ஆதித்தனார் சபாநாயகராக இருப்பதால், சட்டசபையில் தமிழ் மணம் கமழுகிறது. தமிழ்த்தாய் புன்னகை பூக்கிறாள். தமிழர்கள் உவகை கொள்ளுகிறார்கள்" என்று கலைஞர் மு. கருணாநிதி (தற்போதைய முதலமைச்சர்) புகழ்மாலை சூட்டினார்.

இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், "நான் முன்பு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சட்டசபை நடவடிக்கைகளை தமிழில் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தினேன். அதற்கு ஏற்றாற்போல, இன்று அனைவரும் பாராட்டும் வண்ணம், சட்டசபை நடவடிக்கைகளை தமிழிலே நடத்துகிறார், ஆதித்தனார். இதற்குக் காரணம், அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும், சட்டத்திலும் புலமை பெற்று விளங்குவது தான். தமிழ்த்தாயின் மாண்ட புகழை ஆதித்தனார் சபாநாயகர் ஆனதும் மீட்டுத் தந்துவிட்டார்" என்று கூறினார்.

தமிழ்த்தாய்க்குப் புதிய அணி!

தமிழக சட்டப்பேரவை விதிகள் ஆங்கிலத்தில் இருந்தன. அவற்றை தமிழாக்க சிலர் முயற்சித்தார்கள். ஆனால், முற்றுப்பெறவில்லை.

இப்பணியை ஆதித்தனார் செய்து முடித்தார். மற்றவர்களைப் போல தனக்குக் கீழேயுள்ள அதிகாரிகளை ஏவிவிட்டுவிட்டு, அவர்

சும்மா இருந்தார் இல்லை. அவரே இப்பணியில் நேரடியாக ஈடுபட்டார். இராப்பகலாக தானே விதிகளைத் தமிழாக்கினர். விரைவிலேயே அச்சிட்டும் வெளியிட்டார்.

தமிழக சட்டப் பேரவைக்கு ஆதித்தனர் ஆற்றிய அரும்பணி, இது. என்றென்றும் அவர் பெயரை நிலைக்கச் செய்யும் பெரும்பணி. தமிழ்த் தாய்க்கு சூட்டப்பட்ட புதிய அணியும் ஆகும்.

சட்டப்பேரவை விதிகளை அவர் தமிழ்ப்படுத்திய முறை மொழிபெயர்ப்பாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும். "தமிழ் நாட்டுச் சட்டப்பேரவை நடைமுறை விதிகள்" என்ற இந்நூலின் முன்னுரையில் இதுபற்றி அவர் குறிப்பிட்டு இருப்பதாவது:—

''தமிழ்நாட்டுச் சட்டப்பேரவையின் நடைமுறை விதிகளைத் தமிழாக்கம் செய்யும்போது, இரண்டு குறிக்கோள்களை நினைவில் இறுத்திக் கொண்டேன்.

ஒன்று, ஆங்கிலத்திலுள்ள விதிகளின் கருத்துக்கள் சிதையாதிருக்க வேண்டும். இரண்டாவது, தெளிவாகத் தெரியும் வண்ணம் தன்னிறைவு பெற்று இருத்தல் வேண்டும்.

புதிய புதிய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த நேரிட்டதால், அவற்றுக்கு நேரான ஆங்கிலச் சொற்களை அடைப்புக்குள் எழுத வேண்டியதாயிற்று. நாளடைவில் இவ்வடைப்புகளை நீக்கிவிட முடியும்.

எவரும் எளிதில் புரிந்து கொள்ளும் பொருட்டு, நீண்ட நாட்களாக வழக்கத்தில் உள்ள ''மசோதா'', ''நிதி'', ''விவாதம்'' போன்ற சில சொற்களை ''சட்டமூலம்'', ''பணம்'', சொல்லாட்டம்'' என்று மாற்றாமல் விட்டுவைத்திருக்கிறேன்''

அண்ணாவின் அணிந்துரை

இந்நூலுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அணிந்துரை அளித்திருக்கிறார்கள். அந்த உரையின் மூலமே இந்நூலின் சிறப்பை நாம் தெரிந்து கொள்ளலாம்.

அண்ணாவின் அணிந்துரை, இது:

"பொறுப்பேற்றுக் கொண்ட சில நாட்களுக்குள்

அமைச்சராகப் பதவி ஏற்கிறார், ஆதித்தனார். (1969)

ளாகவே, நமது சட்டப் பேரவைத் தலைவர், நண்பர் சி.பா. ஆதித்தனார், சட்ட முறைகளிலே பெற்றுள்ள நுண்ணறிவுத் திறனையும், தமிழார்வத்தையும் அனைவரும் உணர்ந்து உவகை கொண்டிடச் செய்துள்ளார்

தமிழ் ஆட்சி மொழியாகிவிட்ட பிறகும் சட்டப் பேரவைக்கான விதி முறைகள் ஆங்கில மொழியிலேயே இருந்து வருவது பொருந்தாது என்பதனை உணர்ந்த சட்டப் பேரவைத் தலைவர், தமிழிலேயே விதிமுறைகள் இருந்திட வேண்டுமென விழைந்தார்.

வேறு பலர், அந்த அளவோடு தமது பணி முடிந்ததாகக் கருதிக் கொண்டு, அதன் தொடர்பான பணிகளை மற்றவரிடம் தந்து விடுவர்.

ஆனால், சி. பா. ஆதித்தனார், தமிழார்வ மிகுதி காரணமாகத் தாமே அந்தப் பணியினையும் மேற்கொண்டு, விதி முறைகளைத் தமிழாக்கம் செய்தளித்துள்ளார்கள்

தமிழாக்கம் மிகுந்த கவனத்துடனும், தரம் நிரம்பியதாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் தமிழாக்கம் தரப்பட்டுள்ள பாங்கு, பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

ஆர்வத்துடன் இப்பணியினை மேற்கொண்ட நமது நண்பர் இந்த நூலின் மூலம், சட்டப் பேரவையின் நடவடிக்கைகளில் தமிழ் மணம் கமழ்ந்திட வழி வகுத்தளித்துள்ளார்.

தமிழாக்கம் காரணமாக, நடைமுறையில் ஏதேனும் தடுமாற்ற உணர்வு ஏற்பட்டுவிடக்கூடும் என்பதனைஎண்ணி தேவைப்படும் இடங்களில், பழக்கமான சொற்களை அடைப்புக்குள் தந்துள்ளார்.

இந்நூலின் துணைகொண்டு, சில திங்களுக்குள்ளாகவே தமிழ் மொழியிலேயே, சட்டப்பேரவை நடவடிக்கைகள் முழுவதையும் நடாத்திட இயலும் என்ற நம்பிக்கை பெறுகிறோம்.

சட்டப் பேரவைத் தலைவராக அமர்ந்த நாள் தொட்டே, சி. பா. ஆதித்தனார், எல்லா நடவடிக்கைகளும்

விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருந்திடுவதே நேர்த்தியான நிலையினையும் மற்றையோரின் நன்மதிப்பையும் தந்திடும் என்பதனை உணர்ந்ததுடன், நம்மையும் உணர்ந்திடும் படியாகச் செய்துள்ளனர்.

மரபும், மாண்பும் செம்மையாக இருந்திட வேண்டுமென்ற நோக்குடன் அவர்கள், நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதனை உணரும் எவரும் அகமகிழ்ச்சி பெற்றிடாதிருக்க இயலாது.

தமிழாக்க நூல் தருவதற்கு முன்பிருந்தே அவர்கள், பெரிதும் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தி, தமிழால் முடியும் என்பதனை மெய்ப்பித்துக் காட்டி வந்துள்ளார்.

இனி, மற்றவர்களும் தமிழால் முடியும் என்பதனை ஏற்று நடத்திடும் நிலையை இந்நூல் தந்திடும் என்பது உறுதி.

தமிழகத்திலே மலர்ந்துவரும் புதிய நிலைக்கு இந்நூல் பெருந்துணையாக இருந்திடும்.

நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க முறையில், அவர்கள் சட்டப் பேரவையிலே நின்று,

"அகர முத

எழுத்தெல்லாம்......"

என்ற குறளினை முழக்கிவிட்டு நடவடிக்கைகளைத் துவக்கிடக் காணும்போது புதிய தமிழகத்திலே அடி எடுத்து வைக்கின்றோம் என்ற இனிய உணர்வு கொள்கின்றோம்.

தமிழகத்தில் தமிழ் அறிந்தோர் ஆட்சி வேண்டும் என்று அன்று பாவேந்தர் கூறினார்; இன்று அந்நிலை வடிவமெடுத்துள்ளது. அதற்கு வண்ணம் கிடைத்திட, இந்நூல் பெரிதும் பயன்படும்.

நீண்ட நாட்களாக நிலவிவந்த குறையினைக் களைந்தெறியும் முறையிலே கிடைத்துள்ள இந்த தமிழாக்கம் தந்துள்ள சி.பா. ஆதித்தனருக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

அவருடைய இந்தச் சீரிய பணி குறித்து என் பாராட்டு தலையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

வெளியீட்டுவிழா

இந்நூலின் வெளியீட்டுவிழா சென்னை "ராஜாஜி மண்டப"த்தில் நடந்தது. அறிஞர் அண்ணாவே தலைமை தாங்கி நூலை வெளியிட்டார்.

அப்பொழுதும் ஆதித்தனாரின் அரும்பணியை அண்ணா வாயாரப் புகழ்ந்தார். அவர் கூறினர்:

"சட்டப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் ஆதித்தனார் சட்டமன்ற நடவடிக்கைகளில் மட்டுமின்றி வெளியிலும் தமிழார்வம் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

சட்டப் பேரவை தொடங்கிய முதல்நாள் கூட்டத்திலேயே அவர் உள்ளே நுழைந்து இருக்கையிலே அமர்ந்ததும், "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறட்பாவைக் கூறி சபையைத் தொடங்கியது உள்ளபடியே நமக்கெல்லாம் மெத்த மகிழ்ச்சியாக இருந்தது.

சட்டப் பேரவைக்கு இன்றைக்கு நமக்குக் கட்டுக் கோப்பான சொற்கள் கிடைத்திருக்கின்றன. அதற்கு உறுதுணையாக இருக்கும் வகையில் ஆதித்தனார் அவர்கள் இந்த ஏட்டைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் 'பார் அட் லா' படித்தவர்கள்; மலேசிய நாட்டில் பெரும் வழக்கறிஞராகப் பணியாற்றியவர்கள்; ஆங்கிலப் புலமை மிக்கவர்கள். அவரது எளிய தோற்றத்தைக் காணும் யாருமே இதை நம்ப மாட்டார்கள்.

ஆதித்தனார் அவர்கள் மலேசியாவில் இருந்து திரும்பி வந்ததும் திருக்கழுக்குன்ற மாநாட்டில் என்னைச் சந்தித்தபோதே அவரது தமிழ் ஆர்வத்தை நான் புரிந்து கொண்டேன். 'தமிழன்' என்ற வார ஏட்டை தாமே தயார் செய்த காகிதத்தில் அச்சிட்டு வெளியிட்டார்கள். அந்தத் தமிழார்வம்தான் இன்று ஒரு நல்ல ஏட்டை (சட்டப்

பேரவை தமிழ் விதிகளை) வெளியிடத் துணை புரிந்தது என்று நான் கருதுகிறேன்"

அப்பொழுது பொதுப்பணி அமைச்சராக இருந்த மு. கருணாநிதியும் இந்த விழாவிலே கலந்து கொண்டார். "இந்த நாளில் விருந்தும் தந்து, தமிழ் மேலும் மேலும் வளர மருந்தும் அளிக்கும் வகையில் ஆதித்தனர் இந்நூலை ஆக்கித்தந்திருக்கிறார்" என்று அவர் பாராட்டினர்.

இவ்விழாவில் கே. விநாயகம் (காங்கிரஸ்), பீர்முகமது (முஸ்லிம் லீக்), டி.எஸ். ஆதிமூலம் (சுதந்திரா), ஏ. பாலசுப்பிரமணியம் (கம்யூனிஸ்டு) முதலிய அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டு ஆதித்தனரின் பணியைப் பாராட்டினர்கள்.

புரட்சித் தீர்மானம்

தமிழக வரலாற்றில் இடம் பெறக்கூடிய மற்ருெரு நிகழ்ச்சியும் ஆதித்தனரை பேரவைத் தலைவராகக் கொண்டுதான் நடந்தது. 1968 ஜனவரி 23-ந் தேதி தமிழக சட்டசபையில் இந்தி ஒழிப்புத் திர்மானம் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சிதான், அது.

டெல்லி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழித் திர்மானத்துக்கு எதிரானது,இந்தத் தீர்மானம். இந்தியப் பாராளுமன்றத்துக்கு எதிராக மாநில சட்டசபை ஒன்றில் திர்மானம் நிறைவேற்றப்பட்டதும் இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவையாகும்.

இத்திர்மானத்தை நிறைவேற்றுவதற்கு என்றே ஜனவரி 23-ந் தேதி சட்டசபையின் அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. அன்றையக் கூட்டத்தை "தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவருக்கு" என்ற திருக்குறட்பாவுடன் ஆதித்தனர் தொடங்கியது மிகப் பொருத்தமாக இருந்தது.

"ஆதித்தனர் அவர்கள் சட்டப்பேரவையிலே தலைவராக வீற்றிருந்த நேரத்தில் குறள் மணமும் கமழ்ந்தது, தமிழ் மணமும் பெருக்கெடுத்தது. சட்டமன்ற விதிகளை தமிழிலே ஆக்கித்தந்த பெருமை நம்முடைய ஆதித்தனருக்கு மட்டுமே உண்டு" என்று "தினத்தந்தி"

வெள்ளிவிழாவிலே கலந்து கொண்ட முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி புகழ்ந்தார்.

அமைச்சர்

அரசியலில் நேரடியாக ஈடுபட்டு முழு நேரத் தொண்டாற்று வதற்காக 1968 ஆகஸ்டு 12-ல் சபாநாயகர் பதவியை விட்டு ஆதித்த னார் விலகினார்.

1969 பிப்ரவரி 3-ல் அறிஞர் அண்ணா காலமாகவே, கலைஞர் மு. கருணாநிதியை முதலமைச்சராகக் கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்றது.

பிப்ரவரி 13-ல் கூட்டுறவு அமைச்சராக ஆதித்தனார் நியமிக்கப் பட்டார்.

கூட்டுறவுத்துறை அவருக்கு மிகவும் பிடித்தமானது. இதுபற்றி அவரே கூறியிருப்பதாவது:—

"கூட்டுறவுத்துறையில் எனக்கு எப்பொழுதுமே நம்பிக்கையும் ஆர்வமும் உண்டு. கூட்டுறவை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் வறுமையைப் போக்கிவிட முடியும் என்று அழுத்தமாகக் கூறுகிற வன், நான்.

'வாடித் தொழிலின்றி
 வறுமையால் சாவதெல்லாம்
கூடித் தொழில் செய்யாக்
 குற்றத்தால் தோழர்களே'

என்னும் பாவேந்தரின் கவிதை, என் நினைவில் எப்போதுமே இருந்து வருகிறது.

தமிழக அரசுக்கு நல்ல வருமானத்தை கூட்டுறவுத்துறையின் மூலமும் போக்கு வரத்து துறையின் மூலமும் எட்ட முடியும் என் பது என் நம்பிக்கை.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
 வகுத்தலும் வல்லது அரசு"

என்கிற இந்த குறட்பாவின் கருத்துக்கள் என் மனதில் அந்த நம் பிக்கையை வலுப்படுத்துகின்றன."

11. ஆதித்தனார்

திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கிழக்குக் கோடியில் கடற்கரை ஓரம் அமைந்துள்ள காயாமொழி என்ற ஊர்தான் ஆதித்தனாரின் சொந்த ஊர்.

ஆதித்தர்கள் எல்லோருமே காயாமொழிக்காரர்கள்தாம். அங்கே கிழக்கு வீடு, மேற்கு வீடு, வடக்கு வீடு என்று சொல்லப்படும் மூன்று குடும்பங்களாக அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அனைவருமே அண்ணன் தம்பிகள்தாம்.

பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்குப்பின் திருநெல்வேலியில் பாளையக்காரர்களின் ஆட்சி ஏற்பட்டது. மற்ற பாளையக்காரர்கள் எல்லாம் கட்டபொம்மனுக்கு அடங்கிய காலத்தில், அவனையே அடக்கி ஆண்டவர்கள், ஆதித்தர்கள். கட்டபொம்மனை அவர்கள் வெற்றிகண்ட எல்லையை இன்றும் காயாமொழிக்கு வடக்கேயுள்ள ஓர் ஓடையின் வடகரையில் காணலாம். கட்டபொம்மன் அமைத்த மண்டபங்களை காயாமொழிக்கு வடக்கேதான் காணமுடியும்.

திருச்செந்தூர் முருகன் கோவிலைக் கட்டுவதற்கு ஆதித்தர்கள் பெரிதும் உதவினார்கள். ஆதித்தர் நிலத்தில் விளைந்த எள்ளுச் செடி வெடித்து விழுந்த எள்ளு முளைத்து அதனை விற்று கட்டப்பட்டது, திருச்செந்தூர் தேர் என்று சொல்லுவார்கள். இன்றும்கூட ஆதித்தர் குடும்பத்தைச் சேர்ந்த யாராவது ஒருவர் முதல் முதல் வடக்கயிற்றைப் பிடித்து இழுத்த பிறகுதான் திருச்செந்தூர் தேரோட்டம் தொடங்கும்.

ஆதவன் தோன்றினான்

இவ்வளவு சீரும் சிறப்பும், பேரும் புகழும் நிறைந்த ஆதித்தர் பரம்பரையில்தான் நம் ஆதித்தனாரும் 1905-ம் ஆண்டு செப்டம்பர்

27-ம் நாள் பிறந்தார். அவர் பிறந்தது செல்வாக்கு நிறைந்த குடும்பம் என்றாலும் செல்வம் செழித்த குடும்பம் அல்ல. நடுத்தரமானதே.

தந்தையார், வழக்கறிஞரான சிவந்தி ஆதித்தர். அன்னையார் பெயர் கனகம் அம்மையார்.

ஆதித்தர் குடும்பப் பெண்கள் 'கோஷா' முறையைக் கடைப் பிடித்து வந்தவர்கள். அவர்கள் குடும்பத்தில் முதல் முதல் ரெயில் பிரயாணம் செய்த பெண், கனகம் அம்மையார்தான்!

தங்கள் மழலைச் செல்வனுக்கு பாலசுப்பிரமணியம் என்று பெயர் சூட்டினர்கள். ("சிவந்தி பாலசுப்பிரமணிய ஆதித்தனர்" என்பதையே சி. பா. ஆதித்தனர் என்று சுருக்கி சொல்லுகிறோம்.) இவருடன் பிறந்தவர்கள் தமையனர் ஒருவர், தம்பி ஒருவர், தங்கைகள் இருவர்.

ஆதித்தனரின் தந்தையார் திருவைகுண்டத்தில் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தார். ஆதித்தனரின் கல்வியும் அங்கேயேதான் தொடங்கியது. நாலாவது பிறந்தநாள் அன்று பள்ளிக்கு அனுப்பப் பட்டார்.

அரை வகுப்பு என்று சொல்லப்படும் பாலர் வகுப்பில் சேர்க்கப் பட்டார். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி, படிப்பில் மிகவும் சிறந்து விளங்கினர். ஆகவே, பத்தாம் நாளே மேல் வகுப் புக்கு (முதல் வகுப்புக்கு) அனுப்பப்பட்டார்! அவருடைய அண்ண னும் அப்பொழுது முதல் வகுப்பில்தான் படித்துக் கொண்டு இருந் தார்!

பாலர் வகுப்பில் ஒரு மாணவன் இரண்டு மூன்று ஆண்டுகளாகப் படித்து வந்தான். ஆதித்தனரை பாலர் வகுப்பில் இருந்து முதல் வகுப்புக்கு அனுப்புமுன், அந்த மாணவனை ஆசிரியர் கண்டித்தார். "அவன் முகத்திலே காறித்துப்பு! அப்பொழுதுதான் புத்தி வரும்" என்று ஆதித்தனரிடம் ஆசிரியர் சொன்னர். குரு சொல் தட்டாத ஆதித்தனர், அப்படியே அந்த மாணவன் முகத்தில் காறித்துப்பி

விட்டார்! இந்நிகழ்ச்சி ஊருக்குள் ஒரு பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

கல்லூரி வாழ்க்கை

ஆதித்தனுர் 11-ம் வகுப்புக்கு (எஸ். எஸ். எல். சி.) வந்த பொழுது, போதிய வயது இல்லை என்று தேர்வு எழுத அனுமதிக்கப் படவில்லை. ஓராண்டு கழித்துத்தான் எழுதினுர். கணக்கில் நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்கினுர்.

திருவைகுண்டத்தில் உயர்நிலைக் கல்வி முடிந்ததும், திருச்சி ஜோசப் கல்லூரியில் கல்லூரிப் படிப்பை தொடர்ந்தார். கல்லூரியில் பி. ஏ. முதல் ஆண்டுத் தேர்வில் அவரே முதல் மாணவராகத் தேறினுர் என்பது கல்லூரி அறிக்கையில் காணப்படுகிறது.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற வள்ளுவர் வாக்குப் படி, எதிலுமே முதன்மையாக இருக்க வேண்டும் என்பது ஆதித்தனுரின் ஆசை—ஆவல். இளமையிலேயே அவருக்கு இந்த எண்ணம் உண்டு. படிப்பில் முதன்மையாக விளங்கினுர்.

கல்லூரியில் படித்த காலத்தில் கால்பந்தாட்டம் நன்ருக ஆடுவார். சேக்ஸ்பியரின் "ஜூலியஸ் சீசர்" நாடகத்தை கல்லூரியில் நடத்தினுர். பழைய புத்தகக் கடைகளுக்கு சென்று புத்தகங்கள் வாங்கி வந்து படிப்பதுதான் அவரது பொழுது போக்கு. கல்லூரியில் இலக்கிய சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார்.

லண்டன் பயணம்

திருச்சியில் எம். ஏ. முடித்ததும், லண்டனுக்கு சென்று பாரிஸ்டர் ஆக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஆகவே, 1927-ல் லண்டனுக்குக் கப்பல் ஏறினுர். அங்கு சட்டமும், பொருளாதாரமும் படித்தார்.

லண்டனில் இந்திய மாணவர் சங்கத்தில் தங்கியிருந்தார். படித்துக் கொண்டே பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரை, செய்திக் கடிதங்கள் எழுதி, படிப்பு செலவுக்கு பணம் சம்பாதித்துக் கொண்டார்!! சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சீனிவாசன், டெல்லி மந்திரியாக இருந்த சேலம் எஸ். வி. இராமசாமி, இலங்கையில் இந்தியத் தூதராக

யும், இந்திய அரசாங்கத்தின் 'காமன்வெல்த்' செயலாளராகவும் இருந்த கண்டேவியா ஆகியவர்கள் ஆதித்தனுருடன் லண்டனில் படித்தவர்கள். லண்டனில் சதுரங்க ஆட்டத்தில் சிறந்து விளங்கினர்.

லண்டனில் டாக்டர் பெர்த் என்ற பேராசிரியர் இருந்தார். இவர் டாக்டர் ஜி. யு. போப் எழுதிய "ஒப்பு இலக்கணம்" என்ற நூலைப் பதிப்பித்தவர். இவர், தமிழ்ச் சொற்களை எப்படி உச்சரிக்க வேண்டும் என்று வெள்ளைக்காரர்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்காக, ஆதித்தனுரைக் கொண்டு தமிழ்ச் சொற்களை உச்சரிக்கச் சொல்லி, அதை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொண்டார்.

வாழ்க்கைத் துணைவி

1933–ல் பாரிஸ்டர் பட்டத்தை பெற்றுக்கொண்டு, சிங்கப்பூருக்கு வந்தார். அப்பொழுது சிங்கப்பூரில் ஓ. இராமசாமி நாடார் என்ற செல்வந்தர் வாழ்ந்து வந்தார். இவரது சொந்த ஊர் இராமனுத புரம் மாவட்டம் கோட்டையூரை அடுத்த மணச்சை. சிறு வயது முதலே சிங்கப்பூரில் இருந்து வந்ததால், "சிங்கப்பூர் இராமசாமி நாடார்" என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது. சிங்கப்பூர் இந்தியர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். இவருடைய மூத்தமகள் கோவிந்தம்மாள். செட்டிநாட்டு வழக்கப்படி கோவிந்தம்மாளை 'ஆச்சி அம்மாள்' என்றும் அழைப்பது உண்டு. 1933 செப்டம்பர் 1–ல் கோவிந்தம்மாளை ஆதித்தனுர் திருமணம் செய்து கொண்டார்.

இத்திருமணத்தில் பெருந்தொகை வரதட்சிணை கொடுக்கப் பட்டது என்று சிலர் கூறுவார்கள். உண்மை என்னவென்றால், இத் திருமணத்தில் வரதட்சிணையே கொடுக்கப்படவில்லை!

சிங்கப்பூரிலேயே திருமணத்தை முடித்துக் கொண்டு, தமிழ் நாட்டுக்கு 'மறுவீடு' வந்தார்கள். அப்பொழுது சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டு, சென்னையில் கொஞ்சநாள் தொழில் நடத்தினர்.

சிங்கப்பூர் பாரிஸ்டர்

ஆதித்தனுரின் ஆசையெல்லாம் பத்திரிகை நடத்த வேண்டும் என்பதுதான். ஆனல், அதற்கு அவரிடம் வசதியில்லை.

அக்காலத்தில் பாரிஸ்டர்களின் தங்கச் சுரங்கமாக சிங்கப்பூர் இருந்தது. ஆகவே, சிங்கப்பூரில் போய் தொழில் நடத்தி, பத்திரிகை தொடங்க பணம் திரட்ட ஆதித்தனர் விரும்பினர். ஆனல், மீண்டும் மகனை கடல் கடந்து அனுப்ப வயதான தந்தையார் விரும்பவில்லை. எனவே, தந்தையாரிடங்கூட சொல்லாமல், 1934–ல் ஆதித்தனர் சிங்கப்பூருக்குப் பயணமானர்.

சிங்கப்பூரில், வெள்ளைக்கார பாரிஸ்டர்களாக சேர்ந்து நடத்திய "பாட்டன் பெர்க்" என்ற வழக்கறிஞர் நிறுவனத்தில் நாலில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் சேர்ந்தார். பிறகு அதிலிருந்து விலகி, தனியாகத் தொழில் நடத்தினர். மளமளவென்று தொழில் வளர்ந்தது. சிங்கப்பூரில் ஆதித்தனருக்கு வந்த வழக்குகளைப் போல அதிக வழக்கு வேறு எந்த தனிப்பட்ட பாரிஸ்டருக்கும் வரவில்லை. சிங்கப்பூரிலேயே மிகப் பெரிய வழக்கறிஞராக விளங்கினர். "சிங்கப்பூர் பாரிஸ்டர்" என்ற பட்டப்பெயரே ஏற்பட்டது. தந்தையும் வழக்கறிஞர்; தனயனும் வழக்கறிஞர். ஆகவே, ஆதித்தனர் சிறந்த வழக்கறிஞராக விளங்கியதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? சிங்கப்பூர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் (Bar Council) நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்தலுக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவ்விதம் வெற்றி பெற்ற முதல் வெள்ளையர் அல்லாதவர் ஆதித்தனர்தான்!

அந்நாளில் சிங்கப்பூரில் வெள்ளைக்காரர்களே பாரிஸ்டர்களாக இருந்தார்கள். அவர்கள் இரவு முழுவதும் குடித்துக் கூத்தாடிவிட்டு, காலையில் கோர்ட்டில் வந்து நின்று கொண்டுதான் வழக்குக்கட்டுகளையே படித்துப் பார்ப்பார்கள்! ஆனல், ஆதித்தனரோ இரவு முழுவதும் வழக்குக்கட்டுகளையும், சட்டப் புத்தகங்களையும் புரட்டிப் புரட்டிப் பார்த்து, நன்ருக தயார் செய்து கொள்ளுவார். இவ்விதம் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது,தொழிலில் வெற்றி பெற துணையாக இருந்தது.

சிங்கப்பூரில் பாரிஸ்டராக இருந்த 8 ஆண்டுகளில், பல நூற்றுக்கணக்கான வழக்குகளில் வாதாடினர். ஆனல், ஒரு வழக்கில்கூட தோல்வி அடையவில்லை என்பது ஆச்சரியப்படத்தக்கது என்ருலும்,

அதுதான் உண்மை என்பது சிங்கப்பூர் கோர்ட்டுகளில் உள்ள "ரிகார்டு"களில் இருந்து தெரிய வருகிறது.

வருமானமும் இலட்சக்கணக்கில் வந்தது. போர் தொடங்குவதற்கு முன்பு 'சோமப்பா வழக்கு' என்று சொல்லப்படும் ஒரு வழக்கை ஆதித்தனர் நடத்தி வந்தார். போர் ஒய்ந்தபின்பு, ஆதித்தனரின் அண்ணன் எஸ். டி. ஆதித்தன் சென்று, அந்த ஒரு வழக்குக்காரர்களிடம் மட்டும் "கொடுப்பதைக் கொடுங்கள்" என்று தீர்த்து வாங்கிய தொகைமட்டும் ரூ. 60,000!.

தமிழர் சீர்திருத்த சங்கம்

சிங்கப்பூரில் தன் சொந்தத் தொழிலை மட்டும் பார்க்காமல், சிங்கப்பூர் தமிழர்களுக்கும் தொண்டு செய்தார். சிங்கப்பூரிலேயே ஒரு தமிழ் நாளிதழ் தொடங்க முயற்சி செய்தார். ஆனால், மாமனர் விரும்பாததால் அந்த முயற்சியைக் கைவிட்டார். சிங்கப்பூரில் இன்றும் நல்ல பெயருடன் விளங்கும் "தமிழ்முரசு" பத்திரிகையை தொடங்க துணை செய்தார்; அதற்கு ஆதரவு அளித்து ஆலோசனைகள் வழங்கி வந்தார்.

1930-ல் ஈ.வெ.ரா. பெரியார் மலாயா நாட்டுக்கு சுற்றுப்பயணம் சென்ற பொழுது, சிங்கப்பூரில் இவர்கள் வீட்டில்தான் தங்கியிருந்தார். அதைத் தொடர்ந்து, சிங்கப்பூரிலே "தமிழர் சீர்திருத்த சங்கம்" அமைக்கப்பட்டது. இந்த சங்கம் இன்றும் இருக்கிறது. இதன் புரவலராக (தர்மகர்த்தாவாக) ஆதித்தனரே சமீபகாலம் வரை இருந்தார்.

தமிழகம் திரும்புதல்

உலகப் போர் மூண்டு ஜப்பான்காரனின் குண்டு சிங்கப்பூரிலே விழ ஆரம்பித்ததும், அங்கே வாழ்ந்த தமிழர்கள் தாயகத்திற்குக் கிளம்பினர்கள். இராமசாமி நாடார் குடும்பத்தவரும் தமிழகத்துக்குத் திரும்பினர்கள். ஆதித்தனரும் மனைவி மக்களை தமிழகத்துக்கு அனுப்பி வைத்தா

பேரன் பேத்திகளுக்கு பிறந்தநாள் 'கேக்' தருகிறார், ஆதித்தனார். குழந்தைகளுக்கு பின்னே நிற்பவர் ஆதித்தனாரின் மனைவி கோவிந்தம்மாள். (1968)

ஜப்பான்காரன் கையிலே சிங்கப்பூர் சிக்கும்வரை அங்கேயேயிருந்த ஆதித்தனுர், சிங்கப்பூரிலேயிருந்து பிப்ரவரி 4-ந் தேதி கிளம்பி, பல துன்பங்களுக்கு இடையே இரண்டு மாதங்கள் கழித்து ஏப்ரல் 2-ம் நாள்தான் இலங்கையை வந்து அடைந்தார். இதற்கு இடையே ஆதித்தனுரைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்காமல் போகவே, அவர் ஜப்பான்காரன் குண்டுக்கு பலியாகிவிட்டார் என்றே குடும்பத்தினர் நினைத்து விட்டார்கள். இந்த நினைப்பிலேயே அவருடைய தந்தை சிவந்தி ஆதித்தரும் படுத்த படுக்கையாகிவிட்டார். ஏப்ரல் 4-ம் நாள் ஆதித்தனுர் தமிழகத்தை அடைந்தார். அவரைக் கடைசியாக ஒருமுறை பார்த்துவிட்டுத்தான், ஏப்ரல் 6-ல் தந்தையார் கண்களை மூடினுர்.

ஆதித்தனுர் என்று தமிழ் நாட்டுக்குத் திரும்பினுரோ, அன்றே அவரது வாழ்க்கை தமிழக வரலாற்றுடன் ஒன்றிவிட்டது.

உலகப் பயணம்

1953-ல் உலக சமாதானக் குழுவின் மாநாடு வியன்னுவில் நடந்தது. தமிழகத்தின் பிரதிநிதியாக அதில் ஆதித்தனுர் கலந்து கொண்டார்.

நேதாஜி சுபாஷ்சந்திர போஸ்சின் வெள்ளைக்கார மனைவியும், மகள் அனிதாவும் அங்கேதான் வாழ்கிறுர்கள். அவர்களை ஆதித்தனுர் சந்தித்துப் பேசினுர். தமிழ்நாட்டுக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அனிதா பின்னுல் தமிழ்நாட்டுக்கு வந்து போனுர்.

வியன்னுவில் இருந்து ரஷியா முதலிய நாடுகளுக்கு சென்றுவிட்டு தமிழகம் திரும்பினுர்.

1956-ல் உலகப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். ஏப்ரலில் அமெரிக்காவுக்கு சென்றுர். பல நாடுகளையும் சுற்றி அவற்றின் முன்னேற்றத்தைக் கண்கூடாகக் கண்டுவிட்டு, ஜப்பான், இந்தோனேசியா மலேயா வழியாக ஜூலையில் தமிழகத்துக்குத் திரும்பினுர்

'ஒரு மொழி, ஒரு நாடு' என்ற கொள்கை இந்த சுற்றுப்பயணத்தினல் அவருக்கு மேலும் உறுதியடைந்தது.

மணிவிழா

தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் அரும்பணியாற்றி வரும் ஆதித்தனருக்கு, 1964-ல் தமிழ் மக்கள் மணிவிழா எடுத்தனர். சென்னையில் நடந்த இவ்விழாவுக்கு பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை தலைமைதாங்கினர். "தமிழர் நாடு" உருவம் பொறித்த வெள்ளிக் கேடயத்தை ஆதித்தனருக்கு வழங்கினர், இன்றைய முதலமைச்சர் மு. கருணாநிதி.

"தமிழன் தலை நிமிர வேண்டும்—நல்ல மக்களாட்சி வளர வேண்டும் என்பதில் ஆவலும் அக்கரையும் கொண்டவர், ஆதித்தனர். "பூம்புகார்" திரைப்படத்தில் நான் தமிழ்—தமிழ் என்று முப்பதுமுறை எழுதியதற்காக அவர் காட்டிய மகிழ்ச்சி என்னை புல்லரிக்க வைத்தது. ஆதித்தனருக்கு இந்தி ஆதிக்கம் கட்டோடு பிடிக்காது. அத்தகைய கனல்—தமிழ்க்கனல் இருப்பதால்தான் அவரைப்பாராட்டுகிறோம்" என்று கலைஞர் மு. கருணாநிதி புகழ்மாலை சூட்டினர்.

சொந்த உழைப்பினல் உயர்ந்தவர், ஆதித்தனர். 'சிறுகக்கட்டி பெருக வாழ்' என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர். இன்றைக்கும் சாதாரண நாலு முழ கைத்தறி வேட்டியே கட்டும் எளிய வாழ்க்கையை கைக்கொண்டவர். எளிய தோற்றம் என்றாலும் இனிய தோற்றம். எப்பொழுதும் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டேயிருக்கும். காட்சிக்கு எளியவர்; கடுஞ்சொல் இலர்.

குறளே வழிகாட்டி

தொழில்துறையில், "இதனை இதனல் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்ற குறளை அப்படியே கடைப்பிடிப்பவர் ஆதித்தனர். எந்தக் காரியத்தையும் செய்ய விரும்பினல், அதை முடிக்கும் திறமையுள்ளவர்களை நம்பி ஒப்படைப்பார்.

தவறுகளைக் கண்டிக்கும்பொழுது நெருப்பாக நிற்பார்! அதுவும்

தனது அன்புக்கு உரியவர்—முன்னுக்குவர வாய்ப்பு உள்ளவர் தவறு செய்துவிட்டால், ஆதித்தனரால் தாங்கிக்கொள்ளவே முடியாது. கடுமையாகக் கண்டிப்பார்—வைரத்தைப் பட்டைதீட்டுவது போல! ஆனால், அந்தக் கண்டிப்பு அப்போதைக்குத்தான். சற்று நேரத்தில் அதையெல்லாம் மறந்துவிட்டு, வழக்கமான இனிய கனிந்த அன்பையே காட்டுவார்.

ஆதித்தனரை நேரில் காணும்பொழுது யாராவது மறைந்து கொண்டால்—அவர் கண்ணில் படாமல் ஒளிந்தால்—தலைமறைவாக இருந்தால், "அவன் ஏதோ தவறு செய்துவிட்டான். ஆகவேதான், ஒளிகிறன், மறைகிறன்" என்று சொல்லிவிடுவார். அது சரியாகவும் இருக்கும்.

கல்லூரி

கல்வி வளர்ச்சியிலே அதிக ஆர்வங்கொண்ட ஆதித்தனர் திருச்செந்தூரில், கலைமகளும் அலைமகளும் கலந்து மகிழும் வண்ணம், கடற்கரையிலே கல்லூரி ஒன்றை நிறுவி நடத்தி வருகிறர்.

பதினறு பிள்ளைகள் பெற்ற பெருங் குடும்பங்களுக்கு பரிசுகள் வழங்கி மகிழ்ந்த ஆதித்தனருக்கு, இரண்டு மகன்களும், ஒரு மகளும் இருக்கிறர்கள். ஆதித்தனர் முழுக்க முழுக்க அரசியலிலேயே இறங்கிவிட, மகன்களும், மருமகனும் அவர் காட்டிய வழியைப் பின்பற்றி பத்திரிகைகளை நடத்தி வருகிறர்கள்.

12. முத்து மாலை

ஆதித்தனரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய சில நிகழ்ச்சிகளைத் தொகுத்து ஒரு மாலை போலத் தொடுத்து அளித்திருக்கிறோம்.

மாண்பு பெற்ற சட்டசபை

ஆதித்தனர் சபாநாயகர் ஆனபின்பு தமிழக சட்டசபை உண்மையிலேயே "மாண்பு" பெற்றிருக்கிறது என்று அறிஞர் அண்ணு கூறினர்.

"முன்பெல்லாம் 'கனம் மந்திரி அவர்களே, கனம் அங்கத்தினர் 'அவர்களே' என்று அழைத்துத்தான் பேச வேண்டும். மாதவனையும், சாதிக்பாட்சாவையும் 'கனம் அமைச்சர்களே' என்று அழைக்கும் பொழுது எனக்கு வேடிக்கையாயிருக்கும். ஆதித்தனர் அந்தக் 'கன'த்தை மாற்றினர். 'மாண்புமிகு அமைச்சர்' என்று அழைக்க ஏற்பாடு செய்தார். சட்டசபையும் மாண்பு பெற்றது." என்று ஆதித்தனரின் பாராட்டு விழாவில் அண்ணு கூறினர்.

தோசையைத் திருப்பு!

1967–ல் நடந்த பொதுத் தேர்தலில் "ஆட்சியை மாற்ற வேண்டும்" என்ற கோரிக்கையை மிக அழகாக—வேடிக்கையாக எடுத்துச் சொன்னர், ஆதித்தனர்.

தேர்தல் கூட்டங்களின் முடிவில் அவர் இவ்வாறு கூறினர்: "கூட்டம் முடிந்து நீங்கள் வீட்டுக்குப் போனதும், "ஆதித்தனர் என்ன சொன்னர்?" என்று வீட்டிலுள்ள பெண்கள் கேட்பார்கள். 'இருபது ஆண்டுகளாக கருகிக் கொண்டிருக்கும் தோசையை திருப்பிப் போடச் சொன்னர்' என்று நீங்கள் கூறுங்கள்!, அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள்.

அமைச்சருக்கு பரிசு

ஆதித்தனரிடம் பரிசு பெற்றவர், கல்வி அமைச்சராக இருந்த இரா. நெடுஞ்செழியன்!

தமிழ்ப் பெரியார் திரு. வி.க.வின் மணிவிழா சென்னையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பேச்சுப் போட்டியும் நடந்தது. அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நெடுஞ்செழியன் படித்துக் கொண்டு இருந்தார். அவரும் இப்போட்டியில் கலந்து கொண்டார். அவருக்குத்தான் முதல் பரிசு—வெள்ளிக்கோப்பை. பரிசு வழங்கியவர், ஆதித்தனர்!

விழாவுக்குப்பின் ஆதித்தனரை நெடுஞ்செழியன் சந்தித்துப் பேசினர். அப்பொழுது அவரை தனது "தமிழன்" வார இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி ஆதித்தனர் அழைத்தார். ஆனல், வேறு வேலைகள் இருந்ததால், அந்தப் பொறுப்பை நெடுஞ்செழியன் ஏற்றுக்கொள்ளவில்லை.

துடிப்பு வேண்டும்

ஆதித்தனர் எப்பொழுதுமே துடிதுடிப்பானவர். எந்த செயலிலும் துடிப்பு வேண்டும் என்பார். எழுத்து—பேச்சு எதிலுமே அவருக்கு துடிப்பு தேவை. 'குபீர்' என்று சிரித்தார்கள், 'திடீர்' என்று தீப்பற்றியது என்றெல்லாம் எழுதுவது எழுத்துக்கு ஒரு துடிப்பு கொடுக்கத்தான். "தினத்தந்தி உயிர்த்துடிப்புள்ள பத்திரிகையாக இருக்க வேண்டும்" என்று அவர் கூறுவது உண்டு.

ஒருநாள் "தெய்வபலம்" என்ற திரைப்படம் பார்க்க ஆதித்தனர் சென்றர். அந்தப் படத்தில் ஒரு நடிகர் ஒவ்வொரு காட்சியிலும் 'செத்தவன் கையில் வெற்றிலை பாக்கு' கொடுத்தது போல, ஆடி அசைந்து நடித்தார். ஆதித்தனருக்குப் பொறுக்க முடியவில்லை. "நடிப்பில் துடிப்பேயில்லையே" என்று அவர் துடித்துக் கொண்டிருந்தார்! சிறிது நேரத்தில், "சே......கொஞ்சங்கூட துடிப்பே இல்லையே" என்று பாதிப்படத்திலேயே எழுந்து வந்துவிட்டார்!

சட்டசபையில் திருக்குறள்

கருத்திருமன் (காங்):—ஆளும் கட்சியினரின் பிரசாரம் ஜெர்மனியிலே கோயபல்ஸ் செய்த பிரசாரம் போலிருக்கிறது.

சீனிவாசன் (தி. மு. க.):—கோயபல்ஸ் பிரசாரம் என்று அவை யிலே கூறலாமா?

அவைத்தலைவர் ஆதித்தனார்:—அப்படிக் கூறக்கூடாது என்பதற்கான மேற்கோள் நான் பார்த்தவரை இல்லை. ஆனால், நாம் இங்கு வள்ளுவர் படத்தை மாட்டியிருக்கிறோம். அவர், 'இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக்காய் கவர்ந்தற்று' என்று கூறியிருப்பதால், குற்றம் சாட்டினாலும் சொற்கள் இனியவையாக இருக்கட்டும் (கைதட்டல்) (27–6–67 சட்டசபை நிகழ்ச்சி)

பவுன் பரிசு

ஆதித்தனாருக்கு நல்ல ஓவியப்பயிற்சி உண்டு. "தினத்தந்தி"யில் பணியாற்றிய ஓவியர்களை அவரே உருவாக்கினார். புதிய ஓவியர்களை வேலைக்கு அமர்த்தி, ஓராண்டு காலம் பயிற்சி அளிப்பார். அதன்பின் தான் அவர்களின் படம் பத்திரிகையில் வெளிவரும்.

1958–ல் பவுன் (தங்கம்) விலை ஏறிக்கொண்டு வந்தபொழுது அதுபற்றிய செய்தியை வெளியிட பவுன் படம் தேவைப்பட்டது. அப்பொழுது "தினத்தந்தி"யில் பணியாற்றிய கணேசன் என்ற ஓவியரை அழைத்து பவுன் படம் வரைந்து கொண்டுவரச் சொன்னார். ஓவியர் வரைந்து வந்த படம் சரியாக இல்லை.

"நீங்கள் பவுன் பார்த்திருக்கிறீர்களா?" என்று ஆதித்தனார் கேட்டார். ஓவியர் "இல்லை" என்றார்.

உடனே ஆதித்தனார் ஒரு நூறுரூபாய் நோட்டை எடுத்து ஓவியரிடம் கொடுத்தார். "ஒரு பவுன் வாங்கிவந்து, அதைப் பார்த்து வரையுங்கள்" என்று சொன்னார்.

ஓவியரும் நகைக்கடைக்குப் போய் பவுன் வாங்கிவந்து, அதைப் பார்த்து படம் வரைந்தார். படத்தையும் பவுனையும் ஆதித்தனாரிடம் கொண்டுவந்து காட்டினார்.

"படம் சரியாக இருக்கிறது" என்று பாராட்டிய ஆதித்தனார், "அந்தப் பவுனை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!" என்று ஓவியருக்கே பரிசாகக் கொடுத்துவிட்டார்!

மக்கள் தமிழ்

தமிழ் வளர வேண்டுமானால் அது மக்கள் தமிழாக இருக்க வேண்டும் என்று கூறுவார். ஆதித்தனார் அவர் பேரவைத்தலைவராக

ஆனபின்பு பேரவை நடவடிக்கைகளிலும் மக்கள் தமிழையே பின் பற்றினர்.

"மக்கள் எப்படிப் பேசுகிறார்களோ, அப்படியே எழுத வேண்டும். அதுதான் மக்கள் தமிழ்—உயிருள்ள தமிழ். அந்தத்தமிழ்தான் வாழும்—வளரும். 'நான்மாடக்கூடலை நண்ணினேம்' என்று எழுதுவது புலவர் தமிழ். 'மதுரைக்குப் போனேன்' என்பதுதான் மக்கள் தமிழ்." என்று அவர் கூறுவது உண்டு.

ஒருநாள் சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகளை தயாரித்துக் கொண்டு வந்த செயலாளர், "பிரேரபணை" என்று எழுதியிருந்தார். 'அப்படியென்றால் என்ன அருத்தம்?' என்று ஆதித்தனர் கேட்டார். "தீர்மானம்" என்று செயலாளர் சொன்னர். "அப்படியே எழுதி விடலாமே" என்றார், ஆதித்தனர். செயலாளரும் "தீர்மானம்" என்று திருத்திக் கொண்டு வந்தார். "இதுதான் மக்கள் தமிழ்." என்று ஆதித்தனர் சுட்டிக் காட்டினர்.

கவிஞர் வாக்கு

தமிழகக் கவிஞர்கள் மாநாடு இராசிபுரத்தில் நடந்தது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமைதாங்கினர். ஆதித்தனர் சொற்பொழி வாற்றினர்.

ஆதித்தனர் பேசிவிட்டு அமர்ந்ததும், பாரதிதாசன் எழுந்தார். "தமிழுக்காகவே தன்னை முழுவதும் தியாகம் செய்துவிட்டவர், ஆதித்தனர். அவர் மிகப் பெரிய தமிழ்த்தலைவராக அமரப்போகிறார். அப்பொழுது தமிழ் தனிச்சிறப்புடன் ஆட்சி செய்யும்" என்று கூறினர்.

கவிஞரின் வாக்குப்படி ஆதித்தனர் தலைமையில் தமிழக சட்ட சபையில் தமிழ் தனிச் சிறப்போடு ஆட்சி செய்யத் தொடங்கியது.

மதுரை முரசு

ஆதித்தனர் தொடங்கிய முதல் பத்திரிகை "மதுரை முரசு"தான்.

1942-ல் மதுரையில் தொடங்கப்பட்ட இந்த "மதுரை முரசு" வாரம் இருமுறை (திங்கட்கிழமையும்,புதன்கிழமையும்) வெளிவந்தது. 4 பக்கம். விலை காலணுதான்!

"சிப்பாய்" என்ற பெயரில் ஆதித்தனர் எழுதிய யுத்தவிமர்சனக்

கட்டுரைகள் வெளிவந்தன. "மதுரை முரசு"சில் முதல் பக்கத்தில் யுத்தச் செய்திகளும் (அப்பொழுது உலகப் பெரும்போர் நடந்து கொண்டு இருந்தது.), இரண்டாம் பக்கத்தில் "சிப்பா"யின் கட்டுரையும் வெளி வந்தன. தமிழ், மக்கள் குறை முதலிய எட்டு அம்சங்கள் (பகுதிகள்) இந்த நாலு பக்க பத்திரிகையில் இடம் பெற்றன!

இப்பத்திரிகையைப் படிக்கும் மக்கள் என்ன பேசிக் கொள்ளு கிறார்கள் என்பதை நேரடியாகக் காண, வீட்டில் இருந்து அலுவலகத் துக்கு (சுமார் 4 மைல் தூரம்) பஸ்சிலேயே ஆதித்தனார் பயணம் செய்தார். மக்கள் குறைகூறும்படி ஏதாவது இருந்தால், அதைத் திருத்திக் கொண்டார்.

திருக்குறள் தாடி!

இளந்தாடி வைத்திருக்கும் ஆதித்தனார், சேலத்தில் நடந்த ஒரு திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்டார். "மழித்தலும் நீட்டலும் வேண்டா என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். நீங்கள் ஏன் தாடி வளர்க் கிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு ஆதித்தனார் சொன்னார்: "நான் வளர்ப்பதுதான் திருக் குறள் தாடி. வள்ளுவர் 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' என்று தான் சொன்னார். நான் தாடியை ஒட்ட மழிக்கவும் இல்லை; நீண்டு வளர்க்கவும் இல்லை. இரண்டுக்கும் இடையே குட்டையாக வைத்திருக் கிறேன்."

பாரதிதாசன் பாடல்

பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் என்றால், ஆதித்தனாருக்கு மிகவும் ஆசை. பாரதிதாசன் இயற்றிய தமிழக விடுதலையை வலியுறுத்தும் வீரக்கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து "தாயின் மேல் ஆணை" என்ற பெயரில் தனி நூலாகவே வெளியிட்டார்.

பாரதிதாசன் பாடல்களிலும் கீழ்க்கண்ட வரிகள்தாம் ஆதித்த னாரை மிகவும் கவர்ந்தவை. வாய்ப்புக் கிடைக்கும் இடத்தில் எல்லாம் இப்பாடலை உணர்ச்சி பொங்கக் கூறுவார். "வீரங்கொள் கூட்டம்!", "நொறுக்கினார் முதுகெலும்பை", "ஆட்டும் சுட்டு விரல் கண்டே" என்ற சொற்களை சொல்லும்பொழுது உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடும்.

இதோ அந்த வரிகள்:—

வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்று
உடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொணாதே
எனவையம் கலங்கக்கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்நாளோ?

தறுக்கினால் பிறதேசத்தார்
தமிழன்பால்—என்—நாட்டான்பால்
வெறுப்புறும் குற்றஞ்செய்தார்
ஆதலால் விரைந்தன்னாரை
நொறுக்கினார் முதுகெலும்பைத்
தமிழர்கள் என்ற சேதி
குறித்தசொல்கேட்டு இன்பத்தில்
குதிக்கும்நாள் எந்நாளோ?

நாட்டும்சீர்த் தமிழன் இந்த
நானில மாயம்கண்டு
காட்டும் வழியில் சென்று
கதிபெற வேண்டும் என்றே
ஆட்டும்சுட் டுவிரல் கண்டே
ஆடிற்று வையம் என்று
கேட்டுநான் இன்ப ஊற்றுக்
கேணியில் குளிப்பதெந்நாள்?"

மழை காலத்திலும்!

ஆதித்தனாருக்கு நகைச்சுவை என்றால் மிகவும் பிடிக்கும். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று அடிக்கடி சொல்லுவார். வேடிக்கை விளையாட்டுகளில் விருப்பம் அதிகம்.

ஒருநாள் ஓர் அரைப்பைத்தியம் 'திடீர்' என்று அவரது அறைக்குள் நுழைந்துவிட்டது. "நான்தான் மன்னர்! இந்தப் பூமியை ஆள என்னை ஏசுநாதர் அனுப்பியிருக்கிறார்" என்று கூறினார்.

"அப்படியா, வாருங்கள், வாருங்கள்" என்று ராஜ உபசாரத் துடன் மிக மரியாதையாக அவரை ஆதித்தனுர் வரவேற்ருர். ஆசிரியரின் அறைக்கு அழைத்து சென்று, "இவர்தான் இந்தப் பூமியை ஆளும் மன்னர். கர்த்தரே இவரை அனுப்பி வைத்திருக்கிருர்" என்று அங்கேயிருந்த எல்லோருக்கும் அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். பிறகு சிறிது நேரம் அவருடன் வேடிக்கையாக பேசிக் கொண்டு இருந்துவிட்டு, அனுப்பிவைத்துவிட்டார்.

சில மாதங்கள் கழித்து அந்த அரைப்பைத்தியம் மீண்டும் வந் தது. "நானே பூமியை ஆளும் மன்னர்" என்று சொல்லிக் கொண்டே.

"வெயில்காலத்தில் வந்தீர்கள், சரி. மழைகாலத்திலும் வந்தால் எப்படி?" என்று சொல்லி, வந்த வழியே அவரை அனுப்பிவைத்தார், ஆதித்தனுர்

நம்பமாட்டார்கள்!

எளிய தோற்றத்தைக்கண்டு யாரையும் குறைவாக மதிப்பிடக் கூடாது என்பதற்கு ஆதித்தனுரை உதாரணமாகக் காட்டினுர், அண்ணு.

"சாதாரண நாலுமுழ வேட்டியும், தொழதொழ சட்டையும் அணிந்திருக்கும் ஆதித்தனுரைப் பார்க்கும் யாரும் அவர் பாரிஸ்டர் படித்தவர்—சிங்கப்பூரில் பெரும் வழக்கறிஞராகத் திகழ்ந்தவர்—ஆங்கிலத்தில் புலமை நிறைந்தவர் என்று சொன்னுல் நம்பமாட்டார் கள். அவ்வளவு எளிய தோற்றம் உடையவர் ஆதித்தனுர்" என்று, "தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதிகள்" என்ற நூலை வெளியிட்டுப் பேசுகையில் அண்ணு குறிப்பிட்டார்

தமிழ்வாணனுக்கு பேட்டி

"கல்கண்டு" ஆசிரியர் தமிழ்வாணனுக்கு ஆதித்தனுர் அளித்த பேட்டி மிகவும் சுவையானது.இப்பேட்டி 31–8–61"கல்கண்டு"இதழில் வெளிவந்தது. இதோ அந்தப் பேட்டி!

"தமிழ்நாட்டுத் தலைவர்களிலே நீங்கள்தான் மிக உயரமானவர்" என்று ஆதித்தனுரிடம் நான் (தமிழ்வாணன்) சொன்னேன்.

"தாமிரவருணி ஆற்றுக்குத் தெற்கே கட்டபொம்மனின் ஆதிக்கம் பரவவிடாது எதிர்த்துத் தடுத்த ஆதித்தன் பரம்பரையில் எட்டாவது

னாக வந்தவன், நான். அதனால்தான் மிக உயரமாக வளர்ந்திருக்கிறேன்" என்று சொன்னார், தலைவர், ஆதித்தனார்.

பாரதத்திலேயே வெள்ளையரை முதல் முதல் எதிர்த்த பழம் பெரும் தலைவன் புலித்தேவனின் உயரம் ஆறடி. தமிழர் தலைவர் ஆதித்தனாரும் ஆறடி.

ஆதித்தனார், மண்குடிசையில் வாழும் ஓர் ஏழைத் தமிழன் போல இருக்கிறார். முன்பு சி. பா. ஆதித்தன் எப்படி இருந்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், தமிழர் தலைவர் ஆதித்தனார் இப்போது இப்படி இருக்கிறார்:

மிகச் சாதாரண துணியில் தைக்கப்பட்ட தொள தொள ஜிப்பா. மிக மலிவான விலையுள்ள நாலுமுழ கைத்தறி வேட்டி. கையில் சாதாரண குமாஸ்தா கட்டிக் கொள்ளும் மலிவான கடிகாரம். தாடையிலே வெண்மையும் கறுமையும் கலந்த விடுதலை வீரனின் குறுந்தாடி. தலையிலே வரலாறு காண விழையும் வழுக்கை. நினைவிலே தனித்த தமிழ்நாடு. நெஞ்சிலே தமிழர் முன்னேற்றம். வாயிலே தமிழ். கண்களிலே கனிவு. இவரே இன்றைய ஆதித்தனார்.

நான்:— 'சுதந்திரத் தமிழ்நாடு' என்ற எண்ணம் எப்படி ஐயா உங்களுக்கு உண்டாயிற்று?

ஆதித்தனார்:— ஒரு மொழிக்கு ஒரு நாடு என்பதுதான் இயற்கை. பொருத்தம். ஒரு தலைக்கு ஒரு வீடு என்பதுதான் தமிழர் வரலாறு. ஒரு மொழிக்கு ஒரு நாடு—ஒரு தலைக்கு ஒரு வீடு என்பதுதான் மனித இனத்துக்குப் பொருத்தமான அரசியல் அமைப்பு. ஒரு குருவியின் வீட்டிலே வந்து மற்றொரு குருவி முட்டையிடுவதில்லையே! ஒரு புலியின் குகையில் மற்றொரு புலி வந்து குட்டி போடுவதில்லையே! இயற்கை இது. இதனால் தமிழர்களுக்குத் தனி நாடு—அது தமிழ்நாடு என்பது என் எண்ணத்திலே ஊறிவிட்டது. இங்கிலாந்தில் நான் பார்அட்லாவுக்குப் படிக்கும் பொழுது, இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகளையெல்லாம் பார்த்தேன். அவைகளெல்லாம் ஒரு மொழிக்கு ஒரு நாடு என்ற அடிப்படையில்தானே அமைந்திருக்கின்றன!

நான்:— இயக்கத்திற்கு 'நாம்—தமிழர்' என்று ஏன் ஐயா பெயர் வைத்தீர்கள்?

ஆதித்தனார்:— உலகத்தில் எனக்குப் பிடித்த தலைவர் டிவேலரா. ஐரிஷ் நாட்டு மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட இந்த ஐரிஷ் நாட்டுத் தலைவரை என் இதயம் என்றும் மறக்காது. அவர் 'நாம் ஐரிஷ் மக்கள்' என்ற பெயரில் ஓர் இயக்கத்தைத் தொடங்கி, அயர்லாந்தை ஒரு சுதந்திர நாடாக்கிவிட்டார். 'நாம் ஐரிஷ் மக்கள்' என்பதற்கு ஐரிஷ் மொழியில் "சின்பின்" என்று பெயர். இதுதான் அவர்களுடைய இயக்கத்தின் பெயராக இருந்தது. இதைப் போல, 'நாம் தமிழ் மக்கள்' என்ற அடிப்படையில் 'நாம்—தமிழர்' இயக்கம் உருவாயிற்று.

நான்:— மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்வதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

ஆதித்தனார்:— முழுமையாக ஆதரிக்கிறேன். மாணவர்கள் கலந்து கொள்ளாமல் விடுதலை இயக்கம் நடந்ததாக எந்த நாட்டு வரலாற்றிலும் கிடையாதே!

நான்:— சுதந்திரத் தமிழ்நாடு உங்கள் காலத்திலேயே கிடைத்துவிடும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

ஆதித்தனார்:— என் வாழ்நாளில் சுதந்திரத் தமிழ்நாடு கிடைக்குமா, கிடைக்காதா என்று நான் கவலைப்படவில்லை. என் வாழ்நாளில் சுதந்திரத் தமிழ்நாடு என்ற விதையை முறையுடன் ஊன்றிவிட்டேன். இதுபோதும் எனக்கு. இனி இந்த விதை செடியாகி, மரமாகி, தமிழர்களுக்குத் தவறாது பலன் தந்தே தீரும்.

நான்:— நீங்கள் பார்அட்லா படித்தீர்களே, அதைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டீர்களே!

ஆதித்தனார்:— யார் சொன்னது? சிங்கப்பூரில் எட்டு ஆண்டுகள் பார்அட்லா தொழில் செய்தேன். இங்கு வந்தபின், எனக்கு அந்தத் தொழில் பிடிக்காது போய்விட்டது. அதனால்தான் எனக்குப் பிடித்த தொழிலான பத்திரிகைத் தொழிலைத் தொடங்கினேன்.

நான்:— நீங்கள் ஏன் தாடி வளர்க்கிறீர்கள்?

ஆதித்தனார்:— நான் வளர்க்கவில்லை. அதுவாக வளர்கிறது!! சுதந்திரப் போராட்டத்துக்காக என்னை முழுக்க முழுக்க நான் அர்ப் பணித்து விட்டதால், அலங்காரத்திலும் முகக் கவர்ச்சியிலும் என் உளம் செல்லவில்லை. அதனால் தாடி வளர்ந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டேன்.

நான்:— உங்களுக்குப் பிடித்த அகில இந்தியத் தலைவர் யார்?

ஆதித்தனார்:— என்னைப் பொறுத்த அளவில், மிக மேலான ஓர் இந்தியத் தலைவரைவிட மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் ஒரு தமிழனே உயர்ந்தவன். இது நேருவுக்கும் பொருந்தக்கூடியதே!

நான்:— அரசியலில் கலைஞர்கள் பங்கு கொள்வதை நீங்கள் விரும்புகிறீர்களா?

ஆதித்தனார்:— விரும்புகிறேன். கலைத்துறையையும், அதில் பங்கு கொள்ளும் கலைஞர்களையும் நான் ஆதரித்தே வந்திருக்கிறேன். கலைத் துறையும், கலைஞர்களும் தமிழுக்காக, தமிழர் நலனுக்காக பாடுபட வேண்டும்.

நான்:— 'நாம்—தமிழர்' என்ற பாட்டை நான் கேட்டதில்லை நீங்கள் பாடுங்கள்; நாங்கள் கேட்கிறோம்

தலைவர் ஆதித்தனார் கம்பீரமாகப் பாடினார். ஆறடி உயரமுள்ள அவர் இந்தப் பாட்டை எழுந்து நின்று பாடியபோது அமைதியாகத் தூங்கும் மனமும் ஆவேசங்கொண்டு எழும்.

ஆதித்தனார்:— நான் பாடி முடித்துவிட்டேன். நீங்கள் பாடுங்கள் பார்ப்போம்.

எழுந்தேன். நின்றேன். பாடினேன்.

நான் பாடி முடித்ததும், தலைவர் எழுந்து அப்படியே என்னை இறுகத் தழுவிக் கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் நிறைந்திருந் தது. தமிழர்களைப்பற்றி யார் பாடினாலும், உணர்ச்சி வசப்பட்டு தன்னையே மறந்தவராகி விடுகிறார், தலைவர்.

*

கோலத் தமிழ்மொழி வாழப் பிறந்தவன்!

கவிஞர் காசி. ஆனந்தம்

நீதிக்கு முன்பு நிலைக்களனாகி
நிலைத்த தமிழ்க் குலத்தை
வீதிக்குள் விட்டு விரட்டியடித்த
விதியை நினைந் தெழுந்தான்!
மோதிக் குலைத்த வடதிசையாளர்
முகத்தில் அறைந்து வைத்தான்!
ஆதித்த வேங்கை அவன் புகழ்
ஆயிரம் ஆயிரம் என்றுரைப்பேன்!

இந்திய தேசப்படத்தை நெருப்பினில்
இட்டுப் பொசுக்கி வைத்தான்!
செந்தமிழ் நாடு தனியரசோடு
சிறக்க வழி அமைத்தான்!
சொந்த மொழிவெறி கொண்டு சிறைமதில்
சூழத்தவம் கிடந்தான்!
தந்தை எனும் புகழ் மைந்தனை ஈன்ற நம்
தாயை வணங்குவோம்!

காலத்தினால் வந்த ஆதித்தனார்க்கொரு
காவியம் செய்து வைப்பாய்!
நீலத்திரை கடல் போலக் கிளம்பிய
நெஞ்சனை வாழ்த்தி வைப்போம்!
வேலொத்த சொற்கள் முழக்கும்
அருந்தமிழ் வீரன் வழி நடப்போம்!
கோலத்தமிழ் மொழி வாழப் பிறந்தவன்
கொள்கைக் குயிர் கொடுப்போம்!

ஆதித்தர் வாழ்க!

கவிஞர் தமிழ் ஒளி

சோதித்துத் தெளிந்து தேர்ந்து
"சுடர்" என்ற கொள்கையேந்தி
ஆதித்தர் தோன்று கின்றார்
அவர் வழி வாழ்க நன்றே!

வெற்றிப் பொற்சுடரையேந்தி
வேங்கையும் வில்லும் மீனும்
ஒற்றிய கொடி இவ்வையத்
துயர்த்துக தமிழரெல்லாம்!

தமிழர்க்கே ஆட்சி யென்றும்
தருக்கர்க்கு வீழ்ச்சி யென்றும்
இமிழ்கடல் உலகங் காண
இனத்தவர் எழுக மன்றே!

முரசொன்று முழங்க வெற்றி
முன் வந்து வழங்க ஆளும்
அரசொன்று அமைக்க வந்தார்
ஆதித்தர் வாழ்க நன்றே!

Edited and published by B. Sivanthi Adityan, 1, Rundalls Road, Madras-7 and printed by himself at Sun Press, 2-16, Mount Road, Madras-2.